★

# உதயன்



23

www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 27 கதிர் 362 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 07 வியாழக்கிழமை (22/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# பேச்சை மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை மீது மேலும் அழுத்தம்

## நெருக்கடிகள் தொடர்பிலான சர்வதேசக் குழு நீண்ட அறிக்கை; கூட்டமைப்புக்கும் யோசனை

கொழும்பு, நவம்பர் 22

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை மீண்டும் விரைவில் தொடங்குமாறு மேற்கு நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் நெருக்கடிகள் தொடர்பான சர்வதேசக் குழு தனது நீண்ட அறிக்கை ஒன்றில் கூட்டமைப்புடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசு தொடர்ந்தும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் தமிழ்த் தலைவர்களுடன் பேச மறுத்துவருகிறது எனக் குற்றஞ்சாட்டியுள்ள அந்தக் குழு, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகத்தை அகற்றி, வடக்கு மாகாணசபைத் தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் உடனடியாக நடத்தி, அதன் நிறைவேற்றின் அடிப்படையில் உரிய அதிகாரப்பகிர்வுக்கு வழிசெய்ய வேண்டும் என்றும் சர்வதேசக் குழுவின் அறிக்கை கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கு சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## கசாப்பின் தூக்கு நிறைவேறியது



கொழும்பு, நவ.22

இந்தியாவின் மும்பைத் தாக்குதலாளி பயங்கரவாதி அஜ்மல் கசாப் நேற்றுக் காலை 7.30 மணியளவில் தூக்கிலிடப்பட்டார்.

அவருடைய கருணை மனுவை இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் நிராகரித்திருந்தார். அஜ்மல் கசாப்பின் மனுவை மத்திய உள்துறை அமைச்சும் ஏற்கனவே நிராகரித்திருந்தது. இதையடுத்து அவருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

(விரிவான செய்தி 8 ஆம் பக்கத்தில்)

## மேலும் 100 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, நவ.22

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களில் மேலும் ஒரு தொகுதியினர் நாடு கடத்தப்பட்டனர். இவர்கள் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஆஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படும் ஒன்பதாவது குழு இதுவாகும். 100 பேர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர் என அந்த நாட்டு குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

திருப்பி அனுப்பப்பட்ட 100 பேரும் ஆண்கள் எனவும், இம்மாதத்தில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் இதுவே அதிகளவானோர் அடங்கிய குழுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய விமானப்

பார்க்க பக்கம் 4

## யாழ்ப்பாணத்தில் படைகள் குறைக்கப்படுவது அவசியம்

### செக். குழுவினரிடம் யாழ். ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.22

யாழ். மாவட்டத்தில் உள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நேற்று தம்மை சந்தித்த செக்குடியரசு நாடாளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகாரக் குழுவின் தலைவருமான டேவிட் வோட் நஸ்காவிடம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அதிகளவு இராணுவத்தினர் இருக்கின்றனர் என்று கூறப்படுவது பிழையானது என யாழ்.

பார்க்க பக்கம் 4

## மாவீரர் தினத்துக்கு இலங்கை அனுமதி வழங்க வேண்டும்

கொழும்பு, நவ.22

ஈழ விடுதலைப் போராட்டத்தில் மரணித்த போராளிகளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27 ஆம் திகதியை மாவீரர் தினமாக தமிழ் மக்கள் அனுஷ்டித்து வந்தனர். போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்த நிகழ்வுகள் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளிலேயே இடம்பெறுகின்றன. இந்த நிலையில் மாவீரர்தினம் போன்ற நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் கடைப்பிடிக்க இலங்கை அரசு இடமளிக்க வேண்டும் என்று நெருக்கடிகள் தொடர்பிலான சர்வதேசக் குழு வலியுறுத்தியுள்ளது.

போரில் பலியான தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் நினைவாக அவர்களின் குடும்பங்களால் மேற்கொள்ளப்படும் நினைவுதின நிகழ்வுகளுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று நெருக்கடிகள் தொடர்பிலான சர்வதேசக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மாவீரர் வாரம் நேற்று

பார்க்க பக்கம் 21

## மோதலுக்காக பாடசாலைகளை பயன்படுத்தியது இராணுவம்

கொழும்பு ,நவ.22

பாடசாலைகளை ஆயுதப்படையினரின் தேவைகளுக்குப் பயன்படுத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 2012 ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அனைத்துலக மதிப்பீட்டு அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

ஐ.நா. முகவர் அமைப்பு

பார்க்க பக்கம் 21

## நீதியரசர் விவகாரம் குறித்து அமெரிக்கா கடும் விசனம்

### நீதியமைச்சரிடமே நேரில் தெரிவித்தார் ஜரிஸ்

கொழும்பு, நவ.22

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை குறித்து அமெரிக்க அரசு தொடர்ந்தும் விசனமடைந்துள்ளது என்று அந்த நாட்டின் இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளரான அல்லிஸா ஜரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர், தமிழ்க் கூட்டமைப்பினர் மற்றும் அரசின் உயர்மட்ட அதிகாரிகளுடன் சந்திப்பை மேற்கொண்ட நிலையில் நேற்றுமுன்தினம் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போதே, பிரதம நீதியரசர் விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். அத்துடன், வடக்கில்

பார்க்க பக்கம் 21

## 2014இல் ஆட்சி மாற்றம் ஐ.தே.க. வியூகம் வகுப்பு

### ரணில் தெரிவிப்பு; ஊடகங்கள் மீதும் பாய்ச்சல்

கொழும்பு, நவ.22

2014ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகத் தாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றார் என நம்பிக்கை வெளியிட்டார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. அதற்கான வியூகங்களைக் கையாள எமது தொடர்பாடல் வலையமைப்பை விரிவுபடுத்தி அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையக

பார்க்க பக்கம் 4

## வேலணையில் இளைஞர் அதிகாலையில் கடத்தல்

யாழ்ப்பாணம், நவ.22

வேலணை வங்களாவடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வேலணைப் பொலிஸிடமும் இது தொடர்பான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சதாசிவம் லோகேஸ்வரன் (வயது-34) என்ற இளைஞரே கடத்தப்பட்டவராவார்.

லோகேஸ்வரன் வங்களாவடியில் உள்ள அவரது வீட்டில் தாயாருடன் வசிக்கிறார். நேற்று புதன்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் அவரது வீட்டுக்கு இருவர் மோட்டார் சைக்கிளில் சென்றனர். அவரது பெயரைக் கூறி அழைத்துள்ளனர்.

பார்க்க பக்கம் 21

## நிரந்தர நியமனம் இன்றேல் தொடர் மறியல் போராட்டம்

### வன்னித் தொண்டராசிரியர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நல்ல பதிலை ஒரு மாதத்திற்குள் வழங்காவிட்டால் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னால் தொடர் மறியல் போராட்டத்தையும், உண்ணாவிரதப் போராட்டத்தையும் முன்னெடுக்கப்போவதாக வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எதுவித கொடுப்பனவுமின்றித் தொடர் சேவையாற்றிவருகிறோம். ஆனால் நாம் தொடர்ந்தும் நிரந்தர

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரின் அசண்டை தப்பினர் சந்தேகநபர்கள்

**பொலிஸார் தகுந்த முறையில் விசாரணையைக் நடத்தத் தவறியமையால் நீண்ட காலமாக இழுத்தடிப்பு**

யாழ்ப்பாணம், நவ.22

வழக்கு விசாரணைகளுக்குப் பொலிஸார் போதிய ஒத்துழைப்பு வழங்கத் தவறியமையால், சட்டவிரோத மது விற்பனை தொடர்பான வழக்கில் சந்தேகநபர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

நெடுந்தீவில் பல மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமாக மதுவிற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்த அந்த வழக்கு விசாரணைக்கு உரிய சாட்சிகளைப் பொலிஸார் மன்றில் முற்படுத்தவில்லை. அவர்கள் இது தொடர்பில் அசண்டையீனமாக இருந்துள்ளனர்.

இந்த வழக்கு பலமுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதும் பொலிஸார் தகுந்த முறையில் விசாரணையைக் கொண்டு நடத்தத் தவறியமையால் நீண்ட காலமாக அது இழுபட்டு வந்தது.

இந்தநிலையில் பொலிஸாரின் இந்த நடவடிக்கையை அடுத்து இரண்டு சந்தேகநபர்களையும் நீதிமன்றம் நேற்று விடுவித்தது. (த-4)

## கஞ்சா குற்றவாளிக்கு தண்டம்

மன்னார்,நவ.22

2004 ஆம் ஆண்டு 10 ½ கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு மன்னாரில் அமைந்துள்ள மேல் நீமன்றம் 70 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறு உத்தரவிட்டது.

நேற்று இது தொடர்பான வழக்கு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் இந்த வழக்குடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் நீண்டகாலமாக தலைமறைவாகியுள்ள நிலையில் அந்த நபருக்கு எதிராக பகிரங்க பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. (ஐ-ரி)

## வடக்கு முதல்வர் வேட்பாளர் டக்ளஸுக்கு ஐ.தே.க. ஆதரவு

''வடமாகாண சபைத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதலமைச்சராகப் போட்டியிட்டால் ஐ.தே.கவினர் அவருக்கு முழு ஆதரவையும் வழங்குவர்'' இவ்வாறு நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜயவிக்கிரம பெரேரா.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே காமினி ஜயவிக்கிரம பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர்மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்தத்தை நீக்கினால் அது பெரும் பின்விளைவுகளையும், பேரழிவுகளையும் ஏற்படுத்தும்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டு ஏழைகளுக்கான ஜனசவிய திட்டத்தை உருவாக்கினார். அதை இப்போதைய அரசு சமுர்த்தி உதவித்திட்டம் என்று பெயர் மாற்றியது. பின்னர் அவை எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு 'திவிநெகும' சட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றது. இதன் மூலம் தனிஒரு மனிதனின் தேசிய சொத்தைக் கொள்ளையடிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொட காணாமல் போய் பல வருடங்கள் கடந்துவிட்டன. ஏற்கனவே அவர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டபோது காயங்களுடனேயே காணப்பட்டார். தன்னை ஒரு சித்திரவதை முகாமில் தடுத்து வைத்திருந்ததாகவும் அந்த வதை முகாம்களில் மேலும் பலர் அடைத்துவைக்கப்பட்டிருந்தனர் என்றும் அங்கே மரண ஓலங்கள் கேட்டதாகவும் எக்னெலிகொட என்னிடம் கூறினார். இதனை நான் சர்வதேச நீதிமன்றத்தில் சாட்சியமாகச் சொல்லவும் தயங்கமாட்டேன்.

பிரதீப் எக்னெலிகொட பாதுகாப்பான ஒரு இடத்தில் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் கூறினார். பின்னர் அப்படி நான் கூறியதாக ஞாபகம் இல்லை என்று கதையை மாற்றினார். இப்படித்தான் இன்றைய அரசும் அடிக்கடி தான் சொன்னவற்றையே பின்னர் மாற்றிச் சொல்கிறது- என்றார். (ங-சி)

# டக்ளஸ் அமைச்சராக இருந்து இதுவரை செய்தவை என்ன?

### சரவணபவன் எம்.பி. கேள்விக்கணை

அடுத்த வருடம் 60 ஆயிரம் குடிசைக் கைத்தொழில்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான பாரிய திட்டமொன்றை செயற்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் கூறுகின்றார். இதேபோன்றுதான் கடந்த ஆண்டிலும் அறிவித்தார். ஆனால் அவ்வாறு கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தி உள்ளாரா? - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று அபிவிருத்தி தொடர்பாக ஊடகங்களில் ஜனரஞ்சகமாகவும், ஜனாதிபதியைத் திருப்தியடையச் செய்வதற்காகவும் மாத்திரமே செய்திகள் வெளிவருகின்றன. ஆனால், அவற்றில் வெளியிடப்படும் அறிவிப்புகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்பதுதான் மக்கள் முன் எழுந்துள்ள கேள்வி.

பரந்தன் தொழிற்சாலை நமது நாட்டுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களில் பெரும் பகுதியை உற்பத்தி செய்தது. எனினும் கடந்த பல வருட காலமாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீண்டும் இயக்ங்கச்செய்ய மூன்று பில்லியன் செலவிலான உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்வதன் மூலம் நமக்குத் தேவையான குளோரின் மற்றும் சலவைச் சோடா ஆகியவற்றை உற்பத்தி செய்யமுடியும்.

இவ்வாறு நமக்குத் தேவையான சகல வளங்களும் இங்கே இருக்கும்போது சலவை சோடாவைக்கூட நாம் இறக்குமதி செய்கின்றோம். எனவே, உங்களுடைய செயற்றிட்டங்களை செய்தியாக மட்டும் வெளியிடாமல், செயலிலும் காட்டுங்கள். இதன் மூலம் தொழில்வாய்ப்புகளை மட்டுமன்றி, அந்நியச் செலவாணியையும் மீதப்படுத்த முடியும்.

அதேபோன்று காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீண்டும் செயற்படுத்தவும், உற்பத்திகளை ஆரம்பிக்கவும் ஐக்கிய அரபு நாட்டைச் சேர்ந்த 'ரஸல் கைமா' என்ற நிறுவனம் முன்வந்துள்ளது. அங்கு முறைசார் சாத்திய வள கூற்றறிக்கை ஆய்வு செய்யப்பட்டு 35 வருட கால ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்தத் திட்டத்தையும் செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகளைப் பரிசீலனை செய்யும்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்குக் கடந்த ஆண்டைவிட மிகவும் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்தளவான நிதியை வைத்துக்கொண்டு அமைச்சர் என்ன அபிவிருத்தியை செய்யப்போகின்றார் என்று தெரியவில்லை- என்றார். (ங-சி)

## சிறுவர்களுக்கு புகைபொருள் விற்ற 9 பேர் சிக்கினர்

**சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த கடைக்காரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம்,நவ.22

வேலணையில் வயது குறைந்தவர்களுக்குப் புகைபொருள்களை விற்பனை செய்த 9 பேருக்கு நீதிமன்றம் 22 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. யாழ்.மதுவரிப் பரிசோதகர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 6 கடைக்காரர்களுக்கும் சிறுவர்களுக்கு பீடி விற்பனை செய்த 3 கடைக்காரர்களுக்கும் எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றில் 9 பேரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 22 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, வேலணையில் அனுமதிப்பத்திரமின்றி கள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட 6 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் அவர்கள் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

3 பேர் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குற்றம்சாட்டப்பட்டபெண் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதால் அவர் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஏனைய 2 சந்தேகநபர்கள் மன்றுக்குச் சமூகமளிக்காத நிலையில் அவர்களுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த-4)

## சீனாவுக்கு நாட்டைத் தாரை வார்த்ததால் இலங்கை மீது இந்தியாவுக்குக் கோபம்

### சுட்டிக்காட்டுகிறது எதிர்க்கட்சி

கொழும்பு, நவ. 22

சீனாவிடம் நாட்டைத் தாரை வார்த்துள்ளதால் இலங்கை மீது இந்தியாவுக்கு கடும் கோபம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், மியன்மார், கியூபா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுடன்தான் தற்போது இலங்கை நட்புறவைப் பேணுகின்றது - இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. சுஜீவ சேரசிங்க நாடாளுமன்றில் நேற்று சுட்டிக்காட்டினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்கள் எமது நாட்டு வரலாற்றுடன் தொடர்புபட்டவை. விஜய மன்னன் நாட்டுக்கு வரும்போது குவேனி நெய்து கொண்டிருந்தார் என வரலாறு கூறுகின்றது.

நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் பாரம்பரிய சிறுகைத்தொழில்களின் முன்னேற்றத்துக்காக அரசு எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

அத்துடன், குறித்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு முறையான வகையில் தொழில்நுட்ப வசதிகள் இல்லை. தரம் நன்றாக இருந்தால் தானே சர்வதேச சந்தையில் போட்டியிட முடியும்.

அதேவேளை, அரசு மேற்குலகத்துக்கு எதிராகச் செயற்பட்டாலும் அந்த நாடுகளை அண்டியே நாட்டின் ஏற்றுமதிகள் உள்ளன. அரசு சீனாவுக்கு எமது நாட்டு வளங்களை வழங்கினாலும் அவர்களால் பெரிதாகப் பயன் ஏதும் இல்லை.

மஹிந்த அரசு சீனாவிடம் நாட்டைத் தாரைவார்த்துள்ளதால் இலங்கை மீது இந்தியா இன்று கடும் கோபத்தில் உள்ளது. - என்றார். (ங-சி)

## தேசிய மட்டத்தில் முதலாமிடம்



யாழ்ப்பாணம்,நவ.22

யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மாணவி செல்வி ஜெ.ரித்திகா நாட்டார் பாடல் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

சமுர்த்தி சிறுவர் கழக மாவட்ட மட்டப் போட்டியில் முதலிடம் பெற்று எம்பிலிப்பிட்டிய கிராமிய ப்யிற்சி நிலையத்தில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியே இவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

## தமிழர்களை இராணுவத்தில் சேர்க்காமல் பொலிஸில் இணைப்பதே நல்லிணக்கம்

### மனோகணேசன் கருத்து

வடக்கில் தமிழ்ப் பெண்களை இராணுவத்துக்குச் சேர்ப்பதை விடுத்து அவர்களை பொலிஸில் சேர்த்துக்கொண்டால் நாட்டில் சீர்குலைந்திருக்கும் சட்டம் ஒழுங்கு என்பவற்றையாவது காக்க முடியும்.- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன்.

'' அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்'' என்னும் தொனிப்பொருளில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் படைச் சேர்ப்பு யாழ்ப் பாணத்திலும் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்திருக்கிறார்.

தமிழர்களை இணைத்து கொள்வதன் மூலம் தனிச் சிங்கள இராணுவம் என்ற நிலையை மாற்றி அதை இலங்கை இராணுவமாக உருவாக்க போவதாகவும் இதற்கு அவர் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழர்களுக்கு இன்றைய முதல் தேவை, இராணுவத்தில் சேர்வது அல்ல.

தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வரவேண்டும். அதன் மூலம் சிங்கள பொலிஸ் என்ற நிலை மாற்றப்பட்டு, இலங்கைப் பொலிஸ் என்ற மாற்றம் வர வேண்டும். இதற்கு வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் ஆகிய பகுதிகளில் உள்ள தமிழர்களை பொலிஸ் பணிகளில்நியமிக்கப்படவேண்டும்.

வடக்கு கிழக்கில் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தமிழ்ப் பொலிஸார் சேவையில் அமர்த்தப்பட வேண்டும்.

இதனைவிடுத்து தமிழ் கட்சிகளுக்கு, இராணுவத்தை பார்த்து திருந்துங்கள் என்று அறிவுரை கூறுவதை ஹத்துருசிங்க நிறுத்த வேண்டும்.

ஹத்துரு சிங்கவிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் எமது தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணைப்பதை நிறுத்திவிட்டு அவர்களை தமிழ்ப் பொலிஸாராக நியமியுங்கள். இதன்மூலமே உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்- என்றார். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டாக்காலிகள் நான்கை கட்டிய இடத்தில் காணவில்லை

நெற் செய்கையாளர்களால் பிடிக்கப்பட்டுக் கட்டப்பட்டிருந்த மாடுகளில் ஒரு பகுதி இரவோடு இரவாகக் கடத்தப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் உள்ள நெல்வயல்களில் பயிர்களைச் சேதமாக்கிய 9 மாடுகளை நெற்செய்கையாளர்கள் பிடித்து அந்தப் பகுதி விவசாய சம்மேளனத்துக்கு அறிவித்து தனியார் காணியொன்றில் கட்டி வைத்தனர். விவசாய சம்மேளத்தினர் பிரிவு கிராம அலுவலருடன் சென்று பார்த்தபோது 5 மாடுகள் மட்டுமே கட்டப்பட்டிருந்தன. ஏனைய 4 மாடுகளைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்து அந்த இடத்தில் போட்டுவிட்டு மாடுகள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)




கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கிடையிலான மாகாண மட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். மாவட்டத்துக்கான பரிசிலை யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மாவட்ட உத்தியோகத்தர் திருமதி ந.அ.ஜெயராஜனியிடம் வழங்குகிறார். (த-7)

## வலி.கிழக்கு பிரதேச சபையின் பணியாளர் இருபத்தேழு பேர் நீதிவேண்டி வழக்குத்தாக்கல்

யாழ்ப்பாணம், நவ.22

வலி.கிழக்குப் பிரதேச சபையின் பணியாளர்களில் 27 பேர் நீதி வேண்டி யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்று பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்களில் ஏற்படுத்தப்பட்ட குழப்ப நிலைமையே இதற்குக் காரணம் என்று அவர் சொன்னார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் சபையின் 9 பணியாளர்களுக்குப் பதவி உயர்வுகளும் மற்றும் 9 பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் ஒன்பது பணியாளர்கள் தற்காலிக சேவைக்கு அமர்த்தப்பட்டனர். இந்த 27 பணியாளர்களின் நியமனங்களும் பதவி உயர்வுகளும் செல்லுபடி அற்றவை என்று உள்ளூராட்சித் திணைக்களம் பல தடவைகள் எமக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தி வருகிறது. இந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் மாதம் இந்தப் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவும் இழுத்தடிப்புச் செய்யப்பட்டது.

இந்த நிலையில் தற்போது இது குறித்து நீதி கிடைக்க குறித்த பணியாளர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்- என்று கூறினார். (ம-17)

# தீவக, வலிகாம அபிவிருத்திக்கு அராலி கடற்பாதை பிரதானமானது

## அபிவிருத்தி செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.22

*தீவகம் வளமுள்ள உற்பத்திப் பெருக்கம் உள்ள பிரதேசம். அதற்கு இணையாக வலிகாமமும் வர்த்தகம் மற்றும் விவசாயத்தில் சிறந்து விளங்கும் பிரதேசம். இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு வேலணை- அராலி கடற்பாதை மிகப் பிரதானமானது. இந்த அபிவிருத்தியை அடைய வேலணைப் பிரதேச சபையும் வேலணை பிரதேச செயலகமும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகத்துக்குச் செல்வதற்கு இரு மார்க்கங்கள் உள்ளன. அதில் ஒன்று பண்ணையூடான போக்குவரத்து, மற்றையது அராலி-வேலணை கடற்பாதை.

இந்தப் பாதை அமைக்கப்பட்டால் வலிகாமம் பகுதியில் சந்தை வாய்ப்புக்களும் பொருளாதார அபிவிருத்திகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந்தப் பாதை அபிவிருத்தி குறித்து அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

எனவே வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, வேலணை பிரதேச செயலர் திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி ஆகியோர் கூடுதலாக அக்கறை செலுத்தினால் இந்த அபிவிருத்தியை அடையலாம்.

எனவே, ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக அராலி-வேலணை கடற்பாதை அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் - என்றார். (ம-50)

## தென்மராட்சி தெற்கு, தனங்களப்பு வயல்களுக்கு வேலிகள் அமைப்பு

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு பகுதியில் காலபோக நெற்செய்கை வயல்களில் கட்டாக்காலி கால்நடைகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்க வயல் உரிமையாளர்களால் வேலி அமைக்கப்பட்டு வருகிறது.

பயிர்கள் வளர்ச்சியடைந்தும் இதுவரை விவசாயத் திணைக்களத்தால் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால் நெற் செய்கையாளர்கள் தமது செலவில் வேலிகளை அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

வளர்ந்து வரும் நெற்பயிர்களை கட்டாக்காலிக் கால்நடைகள் தினமும் அழித்து வருகின்றன என்று விவசாய திணைக்கள அதிகாரிகளிடம் முறையிட்டும் பயன்கிடைக்காததால் பாதுகாப்பு வேலி அமைத்து வருவதாகத் விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடமும் காலபோக நெற் செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் சுமார் 600 ஏக்கர் வயல்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கட்டாக்காலிக் கால்நடைகளால் முழுமையாக அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐ. ஓ. எம். நிறுவனத்தினர் இப்பகுதியில் பயிர்களைப் பாதுகாக்க ஆயிரத்து 600 கம்பிக் கட்டைகளையும் முட்கம்பி கொள்வனவு மற்றும் செலவுக்கு என்று ஒரு மில்லியன் ரூபாவை வழங்கியதாகவும் அதனை விவசாய சம்மேளனத்தினர் மறவன்புலோ கிழக்குப் பகுதியில் பயன்படுத்தியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-9)

## மழை வேண்டி அபிஷேகம்

தென்மராட்சி, நவ.22

மழை வேண்டி தனங்களப்பு கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை விசேட அபிஷேகமும் குளிர்த்தியும் இடம்பெறவுள்ளன.

மழை இல்லாமை மேட்டு நிலத்தில் விளைவிக்கப்பட்ட நெற்பயிர்கள் வாடும் அபாய நிலை காணப்படுவதால் மழை வேண்டி அபிஷேகம் செய்யவுள்ளதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ம-9)

## வேலணையில் கடைத்தொகுதி அமைப்பதற்கு நிபுணத்துவ ஆலோசனைக்காகக் காத்திருப்பு

நிபுணத்துவ ஆலோசனை மற்றும் அதற்கான விவரங்கள் வடக்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம்இருந்து விரைவில் கிடைக்கும். கிடைத்தவுடன் வேலணை வங்களாவடிச் சந்தியில் நவீன வடிவிலான இருமாடி கட்டட பணி 'புறநெகும' திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்படும். வேலணை பிரதேசசபை தலைவர் சி. சிவராஜா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேலணை வங்களாவடி சந்தியில் நவீன வடிவிலான இருமாடி சந்தை கடைத்தொகுதி அமைப்பதற்காக நாம் தயாராக உள்ளோம். இதற்காக அனுமதி மற்றும் நிதி 55 மில்லியன் என்பன 'புறநெகும' திட்டத்தில் தயாராக உள்ளன. வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பதிலை எதிர்பார்த்து உள்ளோம். பதில் கிடைத்தவுடன் இந்தஆண்டே கட்டடப் பணியை நிபுணத்துவ ஆலோசனையுடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-50)

## நிகழ்வுகள் இன்று

### பயிற்சிப் பட்டறை

அரச முகாமைத்துவ அபிவிருத்திபயிற்சித்திணைக்களத்தால் உள்ளூராட்சி மன்றங்களின் நல்லாட்சிக்கான அறிமுகம் என்னும் தலைப்பில் பயிற்சிப் பட்டறை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் சபை உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ரி.அன்னலிங்கம் கேட்டுள்ளார். (ம-8)

### கொமர்ஷல் வங்கி கிளைகள் திறப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொமர்ஷல் வங்கியின் கிளைகள் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன. சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய கிளைக் கட்டடங்களே திறந்து வைக்கப்படவுள்ளன. சாவகச்சேரி கிளை காலை 9.07 மணிக்கு கண்டி வீதி வீ.எம்.கே. கட்டத் தொகுதியிலும் கொடிகாமம் கிளை முற்பகல் 10.25 மணிக்கு பருத்தித்துறை வீதியிலும் திறந்து வைக்கப்படவுள்ளன. அந்தந்தக் கிளை முகாமையாளர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் வங்கியின் தலைவர் தினேஸ் வீரக்கொடி, நிறைவேற்று அலுவலர் ரவி டயஸ் மற்றும் வங்கி உயர் அதிகாரிகளுடன் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பீ.ரஜீவனும் கலந்துகொள்வார். (ம-9)

## முதியோருக்கு ஆயிரம் ரூபா நிலுவையுடன் டிசெம்பரில்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ் .மாவட்டத்தில் ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவுகள் டிசெம்பர் பத்தாம் திகதிக்கு முன்னர் நிலுவையுடன் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகள் வருங்காலத்தில் அந்தந்த பிரதேச செயலகத்தின் ஊடாக மாதாந்தம் விசேட வவுச்சர்கள் மூலம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் ஊடாக முதியோர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகள் தேசிய முதியோர் செயலகத்தால் தேசிய சேமிப்பு வங்கி மூலம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், தற்போது இந்தக் கொடுப்பனவுகள் விசேட கொடுப்பனவு அட்டைகள் மூலம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கொடுப்பனவை நிலுவையுடன் வழங்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுடன் ஆயிரம் ரூபா கொடுப்பனவும் அவர்களால் அலுவலகங்களுக்கு அனுப்பப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## 34 மில்லியன் ரூபா நிதியில் எட்டு வீதிகள் அபிவிருத்தி

### வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் தகவல்

2012 இல் யாழ்.மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களம் 34 மில்லியன் ரூபாவை செலவழித்துள்ளது. இதன் மூலம் 8 வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த வருடம் மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் 34 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்று 8 வீதிகளின் திருத்தப் பணிகளை பூரணப்படுத்தியுள்ளோம். இதற்கு மேலதிகமாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஒழுவில் வீதி புனரமைப்புக்கு 9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுக் கேள்வி கோரப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைபெற்று வரும் மாகாண வீதி செயற்றிட்டத்தின் கீழ் 12 வீதிகளைப் புனரமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது. இவற்றில் சில ஒப்பந்தகாரர்களின் வேலைத்திட்டம் முன்னேற்றமின்மை காரணமாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்படவுள்ளது.- என்றார் (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
படைக்குச் சொந்தமான கே.சி. - 30 என்ற விசேட விமானம் மூலம் இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதுவரையில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 525பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

''விஸா இன்றி ஆஸ்திரேலியாவில் எவரும் தங்க அனுமதி வழங்கப்படாது. இந்த விடயம் தொடர்பில் பலமுறை அறிவித்தும் கடத்தல்காரர்களின் பேச்சுகளில் ஏமாற்றமுறும் பலர், தங்களது பணத்தினை இழந்துகொண்டு ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வருகை தருகின்றனர்.

''இவர்களை ஆஸ்திரேலிய அரசு எவ்வகையிலும் நாட்டில் தங்கவைக்காது. அவர்களைத் திருப்பி அனுப்பவே நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு வருகை தருபவர்கள் நௌறு மற்றும் மனுஸ் தீவுகளில் தங்கவைக்கப்பட்ட நிலையிலேயே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்றும் கிறிஸ் போவன் குறிப்பிட்டுள்ளார். (உ-சி)

## நிரந்தர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆசிரியர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியிருந்தனர். ஆனால் போர் மூலம் எல்லா வகையிலும் பாதிக்கப்பட்டுள்ள எமக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அதனை வழங்குமாறு அரசிடம் பலமுறை கோரியுள்ளோம்.

''வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன'' என்பதுதான் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளின் பதிலாக இருக்கின்றது.

வன்னித் தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் வன்னியில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களுக்கு நேரில் சென்று பரிசீலிக்கப்பட்டது. நிரந்தர நியமனத்துக்கான பெயர்ப் பட்டியல்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் நீண்ட காலமாகியும் நிரந்தர நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை.

உறுதி மொழிகளை நம்பி 600 இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் தொழில்புரிந்து வருகின்றனர்.

எனவே வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறிவரும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், வன்னித் தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நல்ல பதிலை ஒரு மாதகாலத்துக்குள் பொறுப்புடன் வழங்காவிடின், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக எமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி தொடர் மறியல் போராட்டத்தையும், உண்ணாவிதரப் போராட்டத்தையும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் நிரந்தர நியமனம் இன்றி நீண்ட காலமாக தொண்டர் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## யாழ்ப்பாணத்தில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க அளவெட்டியில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்திருந்த நிலையில் யாழ். ஆயரின் கருத்து வெளியாகி உள்ளது.

செக் குடியரசின் நாடாளுமன்ற உறுப்பினர் டேவிட் வோட் நஸ்கா தலைமையிலான 6 பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

அவர்கள் யாழ். ஆயரைச் சந்தித்து போரின் பின்னரான நிலை மைகள் தொடர்பில் கேட்ட றிந்தனர்.

''இறுதிப் போரின்போது உயிரிழந்த மக்கள் எண்ணிக்கை தொடர்பில் உறுதியான தகவல்கள் எதுவும் இல்லை.போர் இடம்பெற்ற பகுதிகளில் ஐ.நா அதிகாரிகள் எவரும் இருக்கவில்லை. இதனால் இழப்புக்களை உறுதிப்படுத்த முடியவில்லை. காணாமல் போனவர்கள் தொடர்பில் தகவல் அறிந்து கொள்ள முடியாமல் மக்கள் இன்னமும் அலைந்து திரிகிறார்கள்'' என யாழ். ஆயர் தெரிவித்தார்.

''மக்கள் மீண்டும் ஒரு போர் ஏற்படுவதை விரும்ப வில்லை. ஆனாலும் போர்க் காலத்தைப் போன்றே யாழ். குடாநாட்டில் தொடர்ச் சியாகப் படைகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. அவை குறைக்கப்பட வேண்டும்'' என்றும் ஆயர் தெரிவித்தார்.

அத்துடன் போர் ஏற்படக் காரணமாக இருந்த பிரச் சினைகள் தீர்க்கப்பட்டு, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதை ஆயர் முக்கியமாக வலியுறுத்தினார்.

செக் குடியரசு குழுவினர் மறவன்புலோ, அரியாலை நாவலடிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப் பட்ட வீட்டுத்திட்டங்களையும் பார்வையிட்டனர். வடக்கு மாகாண ஆளு நரையும் சந்தித்துப் பேசினர். (த-5)

## பேச்சை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்த அமைப்பு நேற்றுமுன்தினம் பிரஸல்ஸில் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு உறுதிமொழிகளை புறக்கணித்து வருகிறது. தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிராது தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களை இராணுவமயமாக்கி அங்கு அபிவிருத்திகளையும் இழுத்தடித்து வருகிறது.

போர் முடிவடைந்த பின்னர், தமிழ்க் கட்சிகள் மத்தியில் திறந்த அரசியல் நகர்வுகளுக்கான களம் திறக்கப்பட்டுள்ளது. எனினும் இதற்கு அரசு, இடமளிக்கவில்லை. மாறாக, சிங்களத் தேசியவாதிகளை ஊக்குவிக்கும் அரசு அவர்கள் மூலம் நியாயமான தமிழர் கோரிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறது.

இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் ஆகியோருக்கு உறுதியளித்த இணக்கப்பேச்சுக்களை புறம்தள்ளிவிட்டு, சிங்களவாக்குகளைமையமாகக் கொண்டு இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக அங்கு மாகாணசபை தேர்தலை அரசு பிற்போட்டு வருகிறது. அத்துடன் மாகாணசபைகளுக்கு உள்ள அதிகாரங்களை குறைக்கும் நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபட்டு வருகிறது.

### அரசுக்கான பரிந்துரைகள்

வடக்கு - கிழக்குக்கு பிரத்தியேகமான சுயாட்சியுடன் கூடிய அதிகூடிய அதிகாரப் பகிர்வை ஒன்றிணைந்த இலங்கை நாட்டுக்குள் ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை சர்வதேச மற்றும் உள்நாட்டு மக்களின் முன் மீண்டும் பகிரங்கமாக வெளிப்படுத்துங்கள்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குக் கொண்டு செல்லக்கூடிய ஓர் அடிப்படைத் தீர்வுத் திட்டத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை உடனடியாக ஆரம்பியுங்கள்.

கூட்டமைப்புடன் நடைமுறை ரீதியில் இணக்கம் காணும் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, குறிப்பிட்ட கால எல்லைக்குள் தெரிவுக் குழுவின் பரிந்துரைகள் வரும் என்று உறுதியளியுங்கள்.

தெரிவுக் குழு நடவடிக்கைகள் வடக்கு மாகாணத் தேர்தலை தாமதப்படுத்துவதற்கான கருவியாக இருக்கக்கூடாது.

மேலும் அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுப்பதாக அல்லது இரு தரப்புக்களுக்கு இடையில் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கான வழிவகையாகவே தெரிவுக் குழுவின் பெறுபேறுகள் அமைய வேண்டும்.

2013 முற்பகுதியில், நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தலை வடக்கில் நடத்துங்கள்.

13ஆவது திருத்தத்தின் மூலம் எல்லா மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுங்கள். வடக்கு கிழக்கில் உள்ளவர்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் அங்கு பொதுமகன்களை ஆளுநர்களாக நியமிப்பதுடன் அதனை ஆரம்பியுங்கள். ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைக்கக்கூடிய வகையிலான சட்டங்களை உருவாக்குங்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு போதியளவிலான நிதி வளங்கள் மற்றும் வரி விதிப்புக்கான அதிகாரங்கள் என்பவற்றை வழங்குங்கள். அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அர்த்தமுள்ள வகையில் அவர்களுடன் ஆலோசனை நடத்துங்கள்.

'திவிநெகும' பிரேரணையை மீளப் பெறுங்கள். அதற்குப் பதிலாக, உள்ளூராட்சி அமைப்புக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய வகையிலும் வளங்கள் மாற்றுத் திட்டங்கள் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கக் கூடிய வகையிலும் பொருளாதார அபிவிருத்தியில் தீர்மானம் எடுப்பதைப் பரவலாக்குங்கள்.

பொது இடங்களில் படையினரைக் குறிப்பிடத்தக்களவு குறைப்பதன் மூலமும் அபிவிருத்தி, மனிதாபிமானப் பணிகள் மற்றும் பொதுமக்கள் வேலைத் திட்டங்களில் இருந்து படையினரை முற்றாக வெளியேற்றுவதன் மூலமும் வடக்கு - கிழக்கில் படிப்படியாக இராணுவ மயமாக்கலைக் குறைத்து பொது நிர்வாகத்தைக் கொண்டு வாருங்கள். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியை பொலிஸாரிடம் முழுமையாக ஒப்படையுங்கள். தமிழ் மக்களுடையதும் தமிழ் பேசும் மக்களுடையதும் பாரம்பரியங்களை வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பாலான இடங்களிலும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

வடக்கு - கிழக்கில் உள்ள பாரம்பரிய தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதன் மூலம் இனப் பரம்பல் விகிதாசாரம் மாற்றியமைக்கப்படாது என்று பகிரங்கமாக உறுதியளியுங்கள்.

நில உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள். காணிக் கொள்கைகள் மற்றும் காணி மாற்றங்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடியுங்கள். இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களைத் திருப்பிக் கொடுங்கள். தனியார்களின் காணிகள் எடுக்கப்பட்டால் அல்லது பயன்படுத்தப்பட்டால் அவற்றுக்கான நஷ்டஈட்டைக் கொடுங்கள்.

வடக்கில் இராணுவத்தின் உதவியுடன் புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் நிறுவுவதை நிறுத்துவது உள்ளடக்கி தமிழ் பேசும் மக்களின் மனித உரிமைகளுக்கு - இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் - பாதுகாப்புக் கொடுங்கள். மதத் தலங்கள் சேதப்படுத்தப்படுவதை தடுப்பதுடன் அவற்றைச் சேதமாக்குபவர்களைத் தண்டியுங்கள்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துங்கள்.

ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் முழுமையாக ஒத்துழையுங்கள்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பரிந்துரைகள்

ஒன்றிணைந்த இலங்கைக்குள் நீடித்திருக்கக் கூடிய சுயாட்சியை ஏற்படுத்தக் கூடிய தீர்வை எட்டுவதற்கான பேச்சுக்களை அரசுடன் நடத்துவதற்கான பற்றுறுதியைத் தொடர்ந்து பேணுங்கள். மற்றைய சமூகங்களுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

புலிகளின் குற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். குறிப்பாக முஸ்லிம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியமைக்காகவும் அது தொடர்பில் எதுவும் பேசாமல் இருந்தமைக்காகவும் மன்னிப்புக் கேளுங்கள்.

சிங்கள மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் இணைந்த, உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான குழுவை உருவாக்குங்கள்.

தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் பற்றி சிங்களவர்களிடம் தெளிவாகப் பேசுங்கள். அதிகாரப் பகிர்வு [illegible] தேவை என்று அவர்களுக்கு விளக்குங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பகிரப்படும் அதிகாரங்களை எப்படிப் பயன்படுத்தும் என்று விளக்குங்கள்.

வடக்கு, கிழக்கில் நிலவும் காணி மற்றும் வளப் பங்கீடு தொடர்பான பிரச்சினையைத் தீர்க்க முஸ்லிம் காங்கிரஸுடனும் ஏனைய முஸ்லிம் கட்சிகளுடனும் இணைந்து செயற்படுங்கள். அரசமைப்பு தொடர்பான பேச்சுக்கள் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் அப்படியே செய்யுங்கள்.

வடக்கு - கிழக்குக்கு வெளியே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மொழிப் புறக்கணிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளைச் சேர்ந்து எதிர்கொள்ளத்தக்க வகையில் மலையகத் தமிழர்களின் அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட முயற்சியுங்கள்.

ஆட்சி மறுசீரமைப்பு, ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் கவனம் செலுத்தும் வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவை உள்ளிட்ட அமைப்புக்களுடனும் கட்சிகளுடனும் கூட்டணியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

வடக்கு, கிழக்கில் நிலவும் காணி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைக் கையாளும் வகையில் கூட்டமைப்பின் உள்ளூர் அரசியல்வாதிகளைப் பலப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுங்கள். சமூக மட்டத்திலான உறுதியான கட்சிக் கட்டமைப்பை வளர்த்தெடுங்கள்.

### முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஏனைய முஸ்லிம் அமைப்புக்களுக்கான பரிந்துரைகள்

அதிகாரப் பரவலாக்கத்துக்கு உறுதியாக ஆதரவளியுங்கள். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதியான ஆதரவின் மூலம் அதனை ஆரம்பியுங்கள். வினைத்திறனான வகையில் அதிகாரங்கள் அதிகளவிலான - குறைந்தளவில் அல்ல - பகிரப்படுவதற்கான அரசியல் மறுசீரமைப்பை தொடருங்கள்.

### தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தலைவர்களுக்கான பரிந்துரைகள்

போராலும் புலிகளின் நடவடிக்கைகளாலும் சிங்களவர் மற்றும் முஸ்லிம் மக்களும் துன்பப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். காணி மற்றும் வளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பதன் மூலம் முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

சமூகங்களைப் பிரித்து வைத்து கட்டுப்படுத்த முயற்சிக்கும் அரசியல்வாதிகள் மற்றும் குழுக்களின் நடவடிக்கைகளை முறியடிக்கக்கூடிய வகையில் இனங்களுக்கு இடையிலான அமைதி, நல்லிணக்கக் குழுக்களை உருவாக்குங்கள்.

### தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புக்களுக்கான பரிந்துரைகள்

ஒன்றிணைந்த இலங்கைக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் உடன்பாட்டை எட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் நகர்வுகள் மூலோபாயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். கூட்டமைப்பை, கட்டமைப்பு ரீதியாகப் பலப்படுத்துவதற்கு வேண்டிய தொழில் திறன்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இனங்கள் இடையிலான பதற்றத்தை விடுதலைப் புலிகளின் பங்களிப்பு மேலும் ஆழமாக்கியது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். போரின் இறுதியில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் உயிரிழப்பதற்குப் புலிகளும் பொறுப்பாக இருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். (உ-சி)

## 2014 இல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மான சிறிகொத்தாவில் கட்சியின் நாடளாவிய தொடர்பாடல் அமைப்பாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகங்கள் தமது பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றுவதில்லை என்றும்,அவை 'ஜனாதிபதியின் லெப்பில் (மடியில்) இருந்துகொண்டு தமது (எதிர்க்கட்சித் தலைவரின்) டொப்பைத் (தலையைத்) தாக்குகின்றன என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் அரசின் நண்பர்களுக்கு வரிவிலக்கும், சிறுவர்களுக்கு ரேஸ் கார்களும், ஊடக நண்பர்களுக்கு மடிகணினியும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், ஏழை மக்களுக்கு ஒன்றுமே இல்லை. அவர்களுக்கு அநீதி தான் இழைக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஏழை மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. இதை நாம் தினமும் நாடாளுமன்றில் கூறிவருகின்றோம். ஆனால், எமது கருத்துக்களை ஊடகங்கள் மக்களிடம் கொண்டுசெல்வதில்லை.

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கலவரத்தில் 27 பேர் கொல்லப்பட்டமை உட்படப் பல கொடும்செயல்கள் பற்றி ஊடகங்கள் பேசுவதில்லை; கருத்துக்களை வெளிப்படுத்துவதில்லை.

அன்று வெள்ளை வானில் கடத்திச் சென்ற ஊடகவியலாளர்களை இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மடிகணினிகளைக் கொடுத்து தம்வசம் இழுக்கின்றார்.

ஜனாதிபதியிடம் மடிகணினி பெற்ற ஊடகவியலாளர்களின் பெயர்களை ஊடகங்கள் வெளிப்படுத்தவேண்டும்.

ஊடக சுதந்திரம் என்பது சுதந்திரமாக மக்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதாகும். ஆனால், ஊடகங்கள் தமது பணியைச் சரியாக நிறைவேற்றுவதில்லை.

அதனால் அந்தப் பணியை நாம் நிறைவேற்றப்போகிறோம். அதற்காக நாடளாவிய ரீதியில் எமது கட்சியின் தொடர்பாடல் அமைப்பாளர்களை நியமித்துள்ளோம். அந்த நடவடிக்கைகள் யாவும் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தலைமையில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் தமது வெற்றிக்காக இதே பாணியைத்தான் கையாண்டார். எனவே, 2014ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்ற நாமும் அதே வியூகத்தைக் கையாண்டு வெற்றி பெறுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் - என்றார். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கன்னைபிரியும் அனைத்துலகப் போக்கு காஸா விவகாரத்திலும் கைவைக்கிறது

பலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் நீடிக்கின்றன. ஒரு வாரத்துக்கு முன்னர் ஆரம்பித்த தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காஸா பிரதேசத்தின் மீது இஸ்ரேல் நடத்தும் பெரும் தாக்குதல் இது என்பதால் சர்வதேசத்தின் கவனம் மத்திய கிழக்கு நோக்கித் திரும்பி உள்ளது.

இராணுவப் பயிற்சி பெற்ற 75 ஆயிரம் பேரை இஸ்ரேல் சேவைக்கு அழைத்திருப்பதாலும், காஸா - இஸ்ரேல் எல்லையில் இஸ்ரேல் படைகள் குவிக்கப்படுவதாலும் இஸ்ரேல் எந்நேரமும் தரைவழித்தாக்குதலை ஆரம்பித்து காஸாவுக்குள் படைகளை அனுப்பலாம். அப்படியான நிலைமை உருவானால் அது பேரழிவிலேயே முடிவடையும்.

காஸாவில் அதிகாரத்தில் உள்ள ஹமாஸ் இயக்கத்துக்கு எதிராக இஸ்ரேல் ஆரம்பித்துள்ள தாக்குதல் நீடிக்குமானால், பலஸ்தீனம் தொடர்பான எதிர்காலப் பேச்சுகள் முழு அளவில் செயல் இழந்து போகலாம். அதனாலேயே சர்வதேச சமூகம் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட வேண்டியது மிகவும் அவசியம் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

ஹமாஸ் இயக்கத்தை ஆதரிக்கும் ரஷ்யாவும், இஸ்ரேலை ஆதரிக்கும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச்சபையில் அங்கம் வகிப்பதால், 'வீட்டோ' அதிகாரம் காரணமாகப் பாதுகாப்புச்சபை உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்கமுடியாத நிலையில் உள்ளது.

ஆகவே, சர்வதேச சமூகம் இனியும் மௌனம் சாதிக்க முடியாது. காஸா மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும். ஆக்கிரமிப்பைக் கண்டிக்காது மௌனம் சாதிப்பது இப்படியான அழிப்பு நடவடிக்கைகள் தொடரவே வழிவகுக்கும். அப்பாவி மக்கள் கொல்லப்படுவது அதிகரிக்கலாம்.

இலங்கை அரசு, அரபு நாடுகளுடன் மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறது. ஆனால் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான அதன் வெளிநாட்டுக் கொள்கை, முற்றுமுழுதாக இலங்கையின் அதிகார வர்க்கத்தின் ஆட்சி நலன் கருதி காலத்துக்குக் காலம் வகுக்கப்படு கிறது. முஸ்லிம் மக்களின் உணர்வுகள் புறக்கணிக்கப்படுகின்றன.

1970 தேர்தல் பிரசாரத்தின் போது முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்துடன் தாம் பதவிக்கு வந்தால் கொழும்பில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தை மூடிவிடப் போவதாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரசாரம் செய்தார். தேர்தலில் வென்றவுடன் முதல் வேலையாக இஸ்ரேல் தூதரகத்தை மூடி அதன் தூதரை நாட்டிலிருந்து வெளியேற்றினார்.

எனினும், 1980 இன் முற்பகுதியில் மிகவும் குறைந்த மட்டத்தில் இஸ்ரேலுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. பிரேமதாஸ ஜனாதிபதியானபோது 1990இல் இஸ்ரேலுடனான உறவு மீண்டும் முழு அளவில் துண்டிக்கப்பட்டது. அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் அரசியல் குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டபோது, அதன் பின்னணியில் இஸ்ரேலின் உளவுப் பிரிவான மொஸாட் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பிரேமதாஸ பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். அந்த அளவுக்கு இலங்கையின் அரசியல் செல்நெறியில் இஸ்ரேல் ஊடுருவி இருந்தது.

2000ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் இலங்கை அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்தபோது, மீண்டும் இஸ்ரேலுடன் முழு அளவிலான ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. இஸ்ரேலின் டோறா அதிவேக ரோந்துப் படகுகள் போரில் பெரும் எண்ணிக்கையில் பயன்படுத்தப்பட்டன. இஸ்ரேலிய இராணுவ தொழில்நுட்ப நிபுணர்கள் இலங்கைக்கு வந்து கிபிர் குண்டுவீச்சு விமானங்களையும், ரஷ்ய மிக் 27 ரக விமானங்களையும் பராமரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் இலங்கை பெருமளவு கொள்வனவு செய்து போருக்குப் பயன்படுத்தியது.

ராஜபக்ஷ அரசு 2005 தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் இஸ்ரேலுடன் தொடர்ந்து நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறது. இலங்கை அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் அடிக்கடி இஸ்ரேல் சென்று வருகின்றனர். கொழும்பில் இஸ்ரேலிய தூதரகத்தை நிறுவி இஸ்ரேலுடன் முழு அளவிலான உறவுகளைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை அரசுக்கு இஸ்ரேல் தேவைப்படலாம். ஆனால் அப்பாவி மக்கள் கொல்லப்படும்போது இஸ்ரேலைத் தட்டிக் கேட்காமல் இருக்கமுடியாது. இந்த அரசில் முஸ்லிம் கட்சிகள் மிகப்பலவும் அங்கம் வகிக்கின்றன. முஸ்லிம்கள் முக்கிய அமைச்சுப் பதவிகளில் இருக்கிறார்கள். ஆனால் அரசு மௌனம் சாதிக்கிறது.

உலகின் எந்த மூலையில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டாலும் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியது மனித நேயம். ஆனால் இப்போதெல்லாம் சாய்ந்தால் சாய்கிற பக்கம் என்ற 'உலகு ஒழுங்கு' மெலியாரின் உரிமைகளை வலியார் தமது பலத்தைக் கொண்டு பிடுங்கிக் கொள்வதற்கு வகை செய்கிறது.

இந்தப் புனுகு பூசப்பட்ட கன்னை பிரியும் அரசியல் போக்கு அனைத்துலக மட்டத்தில் அடிக்கடி எழுந்துகொண்டே இருக்கிறது. அதனை அணையவிடாமல் தவிர்ப்பதும், தடுப்பதும் நீண்டுகொண்டே இருக்கும் என்பதற்கான, நிலைக்களனாகவே காஸா விவகாரத்தையும் நோக்கவேண்டியதாகிறது.

# மாணவரின் உடலுள் குண்டுத்துகள்கள்; உளநல மையத்தை மூட ஆளுநர் முயற்சி

### விசேட மருத்துவ முகாம்களையாவது அமையுங்கள் - எம்.பி.

கொழும்பு,நவ.22

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரால் 15 ஆயிரம் மாணவர்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும், அவர்களுள் 737 மாணவர்கள் உடலில் குண்டுகளைச் சுமந்துகொண்டு அவல வாழ்க்கை வாழ்கின்றனர் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறிருக்க, வடக்கில் இயங்கும் சமூக உளநல மையத்தை இழுத்து மூடுவதற்கான நடவடிக்கையை வடமாகாண ஆளுநர் திரைமறைவில் மேற்கொண்டுவருகின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வியமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீபாவளித் தினத்தன்று வன்னி வான்பரப்பில் கிபிர்கள் பறந்ததால் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரினால் வடக்கின் கல்வி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாணவர்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல மாணவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர்.

குறிப்பாக, வடக்கிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதுடன், சில இடங்களில் பதில் அதிபர்களே அதிபர்களாகக் கடமையாற்ற வேண்டியுள்ளனர்.

எனவே, வடக்கின் கல்வி நிலைமை தொடர்பில் கல்வியமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பாக, இறுதிக்கட்டப் போரினால் 15 ஆயிரம் மாணவர்கள் மன அழுத்தங்களுக்குள்ளாகியுள்ளனர். அங்கு சமூக உளநல மையம் இருந்தாலும் அது முறையாகச் செயற்படுவதில்லை.

அதையும் மூடுவதற்கு வடக்கு ஆளுநர் திரைமறைவில் நடவடிக்கை எடுத்துவருகின்றார். இது கண்டிக்கப்படவேண்டிய செயலாகும்.

வடக்கில் 63 ஆயிரம் பேர் போரால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அண்மையில் சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டது. நிலைமை இவ்வாறிருக்க, எப்படி மனநல நிலையத்தை மூட முடியும்?

அதேவேளை, துப்பாக்கி ஏந்தியவர்கள் வடக்கில் இன்று புத்தகப் பை ஏந்தியுள்ளனர் என்று நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகின்றார். ஆனால், 737 மாணவர்கள் உடலில் குண்டுகளைச் சுமந்தவண்ணம் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். போர் முடிவடைந்து நான்கு வருடங்களாகியும் இவர்களின் அவலங்கள் நீங்கவில்லை.

எனவே, விசேட மருத்துவ முகாம்களை அமைத்தாவது இந்த மாணவர்களைக் குணப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். துப்பாக்கி சன்னங்களும், உலோகத் தகடுகளும் இவர்களின் உடல் முழுவதும் காணப்படுகின்றன.

அதேவேளை, கடந்த 13ஆம் திகதி அதாவது தீபாவளித் தினத்தன்று வன்னி வான்பரப்பில் கிபிர்கள் பறந்ததால் மக்கள் பெரிதும் அச்சமடைந்தனர். அங்கும், இங்கும் ஓடி தீபத் திருநாளன்று அல்லோலகல்லோலப்பட்டனர். போர் முடிவடைந்த நிலையில் ஏன் இப்படி கிபிர் பறக்கவிடப்படவேண்டும்.- என்றார்.

## உள்ளூராட்சி சபைகளுக்கும் பட்டதாரிகளை வழங்க வேண்டும்

### வேலணை பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெற்று பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பட்டதாரிப் பயிலுநர்களை உள்ளூராட்சிச் சபைகளுக்கும் பகிர்ந்து வழங்க வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோரிடம் வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளில் முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடம் மற்றும் பட்டதாரிகளுக்கான கடமைகள் பல உள்ளன.

இவ்வாறான வெற்றிடங்களுக்குப் பட்டதாரிப் பயிலுநர்களை நியமனம் செய்யலாம்.

ஆனால், மத்திய அரசு பிரதேச செயலகங்களுக்குப் பெரும் எண்ணிக்கையில் அவர்களை நியமனம் செய்துள்ளது.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் ஒரு பிரிவினரை உள்ளூராட்சிச் சேவைகளுடன் இணைத்தால் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், வருமானம் மற்றும் புள்ளிவிவரத் திரட்டலுக்குப் பயன்படுத்தலாம்.

எனவே, பட்டதாரிகள் பிரிக்கப்படும் போது உள்ளூராட்சி சபைகளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கி உதவ வேண்டும்- என்று மேலும் கேட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கைக் கடிதம் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-50)

## வீதிகளுக்கு 'காப்பெற்' போடக் கோரிக்கை

வடமராட்சி, நவ. 22

நெல்லியடிச் சந்தியில் இருந்து கொடிகாமம் செல்லும் வீதி மற்றும் திக்கம் செல்லும் ஆகிய இரு வீதிகளும் அகலமாக்கப்பட்டு திருத்தியமைத்து 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்பட வேண்டும் என்று கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், உபதலைவர் இ.சாந்தசொரூபனால் இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

காப்பெற் வீதியாக மாற்றப்பட வேண்டிய இரு வீதிகளின் புனரமைப்பு வேலைகளையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் என அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கிளினிக்

### வாராந்தம் திங்கட் கிழமைகளில் நடத்த ஏற்பாடு

தென்மராட்சி, நவ. 22

போசாக்கு குறைந்த 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான கிளினிக் சாவகச்சேரி வைத்தியசாலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

குழந்தைகள் சிகிச்சை நிபுணர் இந்த கிளினிக்கில் பங்குபற்றி சிகிச்சையளிக்கவுள்ளார். பிரதி திங்கட்கிழமைகளில் வைத்தியசாலையில் இது நடத்தப்படவுள்ளது.

இதுநாள்வரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் குழந்தைகள் சிகிச்சைகள் நடத்தப்பட்டு தடுப்பூசிகளும் சத்துணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குழந்தைகளில் சில போசாக்குக் குறைவு, அதிபோசாக்கு குறைவு போன்ற பிரச்சினைகளால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இவற்றை அவதானித்த சுகாதார அமைச்சின் சிறுவர் போசாக்குப் பிரிவினர் குடும்பநல சேவையாளர் பிரிவுகளில் போசாக்கு குறைவு, அதிபோசாக்கு குறைவு என்று இனங்கண்டு அவர்களுக்கு வைத்தியசாலைகள் மூலம் சிகிச்சையளிக்குமாறு அறிவித்துள்ளனர்.

அத்துடன் அதிபோசாக்குக் குறைந்த பிள்ளைகளுக்குச் சிகிச்சை வழங்குமாறும், போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கென தனியாகச் சிகிச்சைப் பிரிவினை ஆரம்பித்து அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் அனுசரணையுடன் சுகாதாரத் திணைக்களத்திடம் சத்துணவுகளைப் பெற்று சிகிச்சையளிக்குமாறும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் ஏற்பாட்டில் வடமாகாணத்தில் முதல் தடவையாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் போசாக்குக் குறைந்த 5 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்தச் சிகிச்சை நிலையத்துக்கு வரும் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சிறார்களுக்குச் சத்துணவு வழங்கச் சாவகச்சேரி நகரசபையினர் முன்வந்துள்ளனர் என்று கூறப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஏற்கனவே குழந்தைகள் சிகிச்சை நிபுணரால் சிகிச்சைப் பிரிவும் வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளால் குழந்தைகள் நல சிகிச்சைப் பிரிவும் நடத்தப்பட்டு வரும் நிலையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான போசாக்கு சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் சேதமடைந்த 12 ஆலயங்களுக்கு நிதி உதவி

## இந்துசமய கலாசார அமைச்சு வழங்கியது

புதுக்குடியிருப்பு,நவ.22

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போரினால் சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைக்கும் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் 12 ஆலயங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 19 கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளிலுமுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பூசை வழிபாடுகள் இன்றி கிடந்த ஆலயங்களில் மீண்டும் பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் சேதமடைந்த கோயில்களின் விவரங்களைப் பிரதேசசபையின் கலாசாரப் பிரிவு திரட்டியது. இதன் படி 85 ஆலயங்கள் சேதமாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்பதற்கு நிதி வழங்க முன்வந்துள்ள இந்து சமய கலாசாரத் திணைக்களம் முன்னுரிமை அடிப்படையில் முதற்கட்டமாக 12 ஆலயங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கியுள்ளது.

இதற்கான காசோலைகள் கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் இ.பிரதாபன், திட்டமிடல் பணிப்பாளர் இ.திலீபன் , காலசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கெருடமடு பிள்ளையார், விசுவமடு கிழக்கு மாணிக்கப்பிள்ளையார், விஸ்வமடு கிழக்கு நாச்சிமார் அம்பாள், வள்ளிபுனம் பொன்னம்பல அம்மன், தொட்டிலடி சித்தி விநாயகர், விசுவமடு மேற்கு அதசய விநாயர், விசுவமடு மேற்கு முத்துமாரி அம்மன், மூங்கிலாறு சித்தி விநாயகர், பாரதிபுரம் முத்துமாரி அம்மன், திம்பிலி தாவலடி விநாயகர், இரணைப்பாலை கண்ணகை அம்மன் ஆகிய ஆலயங்களுக்கே காசோலை வழங்கப்பட்டன. (ஐ-115)

## பியர் ரின்களால் நிரம்பும் நமணங்குளம் வீதி

### மதுப்பிரியர்களைக் கட்டுப்படுத்த கோரிக்கை



துணுக்காய், நவ. 22

நமணங்குளம் மயான வீதியில் வெற்று பீயர் ரின் குவியல்களால் பல்வேறு நோய்கள் ஏற்படும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

நமணங்குளம் 2 ஆம் யூனிட் பகுதியில் மயானத்துக்குச் செல்லும் வீதியில் இரவில் மது அருந்தும் இளைஞர்கள் மது அருந்திவிட்டு அந்தப் போத்தல்களை உடைத்து அந்த இடத்திலேயே வீசிவிடுவதால் பலர் வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இரவு வேளைகளில் கூட்டாக இளைஞர்கள் இந்த வீதிகளில் வைத்து மது அருந்துகின்றனர். இதனால் இந்த வீதியால் செல்வோர்கள் மிகவும் பயப்பீதியுடன் செல்வதாகவும் கிராம வாசிகள் தெரிவித்தனர்.

தற்போது கனமழை பெய்து வருவதால் பீயர் ரின்களில் மழை நீர் தேங்கி டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்படலாம் என அந்த மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போது தென்பகுதியில் இருந்துவரும் புது மதுபானங்களுக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. இரவில் மதுபிரியர்கள் நமணங்குளம் மயான வீதியில் புரியும் அட்டகாசத்தைக் குறைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கிராமத்தவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-415)

## மின்சாரம் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 20.

துணுக்காய் யோகபுரம் கிழக்குப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையால் 50 க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு நீண்ட நாள்களாகியும் அடுத்தகட்ட வேலைகள் இடம்பெறாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ-415)



உலக அஞ்சல் தினத்தை ஒட்டி மன்னார் பிரதான தபாலகத்திலிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படம்.

## பரிவாரத் தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம்

கிளிநொச்சி, முரசுமோட்டை சேற்றுக்கண்டி சிறி முத்துமாரி அம்பாள் கோயில் பரிவாரமூர்த்திகளுக்குக் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட முரசுமோட்டை சேற்றுக்கண்டி சிறிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தின் பரிவாரமூர்த்திகளான கிருஷ்ணர், ஐயப்பன், ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்களின் கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9:15 மணிக்கு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (6)

## மன்னார் சாலையின் இ.போ.ச தொலைபேசிகள் இயங்கவில்லை

மன்னார், நவ. 22

இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கான தொலைபேசிகள் சில இயங்காதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் சாலையின் நிர்வாக அலுவல்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் தொலைபேசிகளே இயங்காதுள்ளன.

மன்னார் சாலையின் சேவையில் ஈடுபடும் பஸ்களின் உட்புறத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் 0232222281 எனும் இலக்கமும், மன்னார் இ.போ.ச. பஸ் நிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர் அலுவலகத்தின் பாவனையில் இருக்கும் 0232222110 எனும் இலக்கமுமே இயங்காதுள்ளன.

இரண்டு தொலைபேசிகளுக்குமான பாவனைக் கட்டணம் இதுவரையில் செலுத்தப்படாதமையே இவை செயலிழந்துள்ளமைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதனால் தொலைதூர பயணிகள் மன்னார் சாலையில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் குறித்த தகவல்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-ரி)

# விசுவமடு வாசிகசாலை காணியை நிர்வாகத்திடம் வழங்க நடவடிக்கை

**சனசமூக நிலையத்தை இயங்க வைக்குமாறும் அப்பகுதி மக்களும் சனசமூக நிலைய நிர்வாகமும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்**

கிளிநொச்சி, நவ. 22

விசுவமடு சனசமூக நிலையக் காணியை உரிய முறையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என புதுக்குடியிருப்புக் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

விசுவமடு மத்தியில் உள்ள சனசமூக நிலையக் காணியின் ஒரு பகுதியை விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அபகரித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால் அந்தக் காணியில் இருந்த பொதுச் சந்தையையும் சனசமூக நிலையத்தையும் இயக்க முடியாது போயுள்ளது. இது தொடர்பில் கடந்த ஆண்டு புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதன் பின்னர் அரசியல் தலையீடுகள் காரணமாக குறித்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

தற்போது குறித்த காணியைப் பெற்றுத் தருமாறும், சனசமூக நிலையத்தை இயங்க வைக்குமாறும் அப்பகுதி மக்களும் சனசமூக நிலைய நிர்வாகமும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் செயலாளருடன் தொடர்புகொண்டபோது, குறித்த காணியைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆக்கிரமித்துள்ளது. அதனைப் உரியவர்களிடம் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக காணி அபிவிருத்தி உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்ட போது, குறித்த காணி சனசமூக நிலையத்துக்கு ஒதுக்கப்பட்டது. அதனை ஓரிரு வாரங்களுக்குள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தார். (ஐ-6)

## பெண் தலைமை குடும்பத்துக்கு வாழ்வாதாரக் கடன் உதவி

### சம்பத் வங்கியின் ஏற்பாட்டில்

கிளிநொச்சி, நவ. 22

கிளிநொச்சியில் உள்ள சம்பத் வங்கிக் கிளையின் ஏற்பாட்டில் ஜெயந்திநகர் கிராமத்தில் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களின் வாழ்வாதாரம் மற்றும் சுயதொழில் என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் சுய தொழில் கடன் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முற்.ப. 10.30 மணிக்கு ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் ஜெயந்திநகர் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தினூடாகப் பெண்கள் தலைமைதாங்கும் 27 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் குறைந்த வட்டிவீத அடிப்படையில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் சம்பத் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஏ.என்.டேவிற், கிளிநொச்சி முகாமையாளர் ந.மாலன், ஜெயந்திநகர் கிராம அலுவலர், ஜெயந்திநகர் ஆரம்ப வித்தியாலய முதல்வர் உமாசங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வங்கிப் புத்தகங்களை வழங்கினர். (ஐ-6)

# மன்னார் தினச் சந்தையை வாரச் சந்தையாக மாற்றுக

மன்னாரில் இயங்கிவரும் தினச்சந்தையை வாரச் சந்தையாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் போதிய தொழில் வாய்ப்பு இல்லாதுள்ளதாகவும் மன்னாரைச் சேர்ந்த உள்ளூர் வியாபாரிகளும், பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் தினச்சந்தையில் 40 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் உள்ளனர். அவர்களில் ஆறு வியாபாரிகள் மட்டுமே மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையவர் அனைவரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்த நிலையில் மன்னார் தினச் சந்தையை வாரச் சந்தையாக மாற்றுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவந்து மன்னார் நகர சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகளும் பொதுமக்களும் நகரசபையிடம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதேவேளை கடந்த மார்ச் மாதம் மன்னார் தினச்சந்தை தொகுதியில் தீ விபத்து இடம்பெற்று அதில் கடைத் தொகுதிகள் எரிந்து நாசமாகியிருந்தன.

அழிவடைந்த தினச் சந்தை இராணுவத்தினரின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு தற்போது அங்கு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே வியாபாரிகள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர். (ஐ-ரி)

## 10 வீதிகள் அபிவிருத்தி

மன்னார் மாவட்டத்தில் 2012 நெல்சிப் திட்டத்தின் கீழ் 10 வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் மன்னார் பிரதேச சபை செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

2010, 2011 ஆகிய ஆண்டுகளுக்கான உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்தோம்.

இந்த ஆண்டு 'நெல்சிப்' திட்டத்தில் 10 வீதி அபிவிருத்திகளைத் துரித அபிவிருத்தியின் கீழ் முன்னெடுத்து வருகிறோம். இவை விரைவில் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படும் - என்றார். (ஐ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தைக் குழப்புபவர் அஸ்வர் சபையில் சாடினார் சரவணபவன் எம்.பி

நாட்டின் நல்லிணக்கத்திற்கு ஒரு சாபக்கேடாக இருப்பவர் ஆளும் கட்சி உறுப்பினரான அஸ்வர். அவர் எங்களுக்கு தொல்லை கொடுப்பதற்காகவே இந்த சபைக்கு வருகின்றார் என சாடிய யாழ் மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சரவணபவன், தைரியம் இருந்தால் அஸ்வரும் ஒரு பத்திரிகை ஆரம்பிக் கட்டும் பார்க்கலாம் என்றும் சவால் விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் அஸ்வருக்கும் சரவணபவனுக்கு மிடையில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தின் போதே இப்படியான தொரு வாதப்பிரதிவாதம் இடம் பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வட மாகாணத்தில் அழிக்கப்பட்டுள்ள பாரிய தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்.

வேலைத்திட்டங்கள் பெயரளவில் மட்டும் இல்லாமல் செயல் படுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் கூறப்பட்டவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குறைகளை சுட்டிக் காட்டினார்.

**வக்காலத்து வாங்கிய அஸ்வர் வாங்கிக் கட்டினார்**

உறுப்பினர் சரவணபவன் சுட்டிக் காட்டிய குறைபாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடைக்கிடை பதிலளித்துக் கொண்டே இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வரும் மூக்கை நுழைத்து வக்காலத்து வாங்கினார்.

ஐயா! இந்த மனிதர் இந்த சபையில் ஒரு தொல்லையாக இருக்கின்றார். நாங்கள் வட பகுதி அபிவிருத்தி தொடர்பாகப் பேசுகின்றோம். இவருக்கு என்ன தெரியும் இடையூறு செய்யாமல் இருக்க சொல்லுங்கள் என்றார் சரவணபவன்.

சபாநாயகர் அவர்களே! நாடாளு மன்ற உறுப்பினர் சரவணபவன் சபையில் தவறான விடயங்களைக் கூறுகின்றார்.

இவர் பொதுநோக்குடன் பேச வில்லை "உதயன்" பத்திரிகைக் காகவே பேசுகின்றார். நாளைக்கு அவருடைய பத்திரிகையில் செய்தி வெளிவரும் என்று கூறினார். அஸ்வர்.

**அஸ்வருடைய இந்த பேச்சு சரவணபவனுக்கு சூட்டைக் கிளப்பி விட்டது.**

ஐயா! இந்த மனிதர் சபையில் பெரும் தொல்லையாக இருக் கின்றார். எல்லோரும் நல்லிணக்கம் பற்றி பேசுகின்றோம். ஆனால் அஸ்வர் நல்லிணக்கத்துக்கே சாபக்கேடாக இருக்கின்றார். அஸ்வருக்கு தைரிய மிருந்தால் அவரும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கட்டும். இது அவரால் முடியுமா என சவால் விட்டார். அதற்கு மேல் பேசுவாரா அஸ்வர் கப்சிப்.

நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் முப்பது நிமிடங்களாக குறைக்கப்பட்டுள்ளதால் ஒழுங்குப் பத்திரத்திலும் எட்டுக் கேள்விகள் மட்டுமே உள்ளடக்கப் பட்டிருந் தன.

எட்டுக் கேள்விகளிலும் மூன்று கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்பட்டது. ஏனையவை வழமை போல் பதிலளிக்க கால அவகாசம் கோரப்பட்டது.

**சபாநாயகரின் அறிவித்தல்**

சபாநாயகர் சபை ஆரம்பத்தின் போது ஒரு முக்கியமான அறிவித்தலை விடுத்தார். சபை அமர்வுகளின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கும் இங்கும் ஓடித் திரிய முடியாது. சபை அமர்வுகளின் போது நாடாளுமன்றத்தில் இரு பக்கத்தையும் சேர்ந்த உறுப்பினர் கள் தமது ஆசனங்களில் இருப்பதில்லை.

கூட்டம் கூட்டமாக தாம் விரும்பிய இடங்களில் அமர்ந்து கொண்டு அரட்டை அடிப்பார்கள். பேசும் உறுப்பினர்களுக்கும் இடையூறு செய்வார்கள்.

எத்தனை நாள்களுக்கு தான் சபாநயாகரும் பொறுத்துக் கொண்டு இருப்பார். நேற்று கண்டிப்பான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்து விட்டார்.

இனிமேல் குழு நிலை விவாதத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது ஆசனங் களிலேயே இருக்க வேண்டும் என உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டார். இது சபையில் கூட்டம் கூடி கும்மாளம் அடிப்பவர்களுக்கு சற்று கவலை தரக் கூடியதாக அமைந்து விட்டது.

**சித்திரவதைக் கூடங்கள்**

நேற்று பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சு வணிகத்துறை ஏற்றுமதி அமைச்சு, உயர்கல்வி அமைச்சு ஆகிய மூன்று அமைச்சு களுக்குமான ஒதுக்கீடுகள் தொடர் பாக குழு நிலையில் விவாதிக் கப் பட்டன.

விவாதத்தை எதிர்க்கட்சிகளின் சார்பில் ஐ.தே.க உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஆரம்பித் தார்.

அவர் ஒரு கூற்றை முன் வைத்தார். அதாவது ஊடக வியலாளர் எக்னலிகொட முன்பு சித்திரவதைக் கூடம் ஒன்றிலேயே தடுத்து வைக் கப்பட்டிருந்தார். இப்போது காணாமலேயே போய் விட்டார் என்றார்.

நேற்று சபையில் மூன்று பிரதான அமைச்சுகள் தொடர்பான விவாதங்கள் இடம் பெற்ற போதும் சபை யில் 90 வீதமான ஆசனங்கள் காலியாகவே காணப்பட்டன.

உரையாற்றும் உறுப்பினர்களும் தமது உரை முடித்த பின் சபையை விட்டு வெளியேறி விடுகின்றனர். சில உறுப்பினர் பேசும் போது நாற் காலிகளைப் பார்த்துப் பேசும் பரிதாப நிலை ஏற்பட்டது.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர்களை இணைப்பதற்கான நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர் சேவையில் இணைப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இல 73 கண்டி வீதியில் உள்ள யாழ்.கிளையில் நடைபெறவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

இதற்கான் விண்ணப்பங்கள் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் ஊழியர்களான தகுதிபெற்ற ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் செஞ்சிலுவைச் சங்க இளைஞர் அங்கத்தவர்களிடமிருந்தும் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பிரிவுத் தலைவர் செயலாளர்களின் சிபார்சுடனும் சான்றிதழ்களுடனும் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

(வ-4-7)

**நல்லூர் பிரதேச சபை**
**தனியார் கல்வி நிறுவனங்களுக்கான கலந்துரையாடல்**

மேற்படி தனியார் கல்வி நிறுவனங்கள் தனியார் வகுப்புக்கள் நடத்துனர்களுக்கான கலந்துரையாடல் 30.11.2012 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவல கத்தில் நடைபெறும். இந்தக் கலந்துரையாடலில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதனால் இந்த நிறுவனங்களின் இயக்குநர்கள் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

(சி/1927)(3.14)

**மாணவர்களே இப்பொழுது யாழ். நகரில்!**

01. Ethical Hacking - Learn Hacking for fun
02. SEO - Learn to rank your web page No.1 in the search process
03. CMS - Learn to build your web page with in hours
04. BPO / Call center Training
05. TV / Radio Anchoring
06. Jewelery designing making
07. Personal Grooming

(04–06) Complete the training & Get employed immediately

08. Pronounce - Learn how to pronounce a-z and master English easy

அதி நவீன கற்றல் உபகரணங்கள் UK Experienced விரிவுரையாளர்களுடன் 24.11.2012 சனிக்கிழமை முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

15 ஆசனங்கள் மட்டுமே உள்ளன. பதிவுகளை உடன் மேற்கொள்ளுங்கள்.

Visalam
Wide and Beyond

**Visalam MINDS**
127/1 Temple Road Jaffna
Phone : 221 9695 Mobile : 075 979 9695
Email: admin@visalamholdings.com

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
advt@uthayan.com
0215671111

**தவறிவிட்டது**

பராநாதன் மகிந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (871831572v) சிறு தொகைப் பணம் அடங்கிய பேஸ் சாவகச்சேரிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு-0774562350

(25681)

**கார் உடனடி விற்பனைக்கு**

HS 8 XXX தொடர் இலக்கமுடைய
Torton Wira (Full Option)
கார் விற்பனைக் குண்டு
விலை 620000+Less
தொடர்பு-0772378053

(25506)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி மலர்



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மலர் நேற்றுமுன்தினம் (20.11.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிர்வாதம் -மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, துரைரட்ணம், அன்னரத்தினம் மற்றும் பவளம், பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செபதாசன், ராசு, சந்திரன், மோகன் (ஜேர்மனி), பத்மா (ஜேர்மனி), நகுலேஸ் (கனடா), குணா (கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவசோதி, பிரேமா, லலிதா, ஜெயந்தா, லூசியன், சார்ள்ஸ் ஜோஸ்வின் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.11.2012) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு 31/1, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று 4.30 மணியளவில் மரியன்னை பேலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(25694)(9.14)

31/1, பழைய பூங்காவீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
சந்திரன் குடும்பம் (Dinker)

### சிவக்கொழுந்து சாமுவேல் கயிலைநாதன்



கலட்டி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சாமுவேல் கயிலைநாதன் நேற்று (21.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனம் சிவக்கொழுந்து - சுப்பையா யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தவநாதன் மற்றும் சரோஜினிதேவி, குகநாதன் (கனடா), குமரகுருநாதன், வசந்தாதேவி (சுவிஸ்), யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகரத்தினம் தகைமலரின் அன்புக் கணவரும், தமயந்தி, துஷ்யந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், ஸ்ரீகர்ண குமார், அனித்தா, சலோமி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.11.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரை பழைய வீதி, கோப்பாயில் வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டு சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மன்னாரில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு கோப்பாய்.

தகவல்:
குமரகுருநாதன் (சகோதரன்)

### ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்



சந்திரந்தை களபூமியைப் பிறப்பிடமாகவும் இடைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (20.11.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இரசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், சிவகௌரி, சிவறஞ்சினி, சுபாசினி, கருணாகரன், சிவதர்சினி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரன், யோகராசா ஆகியோரின் பாசமிகு மாமனும், கஜமுகவாசுகி, ஹரிகரன், ஹம்ஷா, விபூஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2012) வெள்ளிக்கிழமை மெணியன்வில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பிரமணியம் வீதி,
இடைப்பிட்டி, காரைநகர். (25691)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

சங்கானையில் பிரபல்யமாக இயங்கிவரும் **Butterfly International School** இன் கிளைகள் பண்டத்தரிப்பு, மானிப்பாய், யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் ஆரம்பிக்க வீடுகள் தேவை. தகுதியான வீடுகள் உடையோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 0777211973

(25886)(3.14)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து

### களஞ்சிய முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

சம்பள அளவுத் திட்டம் : 9950 - 11700

85X10 - 90X10

(குறியீட்டு இல.208 - 13 31/99 க் கமைய)

இதரபடிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள் :-

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறை பதவியொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 13ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறையொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரண தரம்) சான்றிதழ்/ க.பொ.த (சாதாரண தரம்) சான்றிதழ் கணிதம் / வர்த்தக எண்கணிதம் / மற்றும் சிங்கள மொழி/ தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும், தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

விண்ணப்பதாரிகள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 10.00 செலுத்திப் பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''களஞ்சிய முகாமையாளர் விண்ணப்பம்'' என எழுதி, ''பொது முகாமையாளர், யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.'' என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2012.12.05 ஆம் திகதிக்கு முன்பு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்.
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து.

## இராணுவ வாகனம் விபத்து படையினர் 6 பேர் காயம்

வடமராட்சி, நவ. 22.

புலோலி ஆனைவிழுந்தான் - குடத்தனை வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 6 படையினர் காயமடைந்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை மு.ப சுமார் 9:30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த இராணுவ வாகனம் மரம் ஒன்றுடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த படையினர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-8)

## நுளம்பு பரவும் சூற்றாடலால் இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.22

ஊர்காவற்றுறையில் டெங்கு நுளம்பு பெருகும் வகையில் வீட்டுத் தண்ணீர்த்தொட்டியில் நீர்தேக்கி வைத்திருந்த இருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த இரண்டு வழக்குகளும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. (க-4)

## சாயி அவதார தினம்

யாழ்ப்பாணம், நவ.22

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 87 ஆவது அவதாரதின நிகழ்வு நாளை நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோயிலடியிலுள்ள சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளதுடன் சேவா நிலையத்தினரின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (16)

## 60 ஆவது அகவையின் அகமகிழ்வில்

HAPPY BIRTH DAY



திருமதி
செபஸ்தியாம்பிள்ளை
திரேசம்மா

Best Wishes

இந்நன்னாளில் எல்லாம் வல்ல இறைவனின் ஆசீரும் கிருபையும் நிறையப்பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்தும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சில்லாலை கிழக்கு, பண்டத்தரிப்பு.

(சி/1923)(2-6)

## சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழையமாணவர் தாய்ச்சங்க பொதுக்கூட்டம்

நாள் : 23.12.2012 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : பிற்பகல் 3.00 மணி

இடம் : கந்தையா உபாத்தியாயர் மண்டபம், ஸ்கந்தா

மேற்படி எமது தாய்ச்சங்கப் பொதுக்கூட்டம் 23.12.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளமையால் புதிதாக இணையவிரும்பும் பழையமாணவர்கள் 10.12. 2012 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அதிபரிடம் அங்கத்துவ விண்ணப் பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அங்கத்துவக் கட்டணத்துடன் சமர்ப்பிக்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம். 17.12.2012 திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிர்வாகசபைக் கூட்டத்தில் புதிய விண்ணப்பப்படிவங்கள் பரிசீலிக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

(25886)(3.14) செயலாளர்.

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
1967 ★ 03 ★ 16

உதிர்வு
2006 ★ 11 ★ 30



### இரங்கநாதன் பிரபாசங்கர்

(குஞ்சுபவி)

திதி - தசமி

அன்பு பொங்கும் எம் அப்பாவே!
ஏழு ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்து வேதனை மாறிடுமோ
களங்கமற்ற அன்பும்
எதிர்பார்ப்புகள் அற்ற உங்கள்
அழகிய மனதும் இனி எப்போதும்
யாரிடமும் காணமாட்டோம்
உங்களின் பிரிவின் வலி
எப்போதும் மாறாது.

(சி/2827)(3.14) உசன், மிருசுவில். குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 15 |
| 02 | 12 |
| 1953 | 2010 |



சிவாகம கிரியாரத்தினம், சிவாகம அனுசாரித சார்தூல

**கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ. சிவ நித்தியானந்த சிவாச்சாரியார்**

*(சங்கானை இலுப்பைத்தாழ்வு சிவசுப்பிரமணிய கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஆதின குரு முதல்வர்)*

திதி- கார்த்திகை சுக்கில பட்ச தசமி (திகதி 22.11.2012)

குருமுதல்வர் அவர்களது ஆத்மசாந்தி பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (22.11.2012) வியாழக்கிழமை முருகமூர்த்தி வீதி, சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். ஈரவிழிகளுடன் எமது நினைவலைகளை மீட்டிப்பார்க்கின்றோம். சிவாச்சாரியாரது அன்பர்கள் அபிமானிகள், பக்தர்கள் ஐயாவின் ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இவ்வண்ணம்**
**சிவ நித்தியானந்த சிவாச்சாரியார்**
**சங்கானை. குடும்பத்தினர்.** (சி/1925)(9.14)

## கோப்பாயில் இன்று நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ.22

கோப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிறப்பு சான்றிதழ்களைப் பெறுவதற்கான நடமாடும்சேவை இடம் பெறவுள்ளது எனக் கோப்பாய்பிரதேச செயலர் ம. பிரதீபன் தெரிவித்தார். இந்த நடமாடும் சேவை ஊடாக காலங் கடந்த பிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் இந்த நடமாடும் சேவை ஊடாகப் பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்கு உத்தேச வயதுச் சான்றிதழும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

விளம்பர தொடர்புகளுக்கு
ads@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்கலாதேவி ஈஸ்வரலிங்கம்

(ஓய்வு பெற்ற நெசவுப் போதனாசிரியர்)



சுன்னாகம் ஐயனார் வீதியைச் சேர்ந்த திருமதி புஸ்கலாதேவி ஈஸ்வரலிங்கம் (ஓய்வு பெற்ற நெசவுப் போதனாசிரியர்) நேற்று முன்தினம் (20.11.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஈஸ்வரலிங்கத்தின் (ஓய்வுபெற்ற கணக்காளர், இ.போ.ச, வவுனியா) அன்பு மனைவியும், சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகர் - அபிராமி தம்பதியரின் அன்பு மகளும், வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுவேந்தினியின் (UK) பாசமிகு தாயும், யோகரஞ்சனின் (UK) அன்பு மாமியும், ஆகாஷ், அக்ஷயா, அமீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வைரமுத்து தவம், நவரத்தினம், திருத்தணிகை, காலஞ்சென்ற வாசிநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அற்புதலிங்கம், அமிர்தலிங்கம், நவரத்தினலிங்கம் ஜெகதீஸ்வரி, ரதீஸ்வரி மற்றும் ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22/11/2012) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.ஈஸ்வரலிங்கம் (கணவர்)

ஐயனார் வீதி,
சுன்னாகம். (25701)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெள்ள இடர் வேணாகுளம் வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வைப் பிரதேச செயலர் திருமதி சதீஷன் மஞ்சுளா தேவி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசாவும் உள்ளார். (ம-50)

# மாதகல், சேந்தாங்குளம் மக்களின் உதவிகள் தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,நவ.22

மாதகல் கிழக்கு, சேந்தாங்குளம் பகுதியில் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பிலும், அவர்களின் தேவைகள் தொடர்பிலும் ஆஸ்திரேலிய எயிட் நிறுவனம் நேற்று முன்தினம் நேரில் ஆய்வு மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய எயிட் நிறுவனத்தின் நிதியில், ஐ.ஓ.எம். நிறுவனத்தால் மாதகல் கிழக்கு மற்றும் சேந்தாங்குளம் பகுதியில் மீனவர்களுக்குப் பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட உதவிகள் மீனவர்களுக்கு உரிய பயனளிக்கின்றனவா, மீனவர்களின் மேலதிக தேவைகள் என்ன என்பது தொடர்பில் ஆய்வு செய்வதற்காக ஆஸ்திரேலியத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், ஆஸ்திரேலிய எயிட் நிறுவன அதிகாரிகளுமாக 4 பேர் கொண்ட குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர்.

இவர்கள் நேற்றுக் காலை மாதகல் கிழக்குக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். மாதகல் கிழக்கில் கட்டிக்கொடுக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தைப் பார்வையிட்ட பின்னர் அந்தப் பகுதி மக்களுடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

இதன்போது அந்தப் பகுதி மக்களால், மீன்களைப் பாதுகாத்து வைக்ககூடிய கூலர் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் பின்னர் இந்தக் குழுவினர் சேந்தாங்குளம் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு கடற்தொழிலாளர்களுக்குரிய பொதுநோக்கு மண்டபம், துறைமுகம் ஆழமாக்கல், மீன் ஏல விற்பனை நிலையம் என்பன ஆஸ்திரேலிய எயிட் நிறுவன உதவியில் கட்டப்பட்டுள்ளன.

இவை அடுத்த மாதம் பொது மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. இவற்றையும் அவர்கள் பார்வையிட்டதுடன், மக்களையும் சந்தித்து கலந்துரையாடினர். (ம-5-13)

## சட்டவிரோத மது விற்பனை செய்த மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.21

சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட மூவருக்கு 35 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொருவருக்குப் பிடியாணை பிறப்பித்தது நீதிமன்றம்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

காரைநகரைச் சேர்ந்த 2 பெண்கள் உட்பட 4 பேருக்கு எதிராகச் சங்கானை மதுவரிப் பரிசோதகர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அவர்களில் ஒரு பெண்ணுக்கு முற்குற்றம் இருந்தமையால் அவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றைய இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொருவர் நீதிமன்றில் முன்னிலையாகாதமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (த-4)

# அளவெட்டிப் பகுதி வயல்களில் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகள்

**தற்போது மழை பொய்த்துப் போயுள்ள நிலையில் வயல்களில் தண்ணீர் இல்லாதமையால் கிடைத்த மானிய உரத்தையும் தூவ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.**

அளவெட்டி, நவ.22

அளவெட்டி, கந்தரோடை, மல்லாகம், பெருமாக்கடவை, பினாக்கை வயல்களில் உள்ள நெற்பயிர்களை இனந்தெரியாத ஒரு பூச்சி இனம் தாக்கி வருகின்றது என்று அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் நெற்பயிர்கள் பழுப்பு நிறத்தில் காட்சியளிக்கின்றன எனவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இது நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தியும் பயன் கிடைக்கவில்லை என்றும் உரிய தரப்பு இதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயிகள் நட்டமடையாது பாதுகாக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது மழை பொய்த்துப் போயுள்ள நிலையில் வயல்களில் தண்ணீர் இல்லாதமையால் கிடைத்த மானிய உரத்தையும் தூவ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

உரம் போடாமல் விடப்பட்டுள்ளதால் பயிர்கள் வளர்ச்சி இன்றிக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் எமக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்க விவசாய ஆராய்ச்சி உத்தியோத்தர் எவரும் இந்தப் பிரதேசத்தில் இல்லை எனவும் குறித்த பிரதேச அலுவலகத்துக்கு விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (ம-36)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 22

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் யாழ். நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். நல்லூரடியை அண்மித்த பகுதியில் சந்தேகநபர் 725 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஓட்டோ ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோதே பொலிஸாரால் வழிமறித்துக் கைது செய்யப்பட்டார்.

பண்டத்தரிப்பு பனிப்புலத்தைச் சேர்ந்த இவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் அவர் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (த-14)

## பொதுச் சந்தைகளைக் கண்காணிக்க கவன சபை குழுக்கள் நியமனம்

வடமராட்சி, நவ.22

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான நான்கு பொதுச்சந்தைகளைக் கண்காணிக்க கவனசபை உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சபைத்தலைவர் பொ. வியாகேசு தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் குழுக்கூட்டத்தில் இக்குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

பொதுச்சந்தைகளும், அவற்றிற்கான குழு உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

உடுப்பிட்டிச் சந்தை- மு. ஜெகநாதன், க.பாலசுப்பிரமணியம், த. இராசையா, பொ. கணேஸ்.

நெல்லியடிச்சந்தை- ஆ. மதியரசன், க. இரத்தினம், ந. கந்தசாமி, க. பரஞ்சோதி, பொ. குகதாஸ்

சாண்டாசந்தை- ம. சத்தியநாதன், ந. கந்தசாமி

கோயிற்சந்தை- இ. சாந்தசொரூபன், க. பரஞ்சோதி, பொ. தம்பிமுத்து. (ம-8)

## பொருத்தமற்ற இடத்தில் மின் விளக்குகள் பொருத்தல் வர்த்தகர்கள் விசனம்

**சந்தை வளாகத்துக்குள் மின் விளக்குகளைப் பொருத்தித் தருமாறு வர்த்தகர்கள் கோரிக்கை**

வலி.வடக்கு,நவ.22

மானிப்பாய் மத்திய சந்தை வளாகத்தில் பொருத்தமற்ற இடத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் குறித்து விசனம் தெரிவித்துள்ள வர்த்தகர்கள், வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புக் கருதியும் அங்கு வரும் மக்களின் நலன் கருதியும் சந்தை வளாகப் பகுதிக்குள் பொருத்தமான இடத்தில் அவற்றைப் பொருத்துமாறு பிரதேச சபை நிர்வாகத்தினரைக் கோரியுள்ளனர்.

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் பிரபல்யமாக விளங்கும் மானிப்பாய் மத்திய சந்தைப் பகுதியில் பல வர்த்தக நிலையங்கள் உட்பட மரக்கறி, கடலுணவு, இறைச்சி ஆகிய விற்பனை நிலையங்களும் இருக்கின்றன.

மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் மிகுதியாக இருக்கும் மரக்கறி வகைகளைச் சந்தைக் கட்டடத்தில் மூடிக் கட்டி வைப்பது வழக்கம். அங்குள்ள வர்த்தக நிலையங்களும் 9 மணி வரை திறந்து இருக்கின்றன.

இந்தநிலையில் வர்த்தக நிலையங்களின் இரவு நேரப் பாதுகாப்புக் கருதியும் அங்கு வரும் மக்களின் நலன் கருதியும் சந்தை வளாகத்துக்குள் மின் விளக்குகளைப் பொருத்தித் தருமாறு வர்த்தகர்கள் பிரதேச சபை நிர்வாகத்தினரிடம் கோரியிருந்தனர்.

வர்த்தகர்களின் கோரிக்கையை அடுத்து சந்தை வளாகத்துக்குச் செல்லும் வாசலில் ஒரு மின்குமிழ் மட்டும் பிரதேச சபையால் பொருத்தப்பட்டுள்ளது.

தேவையான இடங்களில் மின் விளக்குகளைப் பொருத்தாமல் பொருத்தமற்ற இடத்தில் மின்விளக்குகளைப் பொருத்தியமை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள வர்த்தகர்கள் பெறுமதி வாய்ந்த வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புக் கருதி சந்தையின் உட்பகுதியில் விளக்குகளைப் பொருத்துமாறு கேட்டுள்ளனர். (ம-115)

# ஆளணி அங்கீகாரம் கிடையாவிடில் போராட்டம்

## சுன்னாகம் சங்கப் பணியாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஆளணி அங்கீகாரம் உடனடியாகப் பெற்றுத் தராவிட்டால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும்.

இவ்வாறு கூட்டுறவுச் சங்க தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக தொழிற்சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

சங்கத்தில் இதுவரை 27 பணியாளருக்கு பதவி நிர்ணய ஆளணி அங்கீகாரத்துக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

ஆனால் இதுவரை ஆளணி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

சங்கத்தின் தலைவருடன் இது தொடர்பாகத் தொடர்பு கொண்டு கேட்டபோது , இரண்டு வாரங்களில் இதற்கான ஆளணி அங்கீகாரம் பெற்றுத் தரப்படும் என்று உறுதியளித்தார்.

அவர் உறுதிமொழியளித்த காலஅவகாசம் நாளையுடன் நிறைவடைகின்றது. இதுவரைக்கும் எந்தவிதமான சாதகமான பதில்களும் எமக்குத் தரப்படவில்லை.

இந்தநிலையில் எமக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும்.

தற்போது செப்ரெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவே வழங்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக ஆளணி அங்கீகாரம் மற்றும் சம்பள உயர்வு எதுவும் இன்றிப் பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் சங்க நிர்வாகம் எமக்குச் சாதகமான பதிலைத் தராத பட்சத்தில் நாம் எதிர்வரும் 29 ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

இது சம்பந்தமான கடிதம் ஒன்றைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளோம் என்றார். (ம-17)

## பரு. நகரசபை அலுவலகத்துக்கு ரூ. 4 கோடி செலவில் புதிய கட்டடம்

வடமராட்சி, நவ.22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகர சபைக்கான புதிய அலுவலகக் கட்டடம் சுமார் 4 கோடி, 96 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை கடற்கரை வீதியின் ஆரம்ப காலத்தில் நகரசபை அலுவலகம் இருந்த அதே இடத்தில் கல்லூரி வீதியைப் பிரதான வாசலாகக் கொண்டு கட்டப்பட்டு வரும் இந்தக்கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையை எட்டியுள்ளன. 1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பருத்தித்துறை கடற்கரைப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகரசபை அலுவலகம் கைவிடப்பட்டு, நகரசபை இடம்பெயர்ந்தது. போரின் போது இக்கட்டடம் சேதமடைந்தது.


தற்போது அதே இடத்தில் புதிய அலுவலக மாடிக்கட்டட நிர்மாணப்பணிகள் முடிவடையும் நிலையை எட்டியுள்ளன.(ம- 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளத்தைச் சுற்றியுள்ள மக்களுக்கு தற்காப்பு பயிற்சி வழங்குவது அவசியம்

கூடங்குளம் அணு உலையைச் சுற்றியுள்ள 40 கிராமங்களிலும், 'மாக் ட்ரில்' எனப்படும் ஆபத்துக் கால தற்காப்புப் பயிற்சிகளை வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்புத் தொடர்பாக, இதுவரை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? மேலும் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்பது தொடர்பாகத் தமிழக அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.



கூடங்குளம் அணு உலைக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்போது, ஆபத்து காலத் தற்காப்புப் பயிற் சிகள் ஒரு கிராமத்தில் மட்டுமே வழங்கப்பட்டிருப்பதாக, மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிரசாந்த் பூஷண் சுட்டிக் காட்டினார்.

தமிழக அரசின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குரு கிருஷ்ண குமார், இரண்டு கிராமங்களுக்குச் சேர்த்து ஒரே இடத்தில் பயிற்சி வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஆனால், ராதாகிருஷ் ணன் மற்றும் தீபக் மிஸ்ரா தலைமையிலான குழு, அதை ஏற்க மறுத்தது. கூடங்குளம் அணு உலையைச் சுற்றி 16 கி.மீ. சுற்றளவில் உள்ள 40 கிராமங்களிலும் இதுபோன்ற பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சில்லறை வர்த்தகத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு எதிராகத் தீர்மானம்

## தேசிய ஜனநாயக கூட்டணி முடிவு

சில்லறை வர்த்தகத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அனுமதிக்கும் அரசின் முடிவை எதிர்த்து, வாக் கெடுப்புடன் கூடிய தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வர பிரதான எதிர்க்கட்சிக் கூட்டணியான தேசிய ஜனநாயக் கூட்டணி முடிவு செய் துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை, பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானியின் இல்லத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டணியின் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம், நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை குறித்து அரசு தாக்கல் செய்த அறிக்கையில், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது தொடர்பாக, மாநில அரசுகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் ஆலோசனை நடத்தப்படும் என்றும், அதுவரை எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது என்றும் உறுதியளித்தது. ஆனால், அரசு அந்த உறுதி மொழியைக் காப்பாற்றவில்லை என்று தேசிய ஜனநாயக் கூட்டணியின் கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

# தூக்கை ரத்துச் செய்யும் ஐ.நாவின் தீர்மானத்தை எதிர்க்கிறது இந்தியா

நியூயோர்க், நவ.22

தூக்குத் தண்டனையை தடை செய்யக்கோரும் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்துக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 3 ஆவது குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. சமூக மற்றும் மனிதநேய விடயங்களைக் கவனிக்கும் மேற்படி குழுக் கூட்டத்தில், தூக்குத் தண்டனையைத் தடை செய்யும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

தூக்குத் தண்டனை விதிப்பதை முழுமையாகத் தடை செய்ய வேண்டும். உலகம் முழுவதும் இது நடைமுறைக்கு வரும் வரை, தூக்குத் தண்டனை விதிப்பதை அனைத்து நாடுகளும் நிறுத்தி வைக்க வேண்டும் என்று அந்த வரைவு தீர்மானத்தில் கூறப்பட்டது.

மேலும், 18 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு குறித்த தண்டனையில் விலக்கு அளிக்க வேண்டுமென்றும், தூக்குத் தண்டனைகளுக்கான குற்றங்கள் பட்டியலில் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்து அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, ஜப்பான், ஈரான், வடகொரியா, சிரியா, சிம்பாவே உட்பட 39 நாடுகள் வாக்களித்தன. 36 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஆஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன், பிரேசில், தென்னாபிரிக்கா, இஸ்ரேல் உள்பட 110 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. எனினும், தீர்மானம் எந்த உறுப்பு நாட்டையும் கட்டுப்படுத்தாது. அதேசமயம், தீர்மானத்துக்கு ஆதரவு அதிகரிக்கும் போது, பொதுச்சபை யில் நிறைவேறும் வாய்ப்பு ஏற்படும். உலகம் முழுவதும் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று ஐ.நா. சபையில் பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற இதே போன்ற வாக்கெடுப்பில் 107 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன.

இந்தியா வெளியிட்ட விளக்கத்தில், 'ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் சட்ட நடைமுறைகளை வகுத்துக் கொள்ளும் உரிமை உண்டு. இதில் குறுக்கிடுவது நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும். இப்போது தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாததால் எதிர்க்கிறோம்' என்று கூறியுள்ளது. (வ)

# தூக்கிலிடப்பட்டார் தீவிரவாதி கசாப்

மும்பை, நவ. 22

மும்பை தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப் நேற்றுக் காலை புனே சிறையில் தூக்கில் இடப்பட்டார் என்று மகாராஷ்டிர மாநில உள்துறை அமைச்சர் ஆர்.ஆர். பட்டீல் உறுதிப்படுத்தியுள்ளார். அவருடைய கருணை மனுவை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நிராகரித்ததை அடுத்து தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.



2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி மும்பையில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் அதிகமானோர் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் அஜ்மல் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டார். மும்பை சிறையில் அடைக்கப்பட்ட கசாப்புக்குத் தூக்குத் தண்டனை விதிக்க, மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. பின்னர் இதை உச்சநீதி மன்றமும் உறுதி செய்தது.

இந்தநிலையில், கசாப் தரப்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் கருணை மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை மகாராஷ்டிர அரசின் பரிந்துரையின் பேரில் மத்திய உள்துறை அமைச்சகம் நிராகரித்தது.

மேலும், கசாப்பின் கருணை மனுவை நிராகரிக்குமாறு ஜனாதிபதிக்கும் பரிந்துரை செய்யப்பட்டது. அதனால் கசாப்பின் கருணை மனுவை ஜனாதிபதி பிராணாப் முகர்ஜியும் நிராகரித்தார்.

இதனையடுத்து, புனேயில் உள்ள எரவாடா சிறையில் நேற்றுக் காலை 7.30 மணிக்கு கசாப்புக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதேவேளை தூக்கிலிடப்பட்ட கசாப்பின் உடல் புனே எரவாடா சிறை வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கசாப்பின் உடலைப் பெற பாகிஸ்தான் அரசு முன்வராததால் இந்தியாவிலேயே அடக்கம் செய்யப்பட்டது என்று மகாராஷ்டிர முதல்வர் பிருத்திவிராஜ் சவான் தகவல் தெரிவித்துள்ளார். மேலும் தூக்கிலிடுவதற்கான திகதியை நீதிபதி தான் முடிவு செய்தார் எனவும் விளக்கமளித்துள்ளார். (வ)

# ஊடகக் கருத்து சுதந்திரத்தில் இந்தியாவுக்கு 131 ஆவது இடம்

சென்னை,செப்.22

எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு வெளியிட்டுள்ள இந்த வருடத்துக்கான தரவுகளின்படி ஊடக கருத்துச் சுதந்திரத்தில் இந்தியா 131 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதேவேளை பிறீடம் ஹவுஸ் நிறுவனம் நடத்திய இணையக் கருத்து சுதந்திரம் தரவரிசையில் இந்தியாவுக்கு 'ஓரளவு சுதந்திரம்' பிரிவில் இடம் கிடைத்துள்ளது.

சிவசேனா கட்சித் தலைவர் பால் தக்கரே பற்றி அண்மையில் சர்ச்சைக்குரிய வகையில் கருத்து பரப்பியதாகக் கூறி இரண்டு இளம் பெண்கள், மகா ராஷ்டிர பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கடந்த இரு தினங்களுக்கு முன்னர் காலமான பால் தக்கரேயின் இறுதி மரணச்சடங்கு நிகழ்வுகளுக்காக மும்பையை ஸ்தம்பிக்கச் செய்தது தேவையற்றது என ஒரு பெண் பேஸ்புக்கில் பதிவொன்றை போட்டதற்காகவும், அதனை லைக் செய்ததற்காகவும் இரு பெண்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இது தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான சட்ட திட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எடுத்துக்காட்டு எனவும், அந்தப் பெண்களைக் கைது செய்த பொலிஸாரைப் பதவி விலக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் மகாராஷ்டிர முதல்வர் பிருத்விராஜ் சவனிடம் முறையிட்டனர்.


மேலும் உள்துறை அமைச்சகமும் குறித்த விவகாரம் தொடர்பில் மகா ராஷ்டிர அரசிடம் விசாரணை அறிக்கை கோரியுள்ளது. குறித்த தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் கீழ் குறித்த பெண்களைக் கைது செய்தது சரியான நடவடிக்கையா எனத் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சும் விளக்கமளிக்குமாறு கோரியுள்ளது. (வ)

# இந்திய—பங்களாதேஷ் எல்லை வரையறை விவாதம்

டில்லி, நவ.22

இந்தியா -பங்களாதேஷ் இடையேயான எல்லையை வகுப்பது குறித்து இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப் பட உள்ளது.

2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பங்களாதேஷ் சென்ற பிரதமர் மன்மோகன்சிங், இருநாடுகளுக்கான எல்லை பிரிப்பு ஒப்பந்தம் செய்தார். அதன்படி இந்தியாவுக்குச் சொந்தமான 17 ஆயிரத்து 19 ஏக்கர் நிலம் பங்களாதேஷின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. அதே போன்று பங்களாதேஷுக்குச் சொந்தமான 7 ஆயிரத்து 110 ஏக்கர் நிலம் இந்தியாவின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. அதனைப் பிரித்து எல்லையை வரையறை செய்வதும் இது தொடர்பாக அரசியல்சாசன திருத்தப் பிரேரணை கொண்டு வருவது குறித்தும் இன்று நடைபெறவுள்ள மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.



...லாவில் உள்ள துக்லகங் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்திய புத்த மதத் தலைவர் தலாய் லாமா.

**ராஜீவ் கொலை வழக்கு:**

# ஆயுள் தண்டனைக் கைதி வீட்டுக்கு செல்ல அனுமதி

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவருக்கு 15 நாள் வீடு செல்ல அனுமதித்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உத்தர விட்டது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். அவர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, மதுரை மத்தியச் சிறையில் வைக்கப் பட்டுள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு இடையே சொத்துகளைப் பங்கிட வேண்டி உள்ளதால், ரவிச்சந்திரனை ஒரு மாதத்துக்கு விடுவிக்க வேண்டும் என்று அவரது தாயார் ராஜேஸ்வரி மனு தாக்கல் செய்தார். குறித்த மனுவை விசாரித்த தனி நீதிபதி, மூன்று முறை 14 நாள்கள் வீடு செல்ல ரவிச்சந்திரனுக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் நிதி முறைகேடு
# சர்கோசிக்கு அழைப்பாணை



தேர்தல் சமயத்தில் நிதியை முறைகேடாகப் பயன்படுத் தியமை தொடர்பான வழக்கில் முன்னாள் பிரான்ஸ் ஜனாதி பதி சர்கோசிக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள் ளது.

லோரியல் அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பு நிறு வனத்தின் உரிமையாளர் லிலி யன் பெட்டன்கோர்ட் 2007 தேர்தல் நிதிக்காக 4 மில்லி யன் யூரோ பெற்றார் என்று வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைகளுக்காக பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோசி நீதி மன்றத்திற்கு வருவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சர்கோசிக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி யுள்ளது என்று பிரான்ஸ் நாளி தழ் ஒன்று தெரிவித்துள்ளது.

''சர்கோசி தன் மீது சுமத் தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு களை மறுத்துவருகிறார். அவர் லண்டனில் நாளை மாலை யில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ளார். உடனே பிரான்ஸ் திரும்பும் திட்டம் எதுவுமில்லை என்று சர்கோசி தெரிவித்துள்ளார். எனினும் அவர் போர்டியூ நீதிமன்றத்துக்கு வரும் சாத் தியக்கூறு இருப்பதும் உண் மையே'' என்று அந்த நாளி தழ் தெரிவித்துள்ளது.

## இஸ்ரேல் - பலஸ்தீனமிடையே
# பதற்றத்தை தணிக்க விரைந்தார் ஹிலாரி





**இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையே பதற்றம் அதிகரித்துள்ளதை அடுத்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய லர் ஹிலாரி கிளின்டன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விரைந்தார்.**

கடந்த 7 நாள்களாக காஸா மீது இஸ்ரேல் வான்வழி தாக்கு தல் நடத்தி வருகிறது. இதில் அப்பாவி பொதுமக்கள் உள் பட 100இக்கும் மேற்பட் டோர் உயிரிழந்துள்ளனர். இந் தத் தாக்குதலை முடிவுக்கு கொண்டுவர எகிப்தும், ஐ.நா வும் முயற்சிகளை மேற்கொண் டுள்ளன.

இந்தநிலையில் போர் பதற்றத்தைத் தணிக்கும் வித மாக, அமெரிக்க வெளியுறவு செயலர் ஹிலாரி கிளின்டனை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்ப அமெரிக்க ஜனாதி பதி ஒபாமா முடிவெடுத்துள் ளார். தற்போது கம்போடியா தலைநகர் பினோம் பென் னில் நடைபெற்று வரும் 'ஆசி யான்-10' மாநாட்டில் ஒபாமா பங்கேற்று வருகிறார். அவரு டன் ஹிலாரி கிளின்டனும் சென்றுள்ளார்.

அதனை முடித்துக் கொண்டு ஹிலாரி கிளின் டன் அவசரமாக இஸ்ரே லுக்குப் புறப்பட்டுச் சென் றார்.

ஹிலாரி கிளின்டன், இந்தப் பயணத்தின் போது இஸ்ரேல் பிரதமர் பெஞ்ச மின் நெதன்யாகுவை இஸ் ரேல் தலைநகர் ஜெருசலே மில் சந்திக்கிறார். பின்னர் ரமல்லாவில் பலஸ்தீன அதிகாரிகளையும் சந்திக் கும் அவர், இறுதியாகப் போர்நிறுத்த முயற்சியில் ஈடு பட்டுள்ள எகிப்து நாட்டு தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக் கப்பட்டது.

## குர் –ஆனை எரித்ததாக குற்றம் சாட்டப்பட்ட சிறுமி விடுதலை

பாகிஸ்தானில் குர் ஆனின் சில பக்கங்களை எரித்ததாக ரிம்ஷா என்ற 14 வயதுக் கிறிஸ் தவ சிறுமி மீது குற்றம் சுமத் தப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முஸ்லிம்களின் புனித நூலான குர் ஆனின் சில பக்கங்களை எரித்ததாக 14 வயது சிறுமி ரிம்ஷா மீது குற்றம் சுமத்தப்பட் டதையடுத்து அவர் கைது செய் யப்பட்டார். இந்த முறைப் பாட்டை முஸ்லிம் மத குரு ஒருவர் செய்திருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கை விசாரித்த நீதிமன் றம், சிறுமியை விடுவித்தது. அத்துடன் போலி சாட்சியங் களைத் தயார் செய்தார் என்று மதகுரு மீது வழக்கு தொடர உள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

## வியாழனை விட பெரிய கிரகம் கண்டுபிடிப்பு

வியாழன் கிரகத்தை விட 13 மடங்கு பெரிய கிரகம் ஒன்றைக் கனடா வின் றொரன்ரோ பல்க லைக்கழகத்தைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானிகள் குழு கண்டுபிடித்துள்ளது.

இந்தக்குழு 4 ஆண்டு ஆய்வுகளின்பின் சூரிய குடும்பத்தில் மேலும் ஒரு புதிய கிரகம் இருப்பதை கண்டு பிடித்தது. அந்தக்கிர கம் சூரியனை விட 2 1/2 மடங்கு பெரியது. அதே நேரத்தில் வியாழன் கிர கத்தைவிட 13மடங்கு பெரி யதாக காணப்பட்டதுஎன்று தெரிவிக்கப்பட்டது. நெப் டியூனை விடவும் பெரிய தாக உள்ளது. இதற்கு 'சூப் பர் ஜுபிடர் (வியாழன்)' என்று பெயரிட்டுள்ளனர்.

## கொங்கோவின் கோமா நகரத்தை கைப்பற்றினர் எம்—23 போராளிகள்


கொங்கோ நாட்டின் வளம் மிகுந்த பகுதியான கிழக்குப்பகுதியில் உள்ள கோமா நகரை எம்-23 போராளிக் குழு கைப்பற்றியுள்ளது.

கொங்கோ இராணுவம் மற்றும் ஐ.நா. அமைதிப்படை யின் தடைகளையும் மீறி அந்த நகரைப் போராளிகள் கைப்பற் றியுள்ளனர். அங்கு நடந்த மோதலால் பொதுமக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங் களுக்குச் சென்றுள்ளனர்.

''அரசு பேச்சு நடத்தவர வில்லையென்றால் எமது தாக்குதல் தொடரும். அடுத்து புகாவு நகரைக் கைப்பற்று வோம்'' என்று எம்-23 போரா ளிக்குழுத் தலைவர் சூல் தானி மகெங்கா தெரிவித் துள்ளார்.

இதேவேளை, ஐ.நா. அமைதிப்படை, போராளிக் குழுக்களைத் தடுத்து நிறுத்த வில்லை என்று பிரான்ஸ் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

## கேட் மிடில்டன் கர்ப்பம்?



இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மனைவி கேட் மிடில்டன் கர்ப்பமாக உள் ளார் என்று அவரது தோழி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து இளவரசர் வில்லியம்(வயது 30) தனது நீண்ட நாள் காதலியான கேட் மிடில்டனை (வயது 30) கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி திருமணம் செய்து கொண்டார்.

அவர்கள் திருமணம் முடிந்ததில் இருந்தே கேட் எப்பொழுது கர்ப்பமாவார் என்ற பேச்சு தான். இந்த நிலையில் அவர் கர்ப்பமாக இருப்பதாக அவரது தோழி ஜெசிகா ஹேர என்பவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

''இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை அடுத்த மாதம் வெளியிட உள்ளனர் வில்லியம் கேட் தம்பதி யினர். இரண்டு குழந்தைகள் போதும் என்றும் அவர் கள் திட்டமிட்டுள்ளனர்'' என்று ஜெசிகா தெரிவித் துள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா ஆகியோர் கிழக்கு ஆசிய மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## 2012 உலக அழிவிலிருந்து தப்ப இடம்பெயரும் பிரான்ஸ் மக்கள்
### அரசுக்குப் பெரும் தலையிடி

2012ஆம் ஆண்டு டிசெம் பர் உலகம் அழியப் போகி றது. இதுதான் சமீப காலமாக அதிகம் பேசப்படும் செய்தி.

புராதன மாயன் நாள் காட்டியில் இது குறிப்பிடப் பட்டுள்ளது என்றெல்லாம் கூறப்படுகிறது.

இந்தநிலையில் மாயன் நாள்காட்டியில் குறிப்பிடப் பட்டதை வைத்துத் தற்கால சோதிடர்களும் தங்கள் முழுத் திறமையைக் காட்டி வரு கின்றனர்.

இந்த விடயத்தில் பிரான்ஸ் சோதிடர்களும் 'மாயா' கதைக்கு 'மசாலா' சேர்த்து தங்கள் திறமையைக் காட்டி யுள்ளனர்.

''பிரான்ஸ் நாட்டின் தென் மேற்கே ஒரு சிறிய கிராமத் தில் உள்ள ஒரு மலை டிசெம்பர் 21ஆம் திகதி பிளக் கும்.

அதிலிருந்து ஒரு வேற்றுக் கிரக விண்கலம் வெளியே வரும். அந்த விண்கலத்தில் ஏறிக் கொள்பவர்கள் மட் டுமே தப்புவார்கள். மற்றவர் கள் எல்லோருமே இந்தப் பூமி யோடு சேர்ந்து மடிந்து போவார் கள்'' என்று கூறியுள்ளனர்.

இதனால் பிரான்ஸ் அரசுக்கு வந்துள்ளது பெரும் தலை யிடி.



சோதிடர்கள் கூறியதை நம்பி அந்தப் பகுதிக்கு வரும் ஆள்களின் எண்ணிக்கை சமீபகாலத்தில் பல மடங்கு அதிகரித்துள்ளது. டிசெம்பர் 21ஆம் திகதி நெருங்க நெருங்க இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இத னால் பெரும் பிரச்சினைகள் உருவாகலாம் என்று பிரான்ஸ் உளவுத்துறை எச்சரித்துள் ளது.

இதையடுத்து இப்போதே அங்கு பாதுகாப்புப் படையி னரைப் பிரான்ஸ் குவிக்க ஆரம்பித்துள்ளது. மேலும் அந்தப் பகுதிக்குள் வெளி யாள்கள் நுழையவும் தடை விதித்துள்ளது.



## இஸ்ரேல் உளவாளியை மோ.சைக்கிளில் கட்டி இழுத்துச் சென்ற ஹமாஸ்

இஸ்ரேலிய உளவாளி ஒருவரை மோட்டார் சைக்கி ளின் பின்புறத்தில் கட்டி நடுவீதியில் ஹமாஸ் போரா ளிகள் இழுத்துச் சென்றுள் ளனர்.

இஸ்ரேலியப் படையினருக் கும் பலஸ்தீனிய ஹமாஸ் போராளிகளுக்குமிடையே மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து 8 நாள்களாக பலஸ்தீனம் மீது இஸ்ரேல் வான் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்தநிலையில் பலஸ் தீனத்தில் சிக்கிக்கொண்ட 6 இஸ்ரேலிய உளவாளிகளை ஹமாஸ் போராளிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

பின்னர் இந்த 6 பேரில் ஒருவரின் உடலத்தை மட்டும் மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் கட்டி வீதிகளில் இழுத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டு கட்டி மிரட்டியவருக்கு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை

இளம் பெண்ணின் கழுத்தில் வெடிகுண்டை வைத்து 10 மணி நேரமாக அச்சுறுத்திய நபருக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றம் 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர் டக்ளஸ் பீற்றர்ஸ். இவர் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மெடிலீன் புல்வர் (வயது 18) என்ற பெண்ணின் கழுத்தில் போலி வெடிகுண்டைக் கட்டி வைத்து வெடிக்கச் செய்யப் போவதாக 10மணிநேரமாக மிரட்டியுள்ளார்.

பொலிஸார், புல்வரை மீட்டதுடன், டக்ளஸ் மீது வழக்குப் பதிவு செய்திருந்தனர். இந்த வழக்கு விசாரணைகளின்போது பெண்ணின் கழுத்தில் போலி வெடிகுண்டை மாட்டி அவரை மிரட்டியதை டக்ளஸ் ஒப்புக் கொண்டார்.

மனைவி தன்னை விவாகரத்து செய்ததால் மன வருத்தத்தில் இருந்ததாலேயே டக்ளஸ் இந்தத் தவறை செய்ததாக அவரது வழக்கறிஞர்கள் வாதாடினர்.

ஆனால் நீதிமன்றம் "டக்ளசின் இந்த நடவடிக்கையால் மெடிலீன் எந்த அளவு பயந்திருப்பார் என்பதை எங்களால் உணர முடிகிறது.. எனவே டக்ளஸ் மீது கருணை காட்டமுடியாது" என்று தெரிவித்து அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது. அத்துடன் 10 ஆண்டுகளுக்கு அவர் வெளியே வர முடியாதபடி தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

# ஆப்கனில் இருந்து படிப்படியாக பிரான்ஸ் படைகள் வெளியேறும்



ஆப்கனில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான போரை முடித்துக் கொள்கிறோம். அங்கிருக்கும் பிரான்ஸ் படையினர் படிப்படியாக வெளியேறுவர் என்று பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஆப்கனில் தலிபான்களை ஒடுக்குவதற்காக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை வீரர்கள் உள்ளனர். இதில் பிரான்ஸ் வீரர்களும் அடங்குவர். இந்த நிலையிலேயே ஆப்கனில் போரை முடித்து கொள்வதாகப் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

"பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அனைவரும் 2 மாதங்களில் நாடு திரும்புவர். அதேநேரம் ஆப்கன் இராணுவ வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 1,500 பிரான்ஸ் வீரர்கள் அடுத்த சில மாதங்களுக்கு அங்கே தங்கியிருப்பார்" என்று பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கபிஸ் மாகாணத்தில் உள்ள நிஜ்ரப் என்ற இடத்தில் முகாமிட்டிருந்த 400 பிரான்ஸ் வீரர்கள் நேற்றுமுன்தினம் அங்கிருந்து புறப்பட்டனர். இதன் மூலம் தலைநகர் காபூலுக்கு வெளியே இருந்த அனைத்து பிரான்ஸ் வீரர்களும் வெளியேறியுள்ளனர்.

2014 ஆம் ஆண்டுக்குள் படிப்படியாக வீரர்கள் வாபஸ் பெறப்படுவார்கள் என நேட்டோ ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் கால்களை இழந்த சிறுமிக்கு 23 மில். யூரோ இழப்பீடு

விபத்தில் கால்களை இழந்த பெண்ணுக்கு 23 மில்லியன் யூரோ இழப்பீட்டுத் தொகை வழங்குமாறு பிரிட்டன் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனை சேர்ந்தவர் ஆக்னஸ் சொலியா (வயது17). இவர் தனது 13வது வயதில் பள்ளியில் படித்து கொண்டிருந்தார்.

அப்போது தனது தாயார் கரென் ஹூட்டுடன் ஒரு ஆடம்பரக் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் பயணம் செய்த கார் மீது ஒரு லொறி பயங்கரமாக மோதியது. அதில் அவரது தாயார் கரென் ஹூட் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தார்.

ஆக்னஸ் தனது 2 கால்களையும் இழந்தார். அவரது முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். பலத்த சிகிச்சைக்குப் பின் குணம் அடைந்தார். தற்போது அவர் கல்லூரியில் படித்து வருகிறார்.

இந்தநிலையில் விபத்தில் தான் பாதிக்கப்பட்டது குறித்து லண்டன் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் 2 கால்களையும் இழந்த ஆக்னசுக்கு 23 மில்லியன் யூரோ நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டது. விபத்து வழக்கொன்றில் பிரிட்டனில் வழங்கப்பட்ட அதிகபட்ச நஷ்டஈடு இது தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரொம்னியின் கருத்தால் கட்சிக்குள் முரண்பாடு

ஒபாமாவை சிறுபான்மையின மக்களின் வாக்குகளே வெல்ல வைத்தன என்று எதிர்த்துப் போட்டியிட்ட ரொம்னி வெளியிட்ட கருத்து பலத்த சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

இது அவர் சார்ந்த கட்சியின் செனட்டர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

இவரது கருத்தால் ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யக் கட்சியின் உயர் பதவிகளிலுள்ளவர்கள் தங்களாலான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

"ரொம்னியின் கருத்தைத் தாங்கள் ஏற்கவில்லையென்பதோடு இப்போது கட்சி ஒரு புதிய யுகத்தை நோக்கச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது" என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"இந்தக் கருத்தால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறான கருத்தை ரொம்னி தெரிவித்திருக்கக் கூடாது. ரொம்னி தொடர்ந்து கேடுகளையே செய்து வருகிறார்" என்று செனட்டர் லின்சே கிரஹம் தெரிவி த்தார்.

## கணவர் மற்றும் காதலனை கொன்று புதைத்த பெண்

கணவர் மற்றும் காதலனைக்கொன்று தனது கடையில் புதைத்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவை சேர்ந்தவர் எஸ்டி பாலிஸ் கரன்சா. ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் ஐஸ்கிரீம் கடை நடத்தி வந்தார். கணவர் ஹோல் ஜர் ஹோல்ஸ் என்பவரை விவாகரத்துச் செய்தார். இருப்பினும், அவர் கரன்சாவை விட்டுச் செல்லாததால் 2008ஆம் ஆண்டு அவரை சுட்டுக் கொன்று தனது கடையின், தரைதளத்தில் புதைத்தார். பின்னர் கணவர் காணாமல் போய் விட்டதாக அனைவரிடமும் தெரிவித்திருந்தார்.

அதன் பின், ஐஸ்கிரீம் விற்பனையாளர் பொஜ்ஜர் என்பவரைக் காதலித்தார். அவருடன் ஏற்பட்ட சண்டையால் அவரையும் கொன்று, கணவரை புதைத்த அதே இடத்தில் புதைத் தார். பின்னர் இத்தாலிக்குச் சென்று, அங்கு புதிய காதலருடன் வசித்தார். புதிய காதலர் மூலம் கர்ப்பமானார்.

இந்தநிலையில் வியன்னாவில் ஐஸ்கிரீம் கடை இருந்த இடத்தை, அதன் உரிமையாளர் இடித்துப் புதிய கட்டடம் கட்டினார். அப்போது, தரைதளத்தில் எலும்புத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் இந்த கொலைகளைச் செய்தது கரன்சா என்பது தெரியவந்தது. இதையடுத்து, இத்தாலியில் அவரைப் பொலிசார் கைது செய்து, ஆஸ்திரியாவுக்கு அழைத்து வந்தனர். இருவரையும் கொலை செய்ததை கரன்ஸா ஒப்புக் கொண்டுள்ளார்.

## ஏப்ரலில் நேபாளத்தில் தேர்தல்

நேபாளத்தில், அடுத்த ஆண்டு, ஏப்ரலில் தேர்தல் அறிவிக்கப்பட்டு உள்ளது. நேபாளத்தில், 2007 இல் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு 2008இல் குடியரசு உருவானது.

601 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றம் கடந்த மே மாதம் கலைக்கப்பட்டது. தற்காலிகப் பிரதமராக பாபுராம் பட்டாரை உள்ளார். நேபாள நாடாளுமன்றத் தேர்தல் முறைப்படி நேற்று நடக்க வேண்டும். ஆனால் போதுமான ஏற்பாடுகள் இன்மையால் தேர்தலை, ஏப்ரல் மாதம் நடத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. இதற்கு நேபாள அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்தது.


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.08.1935

மறைவு
15.12.2010

திருமதி **காந்தரூபி (அரியமலர்) சுப்பிரமணியம்**

திதி: பூர்வபக்க தசமி (22.11.2012)

எங்கள் குடும்பத் தலைவி எம்மை விட்டுப்பிரிந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஆயினும் உங்கள் நினைவுகளுடன் என்றும் உங்கள் சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சித்தாவத்தை,
உடுவில் வடக்கு.

(25671)(5-6)

குடும்பத்தினர்.



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30.04.1941



மறைவு
19.11.2011

அமரர் **கதிரிதம்பி வன்னியசிங்கம்**

ஆயிரம் மலர் சொரிந்து
பாயிரங்கள் பல பாடி
பாசத்தால் நீர் சொரிந்து — உன்
பாதார விந்தங்களை வணங்குகிறோம்!
எங்கள் ஊனிலும் உள்ளத்திலும்
இரண்டறக் கலந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வமே.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்

சகோதரங்கள், மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(25677)(45.6.7)



## தவறி விட்டன

K.கணேசலிங்கம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ATM கார்ட் என்பன திருநெல்வேலியை அண்டியபகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 9124 829

(25669)(7)



## இறுதிக்கிரியை திகதி மாற்றம்



**பொன். தெய்வேந்திரம்**

நேற்று (21.11.2012) புதன்கிழமை பக்கம் 20இல் பிரசுரமான மரண அறிவித்தலின்படி இன்று (22.11.2012) வியாழக்கிழமை நடைபெற இருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை (23.11.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

குடும்பத்தினர்

வைத்தியர் விடுதி, பொது வைத்தியசாலை,
வவுனியா.தொ.பே. 024 222 1198

(சி/1918) (45.6.7)



## மரண அறிவித்தல்

**தாமோதரம்பிள்ளை லங்காசுந்தரம்** (மலேசியா)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லங்காசுந்தரம் நேற்று முன்தினம் (20.11.2012) செவ்வாய்க்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரன், பாலநந்தினி, சுதாநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் விக்னேஸ்வரி, தணநாயகி, சொர்ணலிங்கம், சிவனேஸ்வரி, முத்துலிங்கம், மதிவதனா, ரதிவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2012) பிற்பகல் மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசரத்தினம்,
நாகேஸ்வரா,
சொர்ணலிங்கம்.

சண்டிலிப்பாய் மேற்கு.

(சி/1919) (45.6.7)



## மரண அறிவித்தல்

திருமதி **கோமதி நவநீதன்**

(She was a student at Jaffna Holy Family Convent and University of Surrey and was a teacher at Castle View Primary School, Slough, UK.)



யாழ்.வண்ணார்பண்ணை, இல.74, இந்துக் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், நைஜீரியாவை வதிவிடமாகவும், தற்போது இங்கிலாந்து Amersham இல் வசித்தவருமான கோமதி நவநீதன் 17-11-2012 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், கணேசலிங்கம் - மகாபாலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா - சகுந்தரஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், Dr.நவநீதன் அவர்களின் அன்பு மனைவியும், நந்தகிருஸ்ணா, சத்திய நாராயணா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - விஜயநாகேஸ்வரி தம்பதியரின் பெறாமகளும், கேசவன்(கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும், கோமதி - நேசராஜா, பூமதி - முருகுப்பிள்ளை, ரவிமதி - தர்மச்சந்திரன், கிருபானந்தி - கேசவன், சந்திரமதி- மோகன், மேகநீதன், தவநீதன் ஆகியோரின் மைத்துனியும், தாரிணியின் பெரியதாயாரும், ஹரண், சங்கரி - திருமாவளவன், செந்தூரன், ராகுல், குமணன், நிருஷன், நிரோஷா, கோகுலன், கிருத்திகா, ஜெனனன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரித்தானியா
தொலைபேசி: +441494763626
செல்லிடப்பேசி: +447762247068

(25668) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(36)

விற்பனையாளரின் விடாப்பிடியையும், பொறுமையையும் கண்டு முகாமையாளர் அசந்து போனார். அவரை



எவ்வளவு இழிவாக நடத்தி விட்டோம் என்று வருத்தப்பட்டார். பொறுமையாக ஒவ்வொரு கடிகாரத்தையும் எடுத்துப் பார்த்தார். விலைகளைக் கேட்டார். பிறகு, விலை மிகுந்த கடிகாரம் ஒன்றை வாங்கினார்.

விற்பனையாளர் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. எப்படியும் ஒரு கடிகாரத்தையாவது விற்று விடுவது என்ற எண்ணத்துடன் வந்தார். கொஞ்சமும் கோபப்படவில்லை. அவமானம் அடைந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. தோல்வியை வெற்றியாக மாற்றினார். தம்முடைய பணி என்ன, அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளவர்கள் தோல்வியைக் கண்டு துவழமாட்டார்கள்.

அமெரிக்காவின் பிரபல ஃபோர்டு நிறுவனத்தின் உரிமையாளர் ஃபோர்டு படிக்காதவர். ஏழையாக இருந்தவர். வறுமையை எதிர்த்துப்போராடி, கார்களைக் கண்டு பிடித்து உற்பத்தி செய்து, போட்டிகளைச் சமாளித்து பெரும் பணமும் புகழும் சம்பாதித்தவர்.

ஃபோர்டு நிறுவனத்தில் உற்பத்தியான ஒரு குறிப்பிட்ட மாடல் காரில் சில குறைகள் இருந்தன. இந்தக் குறைகளைப் போக்க நிறுவனத்தின் பொறியியலாளர்கள் சில மாறுதலைச் செய்ய விரும்பினார்கள். அதற்கான படங்களை வரைந்து ஃபோர்டிடம் காட்டி விளக்கினார்கள்.

பொறியியலாளர்கள் செய்திருந்த மாற்றங்கள் பூரண திருப்தி அளிக்கவில்லை. அவர்கள் குறிப்பிட்ட மாற்றங்களால் எந்தவிதப்பயனும் இருக்காது என்று எண்ணினார். ஆகையால் மீண்டும் ஆராய்ச்சிகள் செய்து, புதிதாக ஏதாவது கண்டுபிடிக்கும்படிச் சொன்னார்.

''இப்போது நாம் விற்கும் கார்களில் குறைகள் இருந்தாலும், மக்கள் விரும்பி வாங்குகிறார்கள். நாம் உற்பத்தி செய்வதைவிட அதிகமாக கேட்கின்றனர். ஆகையால், இப்போது உடனடியாக மாற்றங்கள் செய்ய விரும்பவில்லை. உங்கள் ஆராய்ச்சிகளைத் தொடருங்கள்'' என்று முடிவாகத் தெரிவித்தார்.

காரில் மாற்றங்கள் செய்ய விரும்பினார். ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைப்பதுபோல் தெரியவில்லை. தற்காலிகமான தோல்வி. ஆனால் அதைத் தோல்வியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏமாற்றமாக எண்ணினார். நம்பிக்கையை விடவில்லை. மீண்டும் சோதனைகளைச் செய்து சரியானபடி மாற்றங்களைச் செய்ய வழி கண்டு பிடிக்கும் படி சொன்னார்.

ஃபோர்டைப் போல் நாமும் தோல்விகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது. எந்தவிஷயத்திலும் அவசரப்பட்டு ஒரு தவறான முடிவு எடுத்து விடக்கூடாது.

கஜினி முகம்மது மீண்டும் மீண்டும் படையெடுத்தானே அதைப்போல் மீண்டும் மீண்டும் நாம் வெற்றி காணும் வரையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நம்முடைய முயற்சியில் நாம் வெற்றி காணும் போது, எவ்வளவு பேர்கள் நம்மைப் பாராட்டுகிறார்கள், நமது நட்பைத் தேடி வருகிறார்கள் என்பது புரியும்.

**என்னென்ன செயல்கள் நட்பை இழக்கவைக்கின்றன?**

நண்பர்களைப் பெறுவது மிகவும் கடினம். ஆனால் அதற்குச் சில சுலபமான வழிகளை இத்தலைப்பில் சொல்லியிருக்கிறோம். நல்லெண்ணமும், அமைதியும், பொறுமையும் விடாப்பிடியும் நண்பர்களைச் சம்பாதிக்க மிகமிக அவசியம்.

சிலர் நண்பர்களை வெகுவேகமாக இழக்கிறார்களே, ஏன்? நண்பர்களை வேகமாக இழப்பவர்கள் என்னென்ன தவறுகளைச் செய்கிறார்கள் என்று நாம் தெரிந்து கொண்டால், அந்தத் தவறுகளை நாம் செய்யாமல் தப்பிக்கலாம்.

சிலர் எப்போதும் எதைப் பார்த்தாலும் சலித்துக் கொள்வார்கள். யாரையும் பாராட்டமாட்டார்கள். எதையும் பாராட்டமாட்டார்கள்.. குறை கூறவோ, தாக்கிப் பேசவோ பிறந்தவர்களைப் போல் காணப்படுவார்கள். உதாரணமாக- வாழ்க்கையில் நம்பிக்கையில்லாமல் எப்போதும் விரக்தியுடன் பேசுவார்கள். 'உலகம் அழியப் போகிறது' என்பார்கள். மனிதனுக்கு எதிர்காலமே இல்லாததைப்போல் பேசுவார்கள்.

நாட்டின் பிரதமர் முதல் அவர் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. வரையில் எல்லாரையும் குறை கூறுவார்கள். உதவாக்கரைகள், ஊழல் பேர்வழிகள், நாட்டுக்கு ஒன்றும் செய்யவில்லை என்பார்கள். அலுவலகத்தில் அவர் அதிகாரிகளைப் பற்றி எப்போதும் மட்டமாகக் குறைகூறிப் பேசுவார்கள். வீட்டில் உள்ளவர்களைப் பற்றியும், நண்பர்களைப் பற்றியும் எப்போதும் ஏதாவது மட்டமாகப் பேசுவார்கள்.

(தொடரும்)

தமிழ்வாணன்

# கடன் சுமை, தொழில் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு வங்கிகள் உதவும்

## மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம்,நவ.22

கடன்சுமை மற்றும் தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தகுந்த நேரத்தில் வங்கிகள் கைகொடுக்கின்றன. இதனை மக்கள் தகுந்த வழியில் பயன்படுத்தி வங்கிகள் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் மெகா வாசி அதிர்ஷ்டத்துக்கான பரிசு வழங்கும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே கௌரிசங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-


வடமாகாணத்தில் அதிகளவானோர் கடல் தொழில் செய்பவர்களாக உள்ளனர். இவர்கள் குறிக்கப்பட்ட காலங்களில் மட்டுமே தொழிலுக்குச் செல்ல முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில் கிடைக்கக் கூடிய வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிக்கப்பழகினால் தொழில் வாய்ப்புகள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் சேமிப்பில் கிடைக்கக் கூடிய பணம் கைகொடுக்கும்.

**கிடைக்கக் கூடிய வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிக்கப்பழகினால், தொழில் வாய்ப்புகள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் சேமிப்பில் கிடைக்கக் கூடிய பணம் கைகொடுக்கும்.**

இது அனைவருக்கும் பொருந்தக் கூடிய ஒன்று. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். மின்சாரக்கட்டணம், உணவுத் தேவை என நாம் கட்டுக் கோப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காக எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறோமோ அதனைப் போன்று மீதப்படும் செலவினங்களைக் குறைத்து அவற்றைச் சேமிக்கப் பழக வேண்டும்.

எமது செலவினங்களைக் கட்டுப்படுத்திச் சேமிக்கும் பணம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிதி நெருக்கடி, பொருளாதார பிரச்சினைகளில் இருந்து எம்மைப் பாதுகாக்கும்.

எனவே வங்கிகள் ஏமது சேமிப்புப் பழக்கத்தைத் தூண்டக் கூடிய பல்வேறு கணக்குகளை அறிமுகப் படுத்தியுள்ளன. இதனை நாம் தெரிவு செய்து எமது விருப்பத்துக்கு ஏற்ப கணக்குகளைப் பேணலாம் - என்றார். (எ-14)



யாழ். நடேஸ்வராக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற உலக ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அந்தக் கல்லூரியின் பழைய மாணவரும் விரிவுரையாளருமாகிய முருகேசு கௌரிகாந்தன் அந்தக் கல்லூரியின் அதிபர் பொ.அபிர்தலிங்கத்திடம் நூல்களை அன்பளிப்புச் செய்தார். (எ)

# யாழ்.மாவட்டம் ஆங்கில மொழியில் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையில்

## யூனியன் அஸூரன்ஸ் நிறுவனப் பிரதிநிதி கவலை

தென்மராட்சி,நவ.22

ஆங்கில மொழியில் முன்னணி வகித்த யாழ்.மாவட்டம் இன்று பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. ஆங்கிலக் கல்வியின் கட்டாயத்தன்மை பாடசாலைகளில் குறைந்ததாலேயே எமது பிரதேசத்தில் ஆங்கில மொழியின் மகிமை குறைந்தது. ஒரு மொழியைத் தெளிவுறக் கற்றவன் அந்த மொழி பேசும் அனைவருக்கும் சமமான நிலையில் உள்ளான். எமது பிரதேச மாணவர்கள் ஆங்கிலத்தில் எழுதுவார்கள், வாசிப்பார்கள். ஆனால் பேசுவதற்குச் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். பேசும் திறமையுள்ளவர் எமது மத்தியில் இல்லாமல் போனதே இதற்குக் காரணம் என்று யூனியன் அஸூரன்ஸ் நிறுவன பிரதிநிதி யேசுராஜா தெரிவித்தார்.

சாவகச்சேரி கேற்-வே நிறுவனத்தில் இடம்பெற்ற ஆங்கில பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே யேசுராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளில் ஆங்கில மொழி தெரியாதவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை நாம் நன்றாக அறிவோம்.

இந்த நிலையைக் கொண்டு ஜோன்கீல்ஸ் நிறுவனத்தினர் யாழ்.மாவட்ட மாணவர்களின், இளைஞர் யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்தக் கேற்வே நிறுவனத்தின் ஊடாக இந்த ஆங்கில வகுப்பை ஆரம்பிக்கின்றனர். இந்தப் பயிற்சி வகுப்பில் இணைந்து கொண்டுள்ள அனைவரும் வகுப்புக்கள் நடத்தப்படும் நாள்களில் தவறாது வருகை தந்து ஆங்கில அறிவை விருத்தி செய்து கொள்ளவும்- என்றார். (எ-9)

# பாடல் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு,நவ.22

யாழ். வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே ஆங்கில தினத்தையொட்டி நடைபெற்ற பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் -3**

ஜே.சஞ்சீவன் - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சு.மதுசா - உடுவில் மகளிர் கல்லூரி, கி. ஆரணி -மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்,

**தரம் - 4**

க.தாரணி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, அ.செரினா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சி.அவிசனி - மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்.

**தரம் -5**

ஈ.பிரவின் - உடுவில் மகளிர் கல்லூரி, ர.மதுமிதா - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, வா.யாதவி- உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் -6**

கே.குந்தவி- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, த.பிரதிகா- உடுவில் மகளிர் கல்லூரி, அ.றோமந்தி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் -7**

செ.சாகித்தியா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, து.றுபவதனா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சி.சோமிகா- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் -8**

அமின்டா நிஸ்ரின் பெஞ்சமின் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கி.ஹம்சாயினி - மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, லோ.ஸ்ரீஸ்ஹர்சன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சு.சுபாசினி - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் -9**

ந.நிசோதா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, ச.அனோஜா- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சி. திலக்ஷிகா - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் - 10**

ஜெ.சலோமி - உடுவில் மகளிர் கல்லூரி, ஐ.ஆதித்தன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பா.மச்சாயினி - உடுவில் மகளிர் கல்லூரி, நா.அருண் - இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**தரம் -11**

சா.தனுஜா- இளவாலை கன்னியர் மடம் ம.வி, சொ.ஆஷாடிவினா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பா. மதுவந்தி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021- 222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா விக்கி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021- 2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206. 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519. 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399. 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478. 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585. 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116. 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917. 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571. 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# வெலிக்கடை சந்திரமுகிகள்

அவள் மிகச்சிறந்த நாட்டியக்காரி. அபூர்வமான அழகு படைத்தவள். அந்த அழகுக்கு அடையாளமாக நாட்டிய விற்பன்னன் அவளது காதலனானான். ஆனால் தற்செயலாக அந்த அழகியைக் கண்ட மன்னன் தன் மனைவியாக்க முடிவெடுத்தான். ஒரு நாள் இரவு அவள் அந்தப்புரத்துக்கு கடத்திச் செல்லப்பட்டாள்.

மன்னனின் சிறையில் நாட்டிய மங்கை. திருமணத்துக்கு முன்னர் ஒரு விருந்து. அதில் தன் வருங்கால மகாராணியான அழகியின் நடனத்தை ஒழுங்கு செய்தான் மன்னன். அழகியின் இணையாக அவளது காதலனை ஆடச்செய்தான். நாட்டியம் தொடங்கியது. நடனத்தின் ஒவ்வொரு அசைவிலும் பார்க்கும் பார்வையாளர்கள் அசந்து போயினர். திடீரென நாட்டியத்தின் போக்கு மாறியது. தம்மை மறந்தவர்களாக காதலர் இருவரும் கட்டி அணைத்தபடி நடனம் ஆட மன்னனின் கண்கள் சிவந்தன. கரம் இடைவாளை உருவியது. ஒரே சீவலில் உருண்டது காதலன் தலை. அழகியையும் தீ மூட்டிக் கொன்று விடுகிறான் மன்னன்.

அத்தோடு அவளின் ஆன்மா அழிந்துவிடவில்லை. தன்னையும், தனது காதலனையும் கொன்ற மன்னனை பழிவாங்க ஆவியாக அலைந்துகொண்டே இருக்கிறாள். அவள் தான் சந்திரமுகி. ரஜனிகாந்த் நடித்த சந்திரமுகி படத்தின் கதையே இது. ஆனாலும் கடைசியில் " ஆவி என்ற ஒன்று இல்லை. ஒரு உளவியல் பிரச்சினையே சந்திரமுகி ஆவி தனக்குள் புகுந்துள்ளதாக நாயகியை நம்பச் செய்துள்ளது'' என்று படத்துக்கு சுபம் போட்டிருந்தார்கள்.

ஆனால் வெலிக்கடைச் சிறை அதிகாரிகளைக் கேட்டால் ''ஆவிகள் அலைவது நம்பக்கூடிய விடயம் தான்'' என்று சத்தியம் செய்வார்கள். சில வாரங்களுக்கு முன்னர் கலவர பூமியாக மாறி , 27 கைதிகளின் உயிர்குடித்த அந்தச் சிறைச்சாலை இப்போது ஆவிகளின் கூடாரமாக மாறிவிட்டதாக சிறை அதிகாரிகள் வெலவெலக்கிறார்கள். ''தலையற்ற முண்டம் ஒன்று நடமாடுவதைக் கண்டேன்'' என்று திக்கித்திணறி சொன்ன அதிகாரி ஒருவர், அந்தச் சம்பவத்துக்குப் பிறகு படுத்தபடுக்கையாகி விட்டதாக தகவல்கள் கசிந்துள்ளன.

தமது ஆசைகள் நிறைவேறாமலோ அல்லது தமக்கென நிர்ணயிக்கப்பட்ட ஆயுள் காலத்துக்கு முன்னதாகவோ அவலச்சாவு ஒன்றின் மூலம் உடலைப் பிரிந்த ஆன்மாக்களே ஆவியாக அலையும் என்பது அனேக மக்களின் மரபார்ந்த நம்பிக்கை. அதனாற்றான் இறந்தவருக்கு பிடித்தமான உணவுப் பதார்த்தங்களை படைத்தால் அவரது ஆன்மா சாந்தியடைந்துவிடும் என்று இந்து மதத்தவர்கள் எட்டுச் சடங்கு, அந்தியேட்டி என்று பலவித கிரியைகளை நடத்துகின்றனர். '' ஆவியாவது காவியாவது. எல்லாம் மூட நம்பிக்கைகளே'' என்று ஆவிகள் பற்றிய வாதத்தை எடுத்த எடுப்பிலேயே விஞ்ஞானம் ஆதாரங்களுடன் பலமுறை நிராகரித்திருக்கிறது. எனினும் மக்கள் விஞ்ஞானத்தை விடவும் ஆவிகளையே அதிகம் நம்புகின்றனர்.

வெலிக்கடையில் கைதிகள் நியாயபூர்வமற்ற முறையில், திட்டமிட்ட படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பல்வேறு தரப்புகளும் குற்றம் சாட்டி வருகின்றன. பெயர்ப் பட்டியல் ஒன்றுடன் உள்ளே நுழைந்த விசேட அதிரடிப்படையினர் கைதிகளை அழைத்து, அவர்கள் கதறக்கதற சுட்டுக்கொன்றதாக சில சிறை அதிகாரிகள் சொன்னதாகவும் தெரியவருகிறது. இதனால் சிறை அதிகாரிகளின் வாய்களுக்கு பூட்டுப்போடப்பட்டுள்ளது.

தம் கண் முன்னால் நடந்த அக்கிரமங்களை வெளிப்படுத்த முடியாமல் திரிகின்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு இப்போது ஆவிகளின் பிரசன்னம் தலையிடியை இன்னமும் அதிகரித்திருக்கிறது. உண்மையில் ''தம்மால் கைதிகளை காப்பாற்ற முடியவில்லையே, அவர்களுக்கு நடந்த அநீதியை வெளியில் சொல்ல வழியில்லையே'' என்ற குற்ற உணர்ச்சியின் எல்லைமீறிய வெளிப்பாடே இவ்வாறு ஆவிகள் நடமாடுவது போன்ற பிரமையை சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஆவிகள் உலவுவது என்பது நம்பமுடியாத, ஆதாரபூர்வமற்ற ஒரு விடயம் தான். ஆவிகள் இருப்பது உண்மை என்றால், முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக் கணக்கான ஆவிகள் படைத் தரப்பின் குருதியை குடித்திருக்குமே.

இப்போது 'பிரித்' ஓதி ஆவிகளை விரட்ட ஏற்பாடு நடக்கிறதாம். கைதிகளின் சாவுக்கு நியாயம் கிடைத்து அதன் மூலம் தமது மனங்களில் உள்ள குற்ற உணர்ச்சியை சிறை உத்தியோகத்தர் மறந்தால் மாத்திரமே ஆவிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியும்.

# தமிழ் மக்களது உரிமைகளை தொடர்ந்தும் புறந்தள்ள இயலாது

கந்தவனம் கோணேஸ்வரன்



ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வுடன்கூடிய தன்னாட்சி உரிமையுள்ள ஓர் இனமாக வாழவேண்டும் என்பதுதான் தமிழர்களுடைய நோக்கம். அவர்களுடைய அரசியல் பயணமும் போராட்டமும் கடந்த ஆறு தசாப்தங்களாக இந்த இலக்கை நோக்கித் தான் நகர்கின்றன.

இதனைப் புரிந்துகொள்ள மறுக்கும் சிங்களத் தலைமைகள் தமிழர்களை ஆபத்தானவர்களாகச் சிங்கள மக்களிடையே சித்திரிப்பதன் மூலம் அரசியல் பிழைப்பு நடத்துகின்றன. பொருளாதார மேம்பாட்டை, மக்களின் வாழ்க்கைத்தர உயர்வை, நல்ல இலக்கு நோக்கிய இலங்கையின் பயணத்தை வைத்து அரசியல் செய்ய வேண்டியவர்கள் அவற்றுக்குப் பதிலாகத் தமிழர்களைக் காட்டி அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் 1935இல் அமைக்கப்பட்ட தனிச் சிங்கள அமைச்சரவை தொடக்கம் இன்று வரை சிங்கள ஆட்சியாளர்கள் தாம் ஆட்சிபீடம் ஏறுவதற்குத் தமிழர்களைத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களிடமிருந்து சிங்கள இனத்தைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை செலுத்துபவர் யார் என்பதில் தான் அவர்களுடைய அரசியல் பிழைப்பு நடந்து கொண்டிருக்கிறது.

தமிழர்கள் நேர்மையான நண்பர்கள். திடமான எதிரிகள். கபடத்தனமான நட்போ முதுகில் குத்துகிற எதிர்ப்போ அவர்களிடம் கிடையாது. எந்தப் பொழுதில் எந்த இடத்தில் நிற்பார்கள் என்று தமிழர்களைக் கண்டு எவரும் அஞ்சவேண்டியதில்லை. இலட்சியத்தை அடையும்வரை நேர்மையாக இலங்கை அரசை எதிர்த்துப் போராடுகிறார்கள்: போராடுவார்கள்.

தமிழன் சிங்கள அமைச்சரவையில் பங்குபற்றுவதானாற்கூட நேர்மையுடன்தான் செயற்படுவான். இது ஒரேயொரு தடவை இலங்கை அரசியலில் நடந்திருக்கிறது. முருகேசு திருச்செல்வம் என்பவர் தமிழர்கள் சார்பாக 1965 இல் இலங்கை அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி வகித்திருந்தார், அதுவும் சில நிபந்தனைகளுடன். நிபந்தனைகள் மீறப்பட்டதால் சொற்ப காலத்துக்குள்ளாகவே பதவியைத் தூக்கி எறிந்துவிட்டார்.

முருகேசு திருச்செல்வம் தமிழர்களால் வாக்களிக்கப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி அல்லர். தமிழர்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் வந்த தமிழ்ப் பிரதிநிதிகள் எவரையும் அமைச்சர்களாக்க அன்றைய தமிழ் மக்கள் விரும்பவில்லை. எனவேதான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைப் பலத்தில் நியமனம் பெறும் மூதவையிலிருந்து (செனட் சபை) திருச்செல்வம் தெரிவானார். அவர் அமைச்சரானபோதும் பின்னர் அப்பதவியைத் தூக்கி எறிந்தபோதும் தமிழர்களின் உணர்வைத் தாங்கிய மனிதனாக நடந்துகொண்டாரே பொழிய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அவர் ஆட்படிருக்கவில்லை.

தமிழர்களுக்கு இந்தப் பண்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அவர்களது பாரம்பரையைச் சார்ந்துவருவது. சுதந்திரத்திற்கு முற்பட்ட இலங்கை வரலாறு இதனைத் தெளிவாகக் கூறும். சங்கிலியன், பண்டாரவன்னியன், இராஜசிங்கன் ஆகிய இலங்கை இராச்சியங்களின் கடைசித் தமிழ் மன்னர்கள் எவரும் அந்நியர் படைகளைக் கண்டு அஞ்சவில்லை. எதிர்த்துப் போராடினார்கள்.

''யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று திடத்துடன் தனது இராச்சியக் குடிமக்கள் அந்நியர்களிடம் அடிமையாகிவிடக்கூடாது என்பதற்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடினார்கள்.

ஆனால் கண்டிய மன்னன் இராஜசிங்கனை வெள்ளையர்களிடம் காட்டிக்கொடுத்தவர்கள் சிங்களப் பிரதானிகளே என்பது வரலாற்றுச் சான்று. கண்டிவேந்தன் கொடுங்கோலன் என்பதற்காகவோ இன, மத சார்பான ஆட்சியாளன் என்பதற்காகவோ காட்டிக்கொடுக்கப்படவில்லை. கண்டி மன்னனின் மந்திரி பிரதானிகளுக்கு மேலும் அதிகாரம் நிறைந்த பதவிகள் தரப்படும் என்ற வெள்ளையர்களின் பொய் மொழிகளை நம்பியே நேர்மை தவ[...] [...] கண்டி மன்னன் சிங்களவன். பெயர்

தர்மபால. அவன் என்ன செய்தான்? வெள்ளைக்காரனின் சமயத்தைத் தழுவித் தனது பெயரையும் மாற்றிக்கொண்டு தனது இராஜதானியை வெள்ளையருக்கு எழுதிக் கொடுக்கவில்லையா?

ஆனால் தமிழர் தரப்பில் இத்தகைய ஈன வரலாறுகள் கிடையா. ஏனெனில் தமிழன் நாட்டுப்பற்று நிறைந்தவன். பதவிக்காகவோ பணத்திற்காகவோ தனது நாட்டுப்பற்றை எவருக்கும் விலைகூறிவிற்கத்துணியாதவன். தமிழன் என்றும் சிங்களவருக்கு எதிரியல்லன். சிங்கள ஆட்சியாளரின் கொடுங்கோன்மைக்குத்தான் அவன் எதிரி. அவர்களின் அடக்குமுறைக்குத்தான் அவன் விரோதி.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் வாழ்ந்து வருகிறார்கள். சிங்கள மக்களைத் தமிழ் மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களைச் சிங்கள மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள்.

இராச்சிய விஸ்தரிப்புக்காக மன்னர்கள்தாம் மோதிக் கொண்டார்களே ஒழிய சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மோதிக்கொண்டதாக இலங்கைத் தீவின் வரலாற்றில் ஒருதுளிச் சான்றேனும் கிடையாது. பௌத்தமும் இந்துவும் முரண்பட்ட தடயமும் சான்றுகள் கிடையா.

1918 இல் எழுந்த சிங்கள - முஸ்லிம் கலவரத்தில் கூட தமிழர்கள் நடுநிலை வகித்து நாட்டின் நலன்கருதிச் செயல்பட்டிருக்கிறார்கள். சிங்கள ஆட்சியாளர்கள் வெள்ளையரிடமிருந்து இலங்கையைப் பொறுப்பேற்ற பின்னர் தான் சிங்களரும் தமிழரும் இனத்துவ ரீதியில் சிந்திக்கத் தொடங்கினார்கள். இது சிங்கள மக்களினதோ தமிழ் மக்களினதோ தவறன்று. முழுக்க முழுக்கத் தமிழர்களை அடக்கிவிடத் துடிக்கும் ஆட்சியாளரின் தவறு. இனக் கலவரத்தைத் தோற்றுவித்து சாதாரண சிங்கள மக்களிடையே தமிழர் எதிர்ப்புச் சிந்தனையைப் பரப்பினார்கள். அன்றிலிருந்து இன்றுவரை அதிலேயே குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரம் கிடைத்த ஆண்டிலேயே தமிழர்களை நாடற்றவர்களாக மாற்றும் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இதனால் பத்து இலட்சம் தமிழர்கள் அரசியல் ஏதிலிகளாயினர். இந்தக் கொடுமை நடந்திராவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றிருக்காது. சமஷ்டி என்ற சிந்தனையே தமிழர்களிடம் உதித்திருக்காது.

1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழர்களை உதாசீனப்படுத்திய ஆட்சியாளர்கள்தாம் முதலாவது தமிழ் - சிங்களக் கலவரத்துக்கு வித்திட்டவர்கள்.

சிங்களம் மட்டும் சட்டத்தை இனவாதச் சிந்தனையோடு நிறைவேற்றிய பண்டாரநாயக்க தனது தீய செயலால் இலங்கைக்கு நிகழப்போகின்ற பாதகத்தை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ 1957 இல் தந்தை செல்வாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்தார். அதனைக்கூட இனவாதப் பெருச்சாளிகளின் நெருக்குதலால் அவர் கைவிட்டார். அவ்வொப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் அதன் பிறகு நடந்த வருந்தத்தக்க வரலாறுகள் எவையும் இடம்பெற்றிரா என்பது மட்டுமல்ல, தமிழரும் சிங்களவரும் ஒருதாய்ப் பிள்ளைகளாகவே இன்றுவரை வாழ்ந்திருப்பர்.

1972 இல் இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பினை எழுதியதன் மூலம் ஆட்சியாளர்கள் தமிழர்களை ஓரங்கட்டினர். அதன்பிறகு 1978 இன் இரண்டாவது யாப்பிலும் ஓரங்கட்டல் அதிகமாகவே கடைப்பிடிக்கப்பட்டது.

இச்செயல்களால்தான் தமிழ் இளைஞர்கள் வெகுண்டெழுந்து ஆயுதப்போராட்டத்தைத் தொடக்கினார்கள். குடியரசு யாப்பு நேர்மையாக எழுதப்பட்டிருந்தால் ஆயுதப் போராட்டம் தோன்றுதற்கோ இலங்கைத் தீவின் மனித வளம் அழிவதற்கோ வாய்ப்பிருந்திருக்காது.

83 கறுப்பு ஜூலை, 2009 மனிதப் படுகொலை என்பவற்றால் இன்று இலங்கை உலக அரங்கில் தலைகுனிந்து நிற்கும் தேவையும் இருந்திருக்காது.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமைதான் இலங்கையின் அமைதியின்மைக்கும் காரணம் எனக் கபடத்தனமாகப் பொய்கூறும் இவர்கள் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்குக் காரணம் தமது நடவடிக்கைகளே என்பதை உணர மறுக்கிறார்கள். இலங்கை அரசு நீதியாக நடக்க விருப்பமின்றி தொடக்கி வைத்த 83 இனக்கலவரத்தால்தான் உலக நாடுகளுக்குத் தமிழரின் துயரம் எடுத்துச் செல்லப்பட்டது. இதன் விளைவாகவே இந்தியா தலையிட்டது.

1987 ஜூலை 4 ஆம் திகதி 'ஒப்பரேசன் பூமாலை' என்ற நடவடிக்கையின் மூலம் இலங்கை ஆகாய எல்லைக்குள் தமது போர் விமானங்களை அனுப்பி வடபகுதியில் பட்டினியால் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு இருபத்தியிரண்டு தொன் நிறையுள்ள உணவுப் பொருள்களைப் போட்டு இலங்கையை வெலவெலக்க வைத்தது. இதனை எதிர்த்து ஒரு வார்த்தைதானும் சொல்ல தைரியமற்று இலங்கையரசு மௌனம் காத்தது.

இந்த அவமானத்தின் பிறகாவது இலங்கைத் திருந்தியிருக்க வேண்டும். தாய்நாட்டின் எல்லைக்குள் இன்னொரு நாடு அத்துமீறிச் செயல்பட்டதைத் தட்டிக்கேட்டால் தமது ஆட்சிச் சுகம் அற்றுப் போய்விடுமென பதுங்கியவர்கள் இன்று நாடு, தேசாபிமானம் பற்றியெல்லாம் பேசுகிறார்கள்.

தனது நாட்டு எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த போர் விமானங்களுக்கு எதிராக ஒரு துவக்கைத்தானும் நிமிர்த்த தைரியமற்றிருந்தவர்கள் இன்று தமிழர்களை அடக்க முற்படுகிறார்கள்.

1987 ஜூலை 29 இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இதன்போது இலங்கை அரசு பயந்து செயலற்ற நிலையில் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து பதின்மூன்றாவது திருத்தச்சட்டம், இந்திய அமைதி காக்கும் படையினரின் வருகை என்று இலங்கை ஆட்சியாளர்களின் சக்தியை மீறிப் பல காரியங்கள் நடந்தேறின.

இதன்பிறகாவது இலங்கை அரசு தமிழர்களின் ஆதங்கத்தை இனங்கண்டு சீர் செய்திருக்க வேண்டும். இன்னொரு தடவை அந்நிய தலையீடு நிகழாதிருப்பதை உறுதி செய்திருக்க வேண்டும்.

ஆனால் அடிவிழும்போது நோவால் துடிப்பதும், பயத்தால் உறைந்துபோவதும், பின்னர் சண்டித்தனம் விடுவதும் இலங்கை அரசின் இயல்புகளாக மாறிவிட்டன. இந்தத் தகடுதத்தக் குணத்தால் தான் 2009 முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்தது. ஐ.நா. மன்றில் இலங்கை வசமாக மாட்டிக்கொண்டு தவிக்கிறது.

ஐ.நாவின் குற்ற விசாரணைகளிலிருந்து இலங்கை மீள்வது அவ்வளவு இலகுவான விடயமல்ல. அதற்கான நியாயங்களும் இலங்கையிடம் கிடையா. காலங்கடத்துவதற்கான முயற்சிகளையும், அவ்வப்போது காப்பாற்றப்படுவதற்கான நடவடிக்கைகளையும் மட்டுமே இலங்கையால் மேற்கொள்ள முடியும். இந்தத் தந்திரங்கள் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவப்போவதில்லை.

உலக அரங்கில் இலங்கையின் நிலைமை நன்றாக இல்லை. அழுத்தங்களைக் கண்டு பயப்படமாட்டோம், எதிர்கொண்டு வெல்வோம் என்று பேசுவதெல்லாம் தம்மைத்தாமே ஆறுதல்படுத்திக் - கொள்வதற்கு வேண்டுமானால் உதவலாம். உண்மை நிலைவரம் எதிர்மாறாக அமையலாம்.

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாடு தொடர்பான நெருக்கடி, பான் கீ - மூனால் நியமிக்கப்பட்ட 2009 முள்ளிவாய்க்கால் அவலங்கள் தொடர்பான உள்ளக ஆய்வுக்குழுவினரின் அறிக்கை என்பவை பற்றி இலங்கை கருத்திற் கொள்ளவேண்டிய நேரம் இது. இலங்கையில் தமிழர்கள் தமக்கு நீதி கிடைக்கும்வரை போராட்டத்தை கைவிடமாட்டார்கள் என்பது உறுதி. ஆசியாவின் ஆச்சரியம் என்பதன் கருத்து இலங்கை இந்த நிலைமைகளைப் புரிந்துகொள்வதில்தான் தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: ரேணுபிரேம்



# அபிவிருத்தி அல்ல அரசியல் தீர்வே எமது முதல் தேவை

பவலோஜினியும் அவரது கணவர் ரவிக்குமாரும் சைக்கிள்களை விற்றே வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். வளைந்து, நெளிந்து, சிதைந்து உருக்குலைந்து போன சைக்கிள்களைத்தான் அவர்கள் கிலோ ஒன்று 49 ரூபாவுக்கு விற்கிறார்கள். கடந்த மூன்று வருடங்களாக முல்லைத்தீவின் "சைக்கிள் புதைகுழிகளுக்குள்" கிடந்து வெயிலிலும் மழையிலும் நனைந்து அந்தச் சைக்கிள்களின் டயர்கள் உருகி உருத்தெரியாமல் போய்விட்டன.

வலிகாமத்தில் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் வாழும் கோணப்புலம் முகாமில்தான் பவலோஜினியின் வீடு இருக்கிறது. அங்கிருந்து வாரத்தில் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் ரவிக்குமார் 95 கிலோ மீற்றர் தூரம் பயணித்து "சைக்கிள் புதைகுழி"க்குப் போய் வருகிறார்.

2009, போரின் இறுதிக் கட்டத்தில் முல்லைத்தீவின் மிக ஒடுங்கிய நிலப்பகுதிக்குள் கொஞ்சம் கொஞ்சமாக மக்களும் விடுதலைப் புலிகளும் தள்ளிச் செல்லப்பட்டபின்னர் அவர்களால் கைவிடப்பட்ட ஒவ்வொரு துண்டு இரும்பையும் சேகரிப்பதற்காகவே ரவிக்குமார் அங்கு சென்று வருகிறார் என்கிறார் பவலோஜினி.

போரின் போது நடத்தப்பட்ட கடும் எறிகணை வீச்சுக்களால் சிதைந்து குப்பையாகிப் போன பஸ்கள், கார்கள், வான்கள் மற்றும் ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் வீதியோரங்களில் இன்னும் அப்படியே கிடக்கின்றன. ரவிக்குமாரைப் போன்ற இரும்பு சேகரிப்பவர்கள் அவற்றுக்குள் சிறப்பானவையான சைக்கிள்கள் போன்றவற்றை வேண்டியவாறு விற்பதற்காக வீட்டுக்கு எடுத்து வருகிறார்கள்.

பவலோஜினியின் வீட்டு முற்றத்தில் குவிந்து கிடக்கும் சைக்கிள் மலையின் நிழலில் நாம் இருந்து பேசிக் கொண்டிருக்கையில், "இந்தச் சைக்கிள்களை கிலோ 49 ரூபாபடி வாங்கு தெற்கு முஸ்லிம் வியாபாரிகள் இருக்கிறார்கள்" என்கிறார் பவலோஜினி. "இவற்றை நாமே கொழும்புக்கு எடுத்துச் சென்றால் பழைய இரும்புச் சந்தையில் கிலோ 65 ரூபா வரைக்கும்கூட விற்கக்கூடியதாக இருக்கும். ஆனால் போக்குவரத்துச் செலவைப் பற்றித்தான் யோசிக்க வேண்டி இருக்கிறது" என்று அவர் மேலும் சொல்கிறார்.

கோணப்புலம் முகாமில் இருக்கும் ஏனைய பலரும்கூட இதே தொழிலில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். சில நாள்களுக்கு முன்னர், தனது அயல் வீட்டுக் குழந்தைகளுக்குத் தானே உணவூட்டினார் என்கிறார் பவலோஜினி. அவர்களின் பெற்றோர்கள் பழைய இரும்பு தேடி "புதைகுழி"க்குப் போன நிலையில் இரண்டு நாள்களாகத் திரும்பி வராமையே அதற்குக் காரணம்.

முல்லைத்தீவில் குவிந்து கிடக்கும் இந்தப் பழைய இரும்புக் குவியல்கள், போர் எவ்வளவு கொடூரமாக நிறைவுக்கு வந்தது என்பதை நினைவுபடுத்துகிறது. அது மட்டுமல்ல, கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்த போர் மற்றும் முரண்பாடுகளில் இருந்து வெளியேவர யாழ்ப்பாண மக்கள் எவ்வளவு தூரம், கடந்த காலத்திலும் சரி இப்போதும் சரி சிக்கல்படுகிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

போருக்குக்குப் பின்னரான யாழ்ப்பாணம், அது முன்னர் இருந்த மாதிரியிலிருந்து மிக வித்தியாசமானதாக இருக்கிறது. இரவு நேரத்தைப் போர்த்தியிருந்த இருளும் பயமும் இப்போது அங்கில்லை, சோதனை நிலையங்களில் நின்றபடி போர்ச் வெளிச்சத்தைப் பீச்சியடித்து வீதியை மறிக்கும் சிப்பாய்கள் இல்லை, பெரும் வெடிச்சத்தத்துடன் விழுந்து வெடிப்பதற்கு முன்னர் தலைக்கு மேலாகக் கூவிக்கொண்டு செல்லும் எறிகணைகளும் இப்போது இல்லை.

இப்போது சோதனைச் சாவடிகள் இல்லை. ஒப்பீட்டளவில் இராணுவத்தினரின் பிரசன்னமும் குறைந்துவிட்டது. இரவு வேளைகளிலும் கடைகள் திறந்திருக்கின்றன. எல்லா நேரங்களிலும் மக்கள் வீதிகளில் நடமாடுகிறார்கள். வீதிகளை நிறைத்திருந்த சைக்கிள்கள் மற்றும் பெற்றோல் தட்டுப்பாட்டால் மண்ணெண்ணெயில் ஓடிய மொறிஸ் மைனர் கார்கள் என்பன எல்லாம் மறைந்து இப்போது வீதிகளை இயல்பான வாகனங்கள் நிறைத்துள்ளன.

இந்த மாற்றங்களுக்குள் ஒன்றாகத் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு முன்பாக (நூலகத்தின் அருகில்) பெரிய உல்லாச விடுதி ஒன்று முளைத்துள்ளது. அதன் உரிமையாளர் திலக் தியாகராஜா, இன்று யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய தனியார் முதலீட்டாளர். தியாகராஜா யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய போது அவருக்கு வயது 17. ஐக்கிய இராச்சியத்தில் அவர் இப்போது வாழ்கிறார்.

42 அறைகளைக் கொண்ட அவரது விடுதியான டில்கோ - தியாகராஜா மற்றும் அவரது மனைவியான கோகிலா ஆகியோரின் பெயர்களின் ஆங்கில முதல் எழுத்துக்களைச் சேர்த்தே டில்கோ என்ற பெயர் - இப்போது எதிர்பார்ப்பின் குறியீடாக நின்று கொண்டிருக்கிறது. குறைந்தது தியாகராஜா சொல்வதைப் போன்று யாழ்ப்பாண மக்கள் "இழந்துவிட்ட பெருமைகளை" மீட்டெடுக்கும் எதிர்பார்ப்பின் குறியீடாகியிருக்கிறது.

"அமைதியை அடைய வேண்டும் என்றால் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பது தான் எனது நம்பிக்கை. நாங்கள் செய்ய வேண்டியதெல்லாம் வேலைகளை உருவாக்குவதும் உள்ளூர்த் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதும்தான்" என்கிறார் 56 வயதான விடுதி உரிமையாளர். அவர் லண்டனுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மாறி மாறி தனது வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருக்கிறார். அங்கே, லண்டனுக்கு வெளியே அவரது வீடு ரனசிங்வெல்லில். அவர் ஒரு பட்டயக்கணக்காளர். அவரது மனைவி இரு பிள்ளைகளும் அங்கேயே இருக்கிறார்கள்.

அவரை வெளிநாட்டுக்கு ஓடவைத்த 1970களின் இலங்கையின் நிலைமையை நினைவுபடுத்திப் பார்க்கையில். "தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் வேலைகளை உருவாக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதுதான் எனது நோக்கம்" என்கிறார் அவர்.

### இராணுவப் பிரசன்னம்

என்ன இருந்தாலும் தியாகராஜாவுக்கு அதிகளவில் சகபாடிகள் கிடையாது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் பலர், போருக்குப் பின்னரான காலத்தில் வருகிறார்கள், பார்க்கிறார்கள் உடனடியாக ஓடிவிடுகிறார்கள். ஆயுதச் [illegible] வங்கிகள் எல்லாம் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட குடாநாட்டை நோக்கி ஓடி வந்தன. போருக்குப் பின்னர் பொருளாதார எழுச்சி ஏற்படும் என்று நம்பிக்கையிலேயே அவை ஓடி வந்தன. ஆனால் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அது நடப்பதற்காக இன்னும் காத்திருக்கிறார்கள்.

வட்டி வீதங்களில் அண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பால் இலங்கை முழுவதும் வர்த்தகம் படுத்துவிட்டது. அதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் அதன் நிலையற்ற தன்மை காரணமாக மேலும் பாதிக்கப்பட்டது. இந்தப் பகுதி தொடர்ந்தும் கொழும்பலிருந்தே நேரடியாக ஆளுகை செய்யப்படுகிறது. அத்துடன் இங்கு 18,000 படையினரின் பிரசன்னமும் காணப்படுகிறது. முழுவதும் சிங்களவர்களாலேயே ஆன இராணுவத்திடம் அதிகாரங்கள் காணப்படுவது யாழ்ப்பாணத்தின் நிலையற்ற தன்மையை மேலும் வளர்க்கிறது.

ஒரு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கோ கடன் பெறுவதற்கோ வங்கிகளிடம் இருந்து கடன் பெறுவதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன. பல வருடங்களாக மக்கள் இடம்பெயர்ந்து கொண்டே இருந்ததனால், வங்கிக் கடனுக்குப் பிணையாக வைக்கக்கூடிய சொத்து ஆவணங்கள் எவையும் அவர்களிடம் இல்லை.

கடந்த வருடத்தில் மக்களை மேலும் பாதித்த சம்பவமாக கிறீஸ் பூதம் மாறி இருந்தது. நாட்டின் பல பகுதிகளில் பல பெண்கள் கிறீஸ் பூசிய உருவத்தால் பாதிக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் அது இன்னும் அதிகம். இந்தச் சம்பவங்களுடன் இராணுவமே தொடர்புபடுத்தப்பட்டது. அதனால் போர்க் காலப் பீதியைப் போன்றே இப்போதும் இருப்பதான ஒரு நிலை உருவானது.

"அதனால் எல்லோரும் பார்த்துக்கொண்டு காத்திருக்கிறார்கள். யாரும் முதலிடவில்லை" என்கிறார் சி.ஜெனக்குமார். யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் அவர்.

### தொழிற்துறை இல்லை

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் பெரிதும் சில்லறை வர்த்தகத்தினாலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி வருவதால் விவசாயமும் கடல் தொழிலும் சிறிது சிறிதாக முன்னேறி வருகின்றது. யாழ்ப்பாணத்தின் வளம்மிக்க செம்மண்ணைக்கொண்ட அச்சுவேலியில் அண்மையில் இராணுவத்தினரிடம் இருந்து தாம் மீளப் பெற்றுக்கொண்ட நிலத்தில் விவசாயிகள் காய்கறிகளையும் பழங்களையும் பயிரிடுகிறார்கள். உள்ளூர் சந்தைகளில் அவை விற்கப்படுகின்றன. ஆச்சரியத்துக்குரியதாக இருக்குமாயினும் திராட்சை 'வைன்' அங்கே பொதுவாகக் கிடைக்கிறது.

என்ன இல்லை என்றால்? அது தொழிற்சாலைகள்தான். அதன் அர்த்தம் தொழில் வாய்ப்பு அங்கு மட்டுப்பட்டது என்பதுதான். இன முரண்பாடு முழு அளவிலான போராய் வெடிப்பதற்கு முன்னதாகக் காங்கேசன்துறையில் அரச சீமெந்து தொழிற்சாலை ஒன்று இயங்கி வந்தது. அதனை மீள ஆரம்பிப்பதான கதையே இப்போது கிடையாது.

குளிரூட்டப்பட்ட களஞ்சியம் ஒன்று இருந்தால் கடல்தொழிலுக்கு ஓர் உந்து சக்தி கிடைக்கும். ஆனால் அதனை அமைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை.

கடைகளிலும் சிறிய சேவை வழங்கு நிலையங்களிலும் மட்டுமே தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஒரேயொரு பல்கலைக்கழகம் மட்டுமே அங்கிருக்கிறது. அதிலும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களே கிடைக்கின்றன. பெரும்பாலான மாணவர்கள் தங்கள் உயர்தரப் படிப்புக்குப் பின்னர் கல்வியை இடைநிறுத்துகிறார்கள். அதனால் தொழில் தேடிக்கொள்வது அவர்களுக்கு இன்னும் சிரமமாகிறது.

இளைஞர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்க விருப்பமில்லை. இவை அனைத்தும் சேர்ந்து மக்களிடம் சந்தேகங்களைக் கிளப்புகிறது. இவ்வாறான நிலைமைகள் மூலம் யாழ்ப்பாணத்தின் சனத் தொகையை வெளியேற்றி விட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டமிடுகிறார்கள் என்பதே அந்தச் சந்தேகம்.

### சீன உதவியுடன் வீதித் திட்டங்கள்

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் சொத்துக்களின் விலையும் எல்லா இடங்களிலும் நடைபெற்று வரும் நிர்மாணப் பணிகளும் குடாநாடு பற்றிய ஒரு சாதகமான பார்வையை வழங்குகின்றன. போர்க் காலத்தில் உடைந்தும் சிதைந்தும் போன தமது சொத்துக்களை (யாழ்ப்பாணத்தவர்கள் என்றாலே வெளிநாடுகளில் இருந்து உறவினர்கள் பணம் அனுப்புபவர்கள் என்று அர்த்தம்) திருத்துகின்றார்கள். பெரிய அங்காடிகள் மற்றும் வர்த்தகக் கட்டடங்களும் எழும்பிக் கொண்டிருக்கின்றன.

நிர்மாணப் பணிகளால் எழும் தூசினால் யாழ்ப்பாணம் மூடப்பட்டிருக்கின்ற போதும் அவை வீதிக் கட்டுமானப் பணிகளில் இருந்து வருகின்றன. 423.9 மில்லியன் டொலர்களை வழங்கி சீனாவின் எக்ஸிம் வங்கி அந்தப் பணிகளுக்குக் கைகொடுக்கிறது. வடமாகாணத்தில் 512 கிலோ மீற்றர் நீள வீதிகள் அரசால் புனரமைக்கப்படுகின்றன.

ரயில்வே புனரமைப்பில் பெரும் பாகம் எண். 5 பொறியியல் நிறுவனம் என்ற சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை நிறுவனம் ஒன்றிடம் உபஒப்பந்த வேலைகளை ஒப்படைத்துள்ளது அந்தச் சீன நிறுவனம். சீன தேசிய வான்-தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் மற்றொரு பெரும் ஒப்பந்தகார நிறுவனமாக இருக்கிறது. அதுவும் பின்னர் இலங்கை நிறுவனத்துக்கு உப ஒப்பந்தங்களை வழங்குகிறது.

தெற்கையும் வடக்கையும் இணைக்கும் பிரதான ஏ-9 நெடுஞ்சாலையின் புனரமைப்புப் பணிகள் அனேகமாக முடிவுக்கு வந்துள்ளன. விடுதலைப் புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையிலான போரின் போது "இரத்தத்தில் தோய்ந்த பெரு வீதி" என ஒரு காலத்தில் அறியப்பட்டிருந்த வீதி இப்போது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பொருள்களும் மனிதர்களும் பயணிப்பதற்கு இலகுவான வீதியாகிவிட்டது.

ஆனால், இரு வழிப் போக்குவரத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படும் வீதிகள், போக்குவரத்தை இலகுவாக்கக் கூடியதாக இருப்பதாக தமிழர்கள் கருதுகின்ற அதேநேரம், தென்னிலங்கை தனது பொருள்களை அப்படியே வடக்குக்கு அனுப்புவதற்கே உதவுகின்றன என்றும் நம்புகின்றார்கள். அதேநேரம் தெற்குக்கு அனுப்புவதற்கு வடக்கிடம் பெரிதாக பொருள்கள் ஏதுமில்லை.

அதேநேரம், இந்த வீதி வலையமைப்புக்கள் வடமாகாணத்தை இன்னும் அதிக சிங்களவர்கள் வாழக்கூடிய பகுதியாகத் தயார்ப்படுத்தும் என்று யாழ்ப்பாணத்தின் சந்தேகபுத்தி கருதுகின்றது.

"நாங்கள் ஒருபோதும் வீதிகளைக் கேட்கவில்லை. அபிவிருத்தி அவசியம்தான், ஆனால் அதனை நாங்களே தீர்மானிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்" என்கிறார் ஜெனக்குமார். "எந்த வகையிலான அபிவிருத்தி எமக்குவேண்டும் என்பதை நாம் தீர்மானிப்பதற்கு எமக்கு இப்போது அரசியல் தீர்வு ஒன்றுதான் தேவை" என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாயும் மகனும்

ஒரு ரயில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அதில் மிகப் பெரிய அதிகாரி சென்று கொண்டிருந்தார். அவர் இந்திய நிர்வாக சேவை அதிகாரி.

ஓர் ஊரில் ரயில் நின்றது. அவர் இறங்கினார். கூலி கூலி என்று கூப்பிட்டார். அதே ரயிலில் வந்த இன்னொருவர் இதைக் கவனித்தார்.

உங்கள் 'பொதி' எது? என்று கேட்டார். இதற்கு அந்த அதிகாரி தன்னுடைய கைப்பையைக் காட்டினார். ''இது தான் எனது 'பொதி'' என்றார். அது ஒரு சின்னப் பை தான்.

''இதற்காகவா சுமை தூக்கின்றவர்களைக் கூப்பிடுகின்றீர்கள்? என்னிடம் கொடுங்கள். நான் எடுத்துக் கொண்டு வாறன்'' என்றார்.

அந்த அதிகாரியும் பதில் பேசாமல் அந்தப் பையை அவரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கிச் சுமந்து கொண்டு வந்தார்.

அதிகாரிபோக வேண்டிய இடம் வரைக்கும் கூடவே வந்தார். பையை அவரிடமே கொடுத்தார்.

அவர் அதை வாங்கிக் கொண்டு 'கூலி எவ்வளவு?' என்று கேட்டார். இதற்கு அவர் சொன்னார்.

'கூலி வேண்டாம். இதை என்னுடைய சேவையாக வைத்துக் கொள்ளுங்கள்.' என்று சொல்லிவிட்டு அங்கேயிருந்து போய்விட்டார்.

அவர் போன பின்னர் இந்த அதிகாரி தான் போக வேண்டிய இடத்துக்குப் புறப்பட்டார்.

அவர் ஒரு பெரிய பேச்சாளருடைய பேச்சைக் கேட்பதற்காக அங்கே வந்திருக்கின்றார். அதனாலே கூட்டம் நடக்கும் இடத்துக்குப் போனார். சனக்கூட்டம் அதிகம். அவர் முண்டியடித்துக்கொண்டு முன்னால் போய் ஒரு இடம் பார்த்து உட்கார்ந்தார். எல்லோரும் ஆவலோடு உட்கார்ந்திருந்தார்கள். மேடையிலே அறிவிப்பு வந்தது. தற்போது ஈசுவர சந்திர வித்யாசாகர் பேசுவார் என்று சொன்னார்கள்.

அவ்வளவுதான் எல்லோரும் ஆவலோடு மேடையைப் பார்க்கின்றார்கள். அந்த அதிகாரியும் பார்க்கிறார்.

ஈசுவர சந்திர வித்யாசாகர் மேடைக்கு வருகிறார். அவருக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது.

ரயில் நிலையத்திலே தன்னுடைய பொதியைச் சுமந்தாரே அவர்தான் மேடையில் வந்து நிற்கின்றார். அவர்தான் ஈசுவர சந்திர வித்யாசாகர்.

அவரைப் பார்த்தவுடனே அவர் தன்னுடைய செயலுக்காக வெட்கப்பட்டாராம். வித்தியாசாகர் மிகப் பெரிய மனிதர். இருந்தாலும் அவர் குடும்பம் மிகவும் ஏழ்மை. வீட்டிலே வயதான தாயார்.

அவர் படித்து முடித்ததும் ஓர் உத்தியோகம் பார்த்தார். சம்பாதிக்கின்ற பணத்தை சிக்கனமாகச் செலவு செய்தார். மிகுதியை சிறிது சிறிதாகச் சேர்த்துப் பார்த்தார். அம்மா உடுத்தியிருந்த கந்தல் ஆடையைப் பார்த்தார். அவருக்கு மனசு உறுத்தலாக இருந்தது. ஒருநாள் அம்மா பக்கத்திலே உட்கார்ந்து கேட்டார்.

'அம்மா! நான் சிறிதளவு பணம் சேர்த்துவைத்திருக்கிறேன். உனக்கு ஆசை ஏதாவது இருந்தால் சொல்லு. அதை நிறைவேற்றி வைக்க முயற்சி செய்கின்றேன்' என்றார்.

'மகனே! எனக்கு எந்த ஆசையும் இல்லை. நீ நல்ல குணம் உடையவனாக இருந்தால் போதும்' என்றாள் அந்த அம்மா.

சிறிது நாளிலே அவருக்கு பெரிய உத்தியோகம் ஒன்று கிடைத்தது. வருமானமும் அதிகமாகக் கிடைத்தது.

'அம்மா! இப்போதாவது சொல்லு... உன்னுடைய ஆசை எதுவாக இருந்தாலும் நிறைவேற்றி வைக்கின்றேன்' என்றார்.

இப்போது அந்த அம்மா சொல்ல ஆரம்பித்தார்.

'மகனே! எனக்கு ஒரு ஆசை இல்லை. மூன்று ஆசைகள் உள்ளன. அதை நிறைவேற்றினால் என் மனம் அமைதியடையும்' என்றார்.

'என்னம்மா அது...உடனே சொல்லுங்கள்' என்றார்.

'மகனே! எமது கிராமத்திலே பிள்ளைகள் படிப்பதற்கு வசதி இல்லை. அதனாலே ஒரு பாடசாலை கட்டு. எமது மக்களைச் சரியாகக் கவனிப்பதற்கு யாருமில்லை. அதனாலே ஒரு ஆஸ்பத்திரி கட்டு' என்றார்.



அவர் உடனே பாடசாலை கட்டினார். ஆஸ்பத்திரி கட்டினார். குடிதண்ணீர் கிணறுகளைத் தோண்டினார். அவர் தான் ஈசுவர சந்திர வித்யாசாகர்.

அம்மா பிள்ளை என்றால் அப்படி இருக்க வேண்டும். இன்று அப்படியா இருக்கின்றனர்?

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சைவ பாடசாலையாகத் தோற்றம்பெற்ற சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்

**லக்ஸ்மன்**




**நா**வலரின் அடியொற்றி உருவான சைவ வித்தியா விருத்திச் சங்கம் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சைவப் பாடசாலைகளை ஆரம்பித்த காலப்பகுதியில், அவற்றில் ஒன்றாக 1922 இல் ஆரம்பிக்கப்பட்டதே சரவணை நாகேஸ்வரி வித்தியாலயமாகும். இப்பாடசாலைக்கு வட கீழ் திசையில் சுமார் நூற்றிஐம்பது யார் தூரத்தில் பிரதான வீதியை அண்டி அமைந்த பாதிரி பாடசாலையும் மேற்குத்திசையில் இருந்த கத்தோலிக்க பாடசாலைகளும், பாடசாலைகளுக்கிடையில் இருக்க வேண்டிய தூரம் பற்றிய அக்கால சட்டமும் இப்பாடசாலையைக் கருத்தில் கொள்ளாது தடுத்துக் கொண்டிருந்தன. இது மக்களுக்கு மிகுந்த மனக்கஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

மக்களின் இந்த மனத்துயரத்தைத் தீர்க்க முன்வந்த சரவணை கிராமத்தின் நொத்தாரிசுவாக இருந்த கா.விநாசித்தம்பி தனது சொந்த நிலத்தில் மனைவியின் நினைவாக அவரின் பெயரில் இருந்த மகேஸ்வரி வித்தியாலயத்தை தற்போது அமைந்திருக்கும் இடத்திற்கு வடகிழக்குத் திசையில் வீதியருகில் சைவப் பெரியார்களின் ஆதரவுடன் 1922 இல் ஆரம்பித்தார். ஓலைக்கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பாடசாலையின் அருகில் உள்ள கிறிஸ்தவ பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் அனைவரும், சைவசமயத்தவர்கள் என்பதால் புதிதாக உருவான நாகேஸ்வரியில் இணைய அருகில் இருந்த கிறிஸ்தவ பாடசாலைகள் மறைந்து போயின. இதன்வளர்ச்சிப் படிப்படியாக முன்நோக்கி நகர ஏறக்குறைய இரண்டு வருடங்களின் பின், அதாவது 1924ஆம் ஆண்டளவில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் இதனையும் இதனுடன் இணைந்த நொத்தாரிசு விநாசித்தம்பியினால் வழங்கப்பட்ட பத்துப்பரப்புக் காணியையும் பொறுப்பேற்றுக் கொண்டது. ஊர் மக்களின் உதவியுடன் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு நொத்தாரிசின் மனைவியின் நினைவாக இருந்த மகேஸ்வரி வித்தியாலயம் 1928 இல் நாகேஸ்வரி வித்தியாலயமானது.

> **வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்த இந்தப் பாடசாலை 1991 இல் இடம்பெற்ற இடப் பெயர்வினையடுத்து யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் மேற்பிரிவும் ஆரம்பப்பிரிவு பாரதி பாடசாலையிலும் இயங்கின. எனினும் தற்காலிக கொட்டகை ஒன்றை அமைத்ததன் மூலம் ஆரம்பப்பிரிவு பின்னர் வைத்தீஸ்வராவுடன் இணைக்கப்பட்டது.**

ஆரம்பம் முதலே சரவணை கிராமத்தின் கல்வி, சைவத்தின் வளர்ச்சியில் கடமையில் இருந்த அதிபர்களும், ஆசிரியர்களும் அக்கறையுடன் செயற்பட்டு வருவது இன்னும் தொடர்கிறது என்பது அந்தப் பகுதி மக்களுக்கு பாடசாலையின் மீது மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பகாலத்தில் சில வருடங்களாக ஐந்தாம் வகுப்புக்கள் வரையே இருந்துள்ளன. எனினும் இப்போது க.பொத. சாதாரண வகுப்பு வரையுள்ளது.

பாடசாலைகளின் அதிபர்களாக க. முருகேசு, ப.சீனித்தம்பி, பண்டிதர். இ. மருதையினார், பண்டிதர் அ. பொன்னுத்துரை, வித்துவான் இ. பொன்னையா, பண்டிதர் ச.குமரேசையா, வி. இராமலிங்கம், கு. கணேசலிங்கம், ச. பாலேந்திரன் ஆகியோர் இங்கு அதிபர்களாக இருந்துள்ளனர். தற்போதைய அதிபர் மு. சத்தியசீலன் 2004 இல் இப்பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதிபர் முருகேசு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பிற்பகலிலும் இரவு வேளைகளிலும் வகுப்புக்களை வைத்து பாடசாலையின் கல்வித்தரத்தைப் பேணுமவகையில் செயற்பட்டார் என்பது தற்போதும் பேசப்படுகின்றது. அயல் கிராமங்கள் மட்டுமன்றி, அயற் தீவுகளையும் சேர்ந்த மாணவர்கள் நாகேஸ்வரியை நாடி வந்து தமது கல்வியை மேம்படுத்தக் காரணமாக விளங்கியவர் அதிபர் மருதையினார். அவருக்கே உரித்தான தனித்துவம்மிக்க திறமையினால் கல்வியில் உயர்ந்து தனித்துவம் மிக்க பாடசாலையாக நாகேஸ்வரியும் ஒளிர்ந்தது. இவரது முயற்சியினாலேயே ஐந்தாம் வகுப்பு வரை இயங்கிய பாடசாலை சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பு வரை அதிகரிக்கப்பட்டது. வருடந்தோறும் புலமைப்பரிசில் பரீட்சை உட்பட விவேகானந்த சபையினரால் நடத்தப்பட்டு வந்த சமய பாடப்பரீட்சையிலும் ஏனைய பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. இவரால் ஆக்கப்பட்ட சைவ இளைஞர்சபை பாடசாலை புறவேலைகளில் முக்கியத்துவம் கொண்டு விளங்கியது. பாடசாலைக்கு அணித்தாகவுள்ள கதிர்வேலாயுத சுவாமிகோயிலில் பெரியபுராணம் முற்றோதல்கள் பெரியார்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் இராகங்களுடன் கூடிய கற்பித்தல்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.

ராவ் சாகிப் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார், சி. கே. சுப்பிரமணியமுதலியார், சோமசுந்தர பாரதியார், சிந்தாந்த சமாச பால சுப்பிரமணிய முதலியார், சிவபாத சுந்தரனார், பண்டிதர் மகாலிங்க சிவம் போன்ற பேரறிஞர்களின் உரைகளை சரவணை மக்கள் கேட்டு மகிழ இப்பாடசாலையும் அதிபரும் காரணமாக இருந்துள்ளனர். முப்பது வருடங்கள் பணியாற்றிய இந்த அதிபருடன் பாடசாலை ஆரம்ப கால முகாமையாளராக இருந்த ஆரம்பகர்த்தா விசுவலிங்கம் மிகுந்த நட்புரிமை கொண்டிருந்ததும் பாடசாலையின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளது. வேலணை மத்திய மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து மீண்டும் ஐந்தாம் வகுப்பு வரை இயங்கிய போதும் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளைத் தொடர்ந்தும் வலுப்படுத்திக் கொண்டு வந்துள்ளது.

வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்த இந்தப்பாடசாலை 1991 இல் இடம்பெற்ற இடப்பெயர்வினையடுத்து யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் மேற்பிரிவும் ஆரம்பப்பிரிவு பாரதி பாடசாலையிலும் இயங்கியது. எனினும் தற்காலிக கொட்டகை ஒன்றில் அமைக்க ஆரம்பப்பிரிவு பின்னர் வைத்தீஸ்வராவுடன் இணைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த இயக்கத்தின் கீழ் பாடவிதானம் புறப்பாட விதானங்களில் யாழ். பாடசாலைகளுடன் ஒப்பிடக்கூடியதாக மாணவர்கள் 1992 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திகளைப் பெற்றுக்கொண்டதுடன் வைத்தீஸ்வராவிலேயே 1993 இல் வருடாந்த பரிசளிப்பு விழாவையும் நடத்தி முடித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது தெற்கு வீட்டுத் தோட்ட அமைப்பின் சேதனப்பசளை உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ், கூட்டெரு பிரயோக வயல் விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

## மிளகாய்த்தூள் வீசி சங்கிலி பறிப்பு

### மாட்டினர் சந்தேகநபர்கள்

ஹற்றன்,நவ.22

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த ஆசிரியை ஒருவரின் முகத்தில் மிளகாய்த் தூளை வீசிவிட்டு சங்கிலியைப் பறித்துச் சென்றவர்களைக் ஹற்றன் பொலிஸார் மடக்கிப் பிடித்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

சாமிமலை, கவிரவிலப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் நோர்வூட் நகருக்கு அருகிலுள்ள பிரதான வீதியில் நடந்து சென்றுக்கொண்டிருந்த போது, ஓட்டோவில் வந்த மூவர், குறித்த ஆசிரியையின் முகத்தில் மிளகாய்த் தூளை வீசிவிட்டு அவர் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைப் பறித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஆசிரியை இது தொடர்பில் நோர்வூட் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்துத் துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார், டிக்கோயா பிரதேசத்தில் வைத்து குறித்த ஓட்டோவைக் கைப்பற்றியதோடு அதில் சென்ற சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்துள்ளனர். இந்தச் சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு ஹற்றன் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

## மண்மேடு விழுந்து ஒருவர் சாவு

இரத்தினபுரி,நவ.22

ஹகவத்த, வெல்லதுர பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெல்லதுர, 11ஆம் கட்டை பிரதேசத்திலேயே இந்த மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹகவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல்; உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

### ஐ.நாவை வலியுறுத்துகின்றார் மு.கா. எம்.பி.

அம்பாறை,நவ.22

காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் மோசமான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு அங்கு அமைதி நிலவ ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பலஸ்தீனத்தின் காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதலில் இதுவரை 100 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்காவும் வேடிக்கை பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்கின்றன.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை அங்கீகரிக்கும் அமெரிக்கா போன்ற நாடுகள் முஸ்லிம் நாடுகளுக்குள் தமது மூக்கை நுழைத்து அதனைப் பிளவுபடுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுவருவது நாம் அறிந்த விடயமாகும்.

முஸ்லிம்கள் உலகில் பலம் பொருந்தியவர்களாக இருக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் முன்னிற்கும் அமெரிக்கா, முஸ்லிம் நாடுகளில் ஏற்படும் உள்ளூர் பிரச்சினைகளில் அந்த நாடுகளைச் சின்னாபின்னாப்படுத்தி ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்து வருகின்றது.

இன்று ஒரு நாட்டின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், அமெரிக்கா அதனைத் தட்டிக்கேட்காது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு முழு ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையும் இதில் தலையிடாது மௌனமாக உள்ளது. முஸ்லிம் நாடுகளை அழிப்பதில் இவர்களுக்கு ஒருமித்த கருத்து உள்ளது என்பதை இப்படியான சம்பவங்கள் மூலம் நாம் தொடர்ச்சியாக அறிந்து வருகின்றோம்.

முஸ்லிம் நாடுகள் உடனடியாக ஒன்றுகூடி இந்த விடயத்தில் காத்திரமான நடவடிக்கையில் இறங்க வேண்டும். முஸ்லிம் நாடுகள் ஒன்றுபட்டு ஓர் அணியில் செயற்படுவார்களாயின், அமெரிக்கா போன்ற மனிதப் படுகொலையாளியின் அட்டகாசத்தையும் இஸ்ரேலின் அட்டகாசத்தையும் தடுத்து நிறுத்தலாம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கொன்ஸ்டபிள் விபத்தில் சாவு

திருகோணமலை,நவ.22

திருகோணமலை,கந்தளாய் வான்எல பிரதேசத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொன்ஸ்டபிள் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகித் தூண் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கந்தளாய் பொலிஸ் தலைமையகத்தில் கடமை புரியும் பொலிஸ் கொன்ஸ்டபிளே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துக் குறித்து கந்தளாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தென்னங் கன்றுகள் வழங்கல்



திருகோணமலை,நவ.22

தென்னைப் பயிர்செய்கை சபையினால் தென்னங் கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மூதூரில் இடம்பெற்றது.

ஷாபி நகர் தெங்கு அபிவிருத்தி சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குச் சுமார் 3 ஆயிரம் தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மூதூர் பிரதேசத்தில் 32,000 தென்னங் கன்றுகள் வழங்குவதற்குத் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் கலந்துகொண்டு தென்னங்கன்றுகளை வழங்கி வைத்தார். (ச)

## மட்பாண்டங்கள் தயாரிக்க உபகரணங்கள்



மட்டக்களப்பு,நவ.22

மட்டக்களப்பு, ஏறாவூர் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் கணவனை இழந்த பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டினை மேம்படுத்த மட்பாண்டங்களைத் தயாரிப்பதற்கான உபகரணங்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

செங்கலடி பிரதேச செயலாளர் உதயசிறிதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கினார்.

முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ், முதல் கட்டமாக 20 மட்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச)

## சேதமான கட்டடங்கள் முற்றாக அகற்றல்



கல்முனை,நவ.22

கல்முனை மாநர பிரதேசத்தில் 65 மீற்றருக்கு உட்பட்ட கரையோர பிரதேசங்களில் காணப்படும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கட்டடங்களை அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மக்களின் பாவனைக்குப் பயன்படுத்த முடியாத மற்றும் மக்கள் பயன்படுத்தாத கட்டடங்களே இவ்வாறு அகற்றப்படுகின்றன.

இந்தச் செயல் திட்டத்தைக் கல்முனை மாநகர சபை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எழுபது இடங்களில் மண்சரிவு ஏற்படும்

கண்டி,நவ.22

இலங்கையில் சுமார் 70 இடங்கள் மிகவும் ஆபத்தான மண்சரிவுகள் ஏற்படும் இடங்களாக இனங்காணப்பட்டுள்ளன. கண்டி, நுவரெலியா, பதுளை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலேயே இந்த அபாய இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாகவே இந்தப் பிரதேசங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

மண்சரிவு அபாயப் பிரதேசங்களில் இருந்து ஆபத்துக்களைக் குறைக்கும் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## நிர்வாகத் திறன்கள் மதிப்பீடு; குச்சவெளி செயலகம் வெற்றி

திருகோணமலை,நவ.22

தேசிய உற்பத்தித் திறன் அமைச்சு, பிரதேச செயலகங்களின் நிர்வாகத் திறன்களை மதிப்பீடு செய்வதற்காக நடத்திய போட்டியில் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகம் தேசிய ரீதியில் 58ஆவது இடத்தையும், கிழக்கு மாகாண ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் அமைச்சு, பிரதேச செயலகங்களின் நிர்வாகத் திறன்களை மதிப்பீடு செய்வதற்கான போட்டிகளை இந்த வருடம் நாடெங்கும் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தொலைபேசி நிலையத்தில் திருட்டு



மட்டக்களப்பு,நவ.22

மட்டக்களப்பு நகரில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு, மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து புனித மைக்கல் கல்லூரிக்கு செல்லும் வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றிலேயே இவ்வாறு திருடப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். பாதுகாப்பு நிறைந்த இந்தப் பகுதியில் கூரையை உடைத்துக் கொண்டு சென்ற திருடர்கள் இந்தத் துணிகரத் திருட்டை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கிழக்கு முதல்வர் காத்தான்குடி பயணம்

மட்டக்களப்பு,நவ.22

கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் அப்துல் மஜீத் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் முதன்முறையாக எதிர்வரும் 27ஆம் திகதி காத்தான்குடிக்குச் செல்லவுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள். புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**இடபம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பெற்றோரின் உடல் நிலை சீராக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** யதார்த்தமாகப்பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் பிடிவாதத்தை ரசிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக்கையாளும் போது அவதானம் வேண்டும்.

**சிங்கம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுக்கு மதிப்பளிப்பீர்கள். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும்.

**கன்னி:** உடல்நலம் நன்றாக இருப்பது போல் தோன்றினாலும் எதிர்பாராத சோர்வு, முதுகுவலி, கை அல்லது கால் போன்றவற்றில் பாதிப்புகள் ஏற்படலாம். உங்களுடைய பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்காது.

## நாளை

கார்த்திகை -08 வெள்ளிக்கிழமை 23.11.2012
திதி: தசமி பி.ப 01.14 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி முழுவதும்
சுபநேரம்: 06.11- 07.41 வரை
ராகுகாலம்: 10.41- 12.11 வரை

**துலாம்:** உங்களுடைய பொருளாதார நிலை ஏற்றமும் இறக்கமும் நிறைந்ததாக இருக்கும். சில சமயங்களில் பணம் அதிகமாகக் கிடைக்கும். இதுவரை இருந்த நோய் விலகும்.

**விருச்சிகம்:** எந்த வகையான செலவுகள் ஏற்பட்டாலும் எப்படியாவது சமாளித்துவிடுவீர்கள். தொழில்-வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர்கள் உடல்நிலை காரணமாக விடுப்பு எடுக்க நேரிடலாம்.

**தனுசு:** அசதி, தயக்கம் காரணமாகப் பணியில் தேக்கநிலை ஏற்படலாம். கலைஞர்களுக்கு கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலான சம்பவங்கள் இடம்பெறலாம். சில நல்ல நண்பர்களிடம் இருந்து தக்க சமயத்தில் நல்ல உதவிகள் கிட்டும்.

**மகரம்:** குடும்பத்தில் சிறிய பூசல்கள் ஏற்பட்டாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது. மனைவியின் உடல்நலம் சீராக இருக்காது. பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உண்டாகும்.

**கும்பம்:** சில நண்பர்கள் உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வார்கள். ஆனால் அதேசமயம் வேறு சில நண்பர்களிடமிருந்து நல்ல உதவிகள் கிட்டும்.

**மீனம்:** நீங்கள் திட்டமிடும் காரியங்களில் சிலவற்றைச் செய்ய முடியாமல் போய்விடும். அதேசமயம் நீங்கள் திட்டமிடாத சில காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத தன வரவுகள் ஏற்படலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | 4 | 5 |
| | 6 | 1 | | | | 8 | | |
| | | | 8 | 5 | 9 | | 1 | 6 |
| | | | 1 | 3 | 5 | | 9 | 8 |
| | | 8 | 6 | | 7 | 5 | | |
| 3 | 4 | | 2 | 9 | 8 | | | |
| 7 | 5 | | 4 | 6 | 1 | | | |
| | | 6 | | | | 3 | 5 | |
| 9 | 8 | | 5 | | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 3 | 5 | 7 | 4 | 6 | 9 | 1 |
| 7 | 6 | 5 | 9 | 8 | 1 | 2 | 3 | 4 |
| 1 | 9 | 4 | 3 | 2 | 6 | 5 | 8 | 7 |
| 3 | 4 | 8 | 2 | 1 | 9 | 7 | 5 | 6 |
| 9 | 7 | 2 | 4 | 6 | 5 | 3 | 1 | 8 |
| 5 | 1 | 6 | 7 | 3 | 8 | 9 | 4 | 2 |
| 4 | 5 | 7 | 8 | 9 | 2 | 1 | 6 | 3 |
| 2 | 8 | 1 | 6 | 5 | 3 | 4 | 7 | 9 |
| 6 | 3 | 9 | 1 | 4 | 7 | 8 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 – 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 – 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 – 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


**வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வல்வெட்டித்துறை**
**முத்துமாரி அம்மன் கல்யாண மண்டப அடிக்கல் நடும் வைபவம்**

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தா சபையினால் கோயிலின் வடக்குப்புறம், பழைய தபால் நிலையமும், விடுதியும் அமைந்த காணியில் (தாசிந்தா மணல் காணி) முத்துமாரி அம்மன்

**கல்யாண மண்டபத்துக்கான**
**அடிக்கல் நடும் வைபவம்**

நிகழும் நந்தன வருடம் கார்த்திகை மாதம் எட்டாம் நாள் நாளை (23.11.2012) வெள்ளிக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திர காலை 6.11 தொடக்கம் 7.43 வரையுள்ள சுபவேளையில் தேவஸ்தான பிரதமகுரு

சிவஸ்ரீ தண்டபாணிக தேசிக குருக்களின்

சமயக் கிரியைகளுடன் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த வைபவத்தில் வல்வை மக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பதிவு இல. HA /5/ JA/639
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.

தர்மகர்த்தா சபையினர்.

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனைக்கு**

கச்சாய் கோயிற்பற்று வெள்ளாம் போக்கட்டியில் (பூசாரித்தோட்டம்) 60 பரப் புத் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. (பகுதிகளாகவும் விற்கப்படும்)

தொடர்பு : 0776405490, 0214901605

(21594)(5.6)

**T V கள் மலிவு விற்பனை**

எங்குமில்லாத மலிவு விலையில்
Sony Wega Flat T V கள் 29"-16000/=, 21"-13000/=, பைனியர் அம்பிளி பயர், Box வகைகள், DVD (L.S) ரேடியோ கசெற் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பன்)
சேவி ரேட்ஸென்ரர் (கொமர்ஷல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, கன்னாகம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகள் பெற்று சித்தியெய்திய யா/கரணவாய் தாமோதர வித்தியாலய மாணவன்

செல்வன் உதயசேகர் ஆர்நிகன்

(கலைமகள் வீதி,இமையாணன்)

அவர்களை உளமார வாழ்த்துகின்றோம். கற்பித்தலில் அவரை ஊக்குவித்த அதிபரையும்,அர்ப்பணிப்புடன் கல்வி புகட்டிய ஆசிரியர்களையும், செவ்வனே வழிநடத்திய பெற்றோரையும் இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

Best Wishes

18/4/1,சீனியர் வீதி,கலட்டி,
யாழ்ப்பாணம்.

(25667)(5.6)

சு:செல்வநாதன்
சாந்தி மாமா குடும்பத்தினர்.

# கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

## தரம் –05 புலமைப்பரிசில் பாராட்டுவிழா–2012




ஜே.யதுசன்
புள்ளி -162


வி.பானுஜா
புள்ளி -161


ந.நவநிகா
புள்ளி -161


மு.சிறிவக்சனா
புள்ளி -158

மேற்படி சாதனையாளர்களையும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாராட்டுச் சான்றிதழ்கள் பெறும் மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம், உப அதிபர் திருமதி ஜெயலலிதா துரைசிங்கம், ஆசிரியர்களான செ.திலக், செல்வி க. சசியோகா ஆகியோர்களையும் இன்றைய நன்னாளில் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes


த.கவிப்பிரியன்
புள்ளி -149


ர.எழிலரசி
புள்ளி -147


கோ.தர்சிகா
புள்ளி -147

கல்லூரிச் சமூகம், கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி. (25661) (5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை குறித்து செயற்பாட்டுத் திட்டம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு,நவ.22

மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிவில் அமைப்புக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அதில் அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்று அதன் ஆணையாளர் பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதேச மட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது.

பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் கண்டி மாவட்டத்தில் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்டக் கிளையின் ஊடான சிவில் அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் மூலம் பிரதேச ரீதியிலான மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளைக்' கிராமங்களுக்குக் கொண்டு சென்று மக்களுக்கு புரிந்துணர்வு ஏற்படுத்தப்படும்.

மனித உரிமைகள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்றார். (ச)

## ஆண் நுளம்பை கொல்ல 'கோபோல்ட்' கதிர்கள்

### புதிய செயற்றிட்டத்துக்கு அரசு அனுமதி



கொழும்பு,நவ.22

கோபோல்ட் கதிர்களைப் பாவித்து, ஆண் நுளம்புகளின் பெருக்கத்தைக் குறைப்பதற்கான புதிய செயற்றிட்டத்துக்கு அரசின் அனுமதி கிடைத்துள்ளது.

இதன் முதல் கட்ட நடவடிக்கைகளுக்காக ஒஸ்ரியாவின் வியன்னா நகரிலிருந்து குடம்பிகள் தொடர்பான விசேட நிபுணரொருவர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று மலேரியா ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சரத் தெரணியகே தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைக்குத் தேவையான உபகரணங்கள் ஒஸ்ரியாவிலிருந்து கிடைக்கவுள்ளன என்று அவர் கூறினார். நுளம்புகளுக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான கோபோல்ட் கதிர்களை அணுசக்தி அதிகார சபையிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

## தொடர்ந்து கடும் மழை; நீரில் மூழ்கின வீதிகள்

கொழும்பு,நவ.22

அதிக மழையுடன் கூடிய காலநிலையால் மாத்தறை மாவட்டத்தின் தாழ்நிலங்கள் மற்றும் வீதிகள் பல நீரில் மூழ்கியுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தாழ்நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மாத்தறை மாவட்டத்தின் ரங்சேகொட, மாகதுற, சீனிபெல்ல, தித்திலிபொத உள்ளிட்ட பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)





ஜனாதிபதியின் பிறந்த தினம், மற்றும் பதவிப் பிரமாணத்தைக் கௌரவிக்கும் வகையில் 15 உள்ளூராட்சி சபைகளுக்கு வாகனங்கள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் அமைச்சர் அதாவுல்லா, யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜாவிடம் வாகனச் சாவியைக் கையளிக்கிறார்.

## மருந்துக் கொள்கையை அரசு நடைமுறைப்படுத்த தவறியது

### ரூ.55 பில்லியன் செலவு

சேனக பிபிலயின் மருந்துப்பொருள் கொள்கையை அரசு நடைமுறைப்படுத்த தவறியுள்ளதால், மருந்துப் பொருள்களை வாங்குவதில் 55 பில்லியன் ரூபாவை ஆண்டுதோறும் நாடு செலவிட வேண்டியுள்ளது என்று பேராசிரியர் சேனக பிபில ஞாபகார்த்தச் சங்கம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை குற்றம் சாட்டியுள்ளது.

மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாடு இல்லை. இதனால் மருந்துகளை ஒரு நியம விலையில் வாங்க முடியாதுள்ளது என்று பிபில ஞாபகார்த்த சங்கத்தின் செயலாளர் ஜயந்த பண்டார தெரிவித்தார்.

2006 மஹிந்த சிந்தனையில் வாக்களிக்கப்பட்ட மருந்தகப்பொருள் கொள்கையை அரசு நடைமுறைப்படுத்தினால் மருந்துகள், மருத்துவக் கருவிகள் மீது செலவழிக்கப்படும் தொகையில் 70 வீதத்தை மீதப்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

நீரிழிவு நோய்க்கு வழங்கப்படும் மெட்போமின் எனும் மருந்தை ஒரு ரூபாவுக்கு வாங்க முடியும். ஆனால் அது கடைகளில் 12 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இதுபோலவே பல மருந்துகள் அதி உச்ச விலையில் விற்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையை கவனிக்குமாறு நாம் சுகாதார அமைச்சிடம் கூறலாம். ஆனால் மருந்து இறக்குமதியானது கூட்டுறவு மட்டும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் வருவதால் தம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## தெரிவுக்குழுவுக்கு தடை கோரும் 'ரிட்' மனுக்கள் உயர் நீதிமன்றிடம்

### மேல் நீதிமன்றம் முடிவு

கொழும்பு,நவ.22

பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை தடுக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட நான்கு 'ரிட்' மனுக்கள் தொடர்பிலான வியாக்கியானத்தை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றத்திடம் நேற்றுமுன்தினம் கோரியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு எதிரான 'ரிட்' மனுக்களை விசாரணைக்கு ஏற்க கடந்த திங்கட்கிழமை தீர்மானித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அதற்காக மூவர் அடங்கிய நீதிபதிகள் குழுவை நியமித்தது.

இந்த மனுக்களை அந்தக் குழு ஆராய்ந்ததன் பின்னரே அது தொடர்பிலான வியாக்கியானத்தை உயர்நீதிமன்றத்திடம் கோரியது. இந்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா, ஏ.டப்ளியூ.எம். சலாம், அனில் குணவர்த்தன ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டது.

ஒழுக்கமின்மை, திறமையின்மை உள்ளிட்ட 14 குற்றச்சாட்டுகளை முன்வைத்து, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விசாரணையை தடுக்குமாறு கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

## வெலிக்கடைச் சிறையில் ஆவிகளின் நடமாட்டம்?

### சிறைச்சாலை அதிகாரிகள் அச்சம்

கொழும்பு,நவ.22

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆவிகளின் நடமாட்டம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 27 கைதிகள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் பின்னர் இரவு நேரத்தில் தலை துண்டிக்கப்பட்ட உடல்கள் சிறைச்சாலை வளாகத்தில் சஞ்சரிப்பதாகப் பீதி ஏற்பட்டுள்ளது.

இதனால் சிறைச்சாலை அதிகாரிகள் இரவு நேரத்தில் கடமையில் ஈடுபட அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரஜக சிறைப் பிரிவில் கடமையாற்றிய அதிகாரியொருவர் தலையில்லா உடல் ஒன்று சஞ்சரிப்பதைக் கண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. வை.ஓ.சிறைப் பிரிவில் கடமையாற்றிய அதிகாரியொருவருக்கு ஆவிகளின் பயத்தில் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இரவு நேரத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்குப் பல்வேறு சத்தங்கள் கேட்பதாகவும், ஆவிகளைக் காண்பதாகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசாரம் காரணமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆவி பீதி ஏற்பட்டுள்ளது. இந்தப் பீதியை நீக்க பிரித் பாராயணம் ஒன்றை செய்ய வேண்டும் என்று கனிஷ்ட நிலை அதிகாரிகள் உயர் அதிகாரிகளிடம் கோரியுள்ளனர். (ச)

## வெள்ளவாயவில் சிவப்பு மழை

கொழும்பு,நவ.22

வெள்ளவாய, ஹந்தபானகல, புபுதுவாவி பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை சிவப்பு மழை பெய்துள்ளது.

3 மணித்தியாலங்களுக்கு மேல் பெய்த கடும் மழையின்போது இடையில் 20 நிமிடங்கள் சிவப்பு மழை பெய்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களுக்கு முன் செவனகல, மனம்பிட்டிய, ஹிங்குரக்கொட மற்றும் பதியத்தலாவ ஆகிய பகுதிகளிலும் சிவப்பு மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இலங்கையின் ஆடை ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு,நவ.22

இலங்கையின் ஆடை ஏற்றுமதி இந்த ஆண்டில் 4.3 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த வீழ்ச்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் கேள்வி குறைந்தமையே காரணம் என்று வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும், அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதி அதிகரித்துள்ள போதிலும் இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 4.3 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த ஆண்டில் அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதி 6 வீதம் அதிகரித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 537 மில்லியன் டொலர் ஆடை ஏற்றுமதிக்கான கேள்வி அமெரிக்காவிடம் இருந்து கிடைத்திருந்தது.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் 40 வீதம் அமெரிக்காவிலேயே தங்கியுள்ளது.

அதேவேளை, இலங்கை ஆடை ஏற்றுமதியில் 50 வீதம், ஐரோப்பிய ஒன்றியத்துக்கே மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், இல. 83/7, 37 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை நேற்று முன்தினம் (20.11.2012) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா (மலேசியா), சரவணமுத்து, செல்லத்துரை, தம்பு மற்றும் சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமலிங்கம், இரஞ்சிதராணி, சச்சிதானந்தன், பவளேந்திரி, கணேசரத்தினம் ஆகியோரின் தாயும், Dr. லோகநாதன், ஞானபண்டிதன், பிறேமாவதி - தர்மலிங்கம், திலகவதியார் - சச்சிதானந்தன், சிவகுமாரி - கணேசரத்தினம் ஆகியோரின் மாமியாரும், சுபேந்திரன், Dr. கிருபேந்திரன், தர்ஷனா - அர்ஜூன், அபிராமி - ரகுகுலன், தாரணி- சங்கர், யோககுதன், சஜீவன், ரம்மியா, சஞ்ஜயன், அனோஜன்,ஹரிதர்ஷன், அம்பீகரன், சுபீஸ்வரன், சுகன்யா ஆகியோரின் பேர்த்தியும், சோபாஷ்னி, வர்சாஷ்னி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நாளை (23.11.2012) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 011 2363 746

# மரண அறிவித்தல்

## செல்லையா இராசதுரை



அரியாலை மேற்கு, நொத்தாரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசதுரை நேற்றுமுன்தினம் (20.11.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா -செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னன் - கதிரி தம்பதியரின் மருமகனும், இரத்தினகலா (கலா), மாலா, சிறீதரன் (பாபு), தயாகரன் (கோபு), ஜெலா, றஜீலா, ஸ்ரெலா (சஜட்டி), ஜஸ்மிலா (பவா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகசபாபதி, புஸ்பராசா (புஸ்பன்), றஞ்சினி, சங்கீதா, சுரேஸ்குமார், நித்தியசீலன், சுஜித், சுபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான இராசகிளி (பாமா), இராசரத்தினம் (சின்னராசு), இராசேஸ்வரி (இராசாத்தி) மற்றும் இராசலட்சுமி (ராசா), ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன். செல்லையா, வள்ளிப்பிள்ளை மற்றும் குஞ்சுப்பிள்ளை, அன்னம்மா, முத்துப்பிள்ளை (சரசு), சின்னத்தம்பி (முருகையா), சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சின்னப்பிள்ளை இராசதுரை
(மனைவி)

கைதடி மேற்கு,
கைதடி.

(சி/1921) (45.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி அழைப்பும்



மலர்வு
24.12.1935

உதிர்வு
04.12.2011

திதி: 22.11.2012

## அமரர் வீரகத்தி கந்தையா

வாழ்க்கையின் கலங்கரையாய் வரலாற்றின் வளநிலையாய்
சேர்க்கையின் இனிமையுடன் செவ்வானின் இளஒளியாய்
ஊர் புகழ வாழ வைக்க ஊக்கந்தரும் தூண்டியதாய்
நீங்கள் இருந்த நிலையெண்ணி நினைவெல்லாம் கலங்குகின்றோம்

பாரினிலே நாம் உயர்ந்து வாழ்ந்திடவே
எம்மை நீங்கள் ஆளாக்கிக் காத்தவரே.
எனக்கு பேனா நுனி தொட்டு எழுதும் இந்த நொடிப் பொழுதிலும் கூட
நீங்கள் இருப்பது போல் இருக்கிறது என் மனம் சொல்கிறது!

சேவை கடமை செய்நன்றி செம்மையுற
நாவைப் பயன்படுத்தும் நம்வழி கண்டறிந்தே
யாரும் தேவை யெனில் நாடும் பழமரமாய்
வேரின் உறுதியென விளங்கினீரே விம்முகின்றோம்

தனித்துவமாய் தரணியிலே தடம் பதித்த தந்தையவர்
இனித்திருந்தார் இன்று இல்லை என்றாலும் துயராக்கி
வழித்தடத்தை பின் தொடர்ந்து வாழ்வோம் இத்தரணியதில்
அளித்த உடல் போனாலும் எம் மனதில் பதிந்த உங்கள் சிரிப்பு
முகம் எம்மை வழி நடத்தும்.

அமரர் அவர்களின் ஓராண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (2012.11.22) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இல.40,முருகேசர் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

ஓராண்டு கடந்தும் தேறாமல் தவிக்கும்
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(25679) (5-6-7)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னையா அன்னப்பிள்ளை



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா அன்னப்பிள்ளை 18.11.2012 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், நாகம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினம் (இலங்கை), சிவப்பிரகாசம் (ஜேர்மனி), தவமணி (இலங்கை), தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), சிவசம்பு (இலங்கை), இராசராணி (பிரான்ஸ்), சந்திரசேகரன் (மோகனதாஸ், சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராணி, றஞ்சனா, செல்வரத்தினம், புஸ்பராணி, செல்வமணி, நாகரத்தினம், ஜெயந்தினி (வனஜா) ஆகியோ ரின்அன்பு மாமியும், காலஞ்சென்ற உருத்திராவதி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், கலாமாலினி - ஜெயசீலன் (லண்டன்), நவநீதன் - மேனகா (ஜேர்மனி), கலாதரன் - றஞ்சனா (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்), துஷ்யந்தினி - செல்வரத் தினம் (லண்டன்), கேமந்தினி, அபிரா (ஜேர்மனி), ஜெயகாந்தன் - வள்ளியம்மை (இந்தியா), ஜெயதீசன், ஜெயந்தினி - துஷ்யந்தன் (இலங்கை), பிரதீபன், சடகோபன், கார்த்திகா (ஜேர்மனி), லிண்டா, நிலக்சன், நிவேதா (பிரான்ஸ்), பிரஷாந், நிலுசாந், கீர்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாருகா, லாவிகா, தருண் (லண்டன்), சஸ்மிதா, பிரஜித் (ஜேர்மனி), பிரியிதா, பிரவிந் (லண்டன்), வினுஷன், சைலஸ் (இந்தியா), ரிஷானா, கஜலக்ஷன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை.
நவரத்தினம் 0094776128422, தவமணி 0094217914089,
சிவசம்பு 0094776621691

(25680) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# துயர் பகிர்கின்றோம்



கிளி / கனகபுரம்
மகாவித்தியாலயத்தின்
ஆசிரியையான
செல்வி துரைராஜா
தவனேஸ்வரி
அவர்களது மைத்துனர்
கணபதிப்பிள்ளை
சாந்தகுமார்
அவர்களின் மறைவுக்கான
துயரில் பாடசாலைச் சமூகம்
பங்கு கொள்வதோடு,
அன்னாரின் ஆத்ம
சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

(25677)

பாடசாலை சமூகம், கிளி / கனகபுரம் ம.வி


# மீட்கப்படாத அடகு நகைகள் ஏலவிற்பனை

பின்வரும் வங்கிக் கிளைகளில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையிலும் மீட்கப்படாத புதுப்பிக்கப்படாத அடகு நகைகள், இவ்வட்டவணையின் 4ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலும், இடத்திலும் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

(ஏலவிற்பனை ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு தொடங்கும்)

| கொமர்ஷல் வங்கியின் கிளை | திகதி வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் | மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி | ஏலவிற்பனையின் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| வவுனியா கிளை, வவுனியா சேவை நிலையம் | 2011/07/31 வரையிலான 12 மாதங்களுக்கும், 2012/01/31 வரையிலான 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 07/12/2012 | வவுனியா கிளை 08/12/2012 மற்றும் 09/12/2012 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிற்பனையை இரத்துசெய்வதற்கும்,காலந்தாழ்த்துவதற்கும், இணைப்பதற்கும், அல்லது ஏலவிற்பனையின் இடத்தை மாற்றுவதற்கும் கொமர்ஷல் வங்கி தத்துவம் கொண்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி
சிரேஷ்ட முகாமையாளர்- அடகுச்சேவை
இலக்கம் 23 லில்லீ வீதி, கொழும்பு 02
தொலைபேசி. 011 2 353 806, 011 5 743 997

COMMERCIAL BANK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# புகலிடக் கோரிக்கையாளர் பப்புவா நியூகினியாவுக்கு

## முதன்முறையாக அனுப்பி வைத்தது ஆஸி.

கான்பரா,நவ.22

**ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாகச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் பப்புவா நியூகினியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.**

**பப்புவா நியூகினியாவுக்குச் சொந் தமான மனுஸ் தீவுகளி லுள்ள தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ள தடுப்பு முகாமுக்கு புகலிடக் கோரிக்கையாளர்கள் அனுப்பப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.**

ஈரானைச் சேர்ந்த 19 புகலிடக் கோரிக்கையாளர்கள் விமானம் மூலம் பப்புவா நியூ கினியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாகச் செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, வேறு நாடுகளிலுள்ள தடுப்பு முகாம்களுக்கு அவர்களை அனுப்புவதற்கு ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் 137 பேருடன் இரண்டு படகுகள் ஆஸ்திரேலியக் கடற்படையினரால் நேற்று முன்தினமும் கைப்பற்றப்பட்டதாக பி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## பெருமையை எவ்வாறு வெற்றி கொள்ளலாம்

எம்மைச் சுற்றிப் பார்த்தால் ஓரளவு பெருமையை நாம் முறியடிக்கலாம். எம்மைச் சுற்றிப் பார்க்கும் போது எம்மிலும் பார்க்க மேலான நிலையில், எமக்குப் பெருமையைத் தருகின்ற ஒவ்வொன்றிலும், எம்மைவிட மேலோங்கி நிற்பவர் பலரைக் காணலாம்.

எமக்குப் பெருமையை உருவாக்கும் பணத்தால், கல்வியால், சாதியால், ஐஸ்வரியத்தால், அழகினால், இளமையால், பதவி அதிகாரத்தால், தவம், ஆன்மிகத்தால் வருகின்ற இந்த எண்வகைத் தன்மைகளெல்லாம் தோன்றி மறையும் இயல்பினதாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இவ்விரு விளக்கத்தையும் நாம் உணர்ந்து கொண்டால் நாம் எம்மில் தோன்றும் பெருமையை இலகுவாகக் களைந்து விடலாம்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## ஆன்மிகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 22

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவிபாகவதம்' என்னும் தலைப்பில் தொடர்சொற்பொழிவு நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் இச்சொற்பொழிவை நிகழ்த்துவார். (வ-8)

## பாபாவின் 87 ஆவது அவதார தினவிழா

யாழ்ப்பாணம்,நவ.22

சத்தியசாயி பாபாவின் 87 ஆவது அவதார தினவிழா யாழ்.திருநெல்வேலியில் அமைந்த பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வாக யாழ். பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் ஸ்ரீமதி கிருபாசக்தி கருணாவின் இசை நிகழ்வும், வடபிராந்திய சாயி நிறுவனங்களின் முன்னாள் தலைவர் வி.சேனாதிராஜாவின் சிறப்புரையும், பஜனையும் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வாக சாயி இசைகானம், நிலைய இளைஞர்களின் ''அச்சமில்லை'' நாடகமும் யாழ்.ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ஆர்.சுந்தரேஸ்வரனின் ''உள்ளுறையும் இறை'' சிறப்புப் பேச்சும், பஜனையும், இடம்பெறவுள்ளன. (எ)

## இலங்கைப் பெண்ணுக்கு துபாயில் 6 மாத சிறை

துபாயில் 3 மில்லியன் திர் ஹாம் பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய இலங்கைப் பணிப் பெண்ணுக்கு 6 மாத காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

துபாயில் தான் பணி புரிந்த வீட்டில் இருந்த தங்க நகைகளைக் கடந்த செப்ரெம்பர் 10 ஆம் திகதி கொள்ளையிட்டதாகக் குறித்த இலங்கைப் பணிப்பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதையடுத்து அவருக்கு நீதி மன்றம் அவருக்கு 6 மாத காலச் சிறை தண்டனை விதித்துள்ளது. (வ)

## திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற இலங்கைப் பெண் சாவு

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனம் செய்துவிட்டுப் பின்னர் கிரிவலம் சென்ற இலங்கைப் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் மோதி உயிரிழந்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த ரோகினி (வயது 62). இவர் தமிழகத்துக்குச் சுற்றுலாக் சென்றார். நேற்று முன்தினம் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் கிரிவலம் சென்றார்.

இலங்கை அகதிகள் முகாம் அருகே சென்ற போது தண்டிப்பட்டை அடுத்த கோவிந்தம் பாடியைச் சேர்ந்த அருண் (வயது 35). என்பவரது மோட்டார் சைக்கிள் ரோகினி மீது மோதியது.

அதன்போது அவர் படுகாயமடைந்தார். அயலிலுள்ளவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காகச் சென்னை அரசு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே அவர் இறந்து விட்டார். (வ)

## வங்கிக் கிளை இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை இன்று முற்பகல் 10.25 மணிக்குப் பருத்தித்துறை வீதி கொடிகாமத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. (எ)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை



மாதகலைப் பிறப்பிடமாவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை 19.11.2012 திங்கட் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சற்குணலீலா, சாந்தகுமார், தருமகுல சிங்கம், மகேஸ்வரன், ஞானசக்தி, ஞானபாலன், தவக்குமாரி ஆகியோரின் அன்புத் தாயும், சுப்பிரமணியம் சிவபாக்கியம், நடராஜா புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, சுப்பிரமணியம், பரமேஸ்வரி, சண்முகசுந்தரம், இலட்சுமிப்பிள்ளை, காந்திமதி, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், தவராசா (மீசாலை), கருணைராணி(மாதகல்), மதிவதனி (தும்மலை, இளவாலை), செல்வராஜா (ஆசிரியர்-பொன்னாலை), மோகிலா (முல்லைத்தீவு), விசாகேந்திரன் (சாவகச்சேரி சிவன்கோயிலடி) ஆகியோரின் மாமியும்,பத்மலோஜி, பத்மராஜி,பத்மறஜனி, பத்மமாலினி, தினேஸ், கௌதமி, மகிஷா, ஜெயந்தன், டாரணி,நர்மதா, சோபிகா, கம்சிகா, கஜாகரன், கரிசான், சுகிஸ்,டரூன், சஞ்சயன், சச்சின் ஆகியோரின் அன்புப் பேர்த் தியும், யதுஞ்யா, மிதுஞ்யா, சதுஷா,லக்சியா, பிரபாகரன், சாள்சன், கிஷோத் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2012) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இவரின்அஞ்சலி நிகழ்வு மாதகல் கிழக்கு தெய்வேந்திரம்-பரமேஸ்வரி(பெறாமகள்) இல்லத்தில் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
021 300 6222
077 614 9866
001 647 343 9132
001 647 270 1387 } கனடா
001 647 606 1293

தகவல்:
மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(25673)(5-6)

# மரண அறிவித்தல்

## திருமதி கோபாலன் புனிதவதி



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு இல.118, ஸ்ரீகதிரேசன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலன் புனிதவதி 16.11.2012 வெள்ளிக்கிழமை இந்தியாவில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2012) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சுதுமலை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(25673)(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை நமதே...

காலம் நமக்கு
ஆதரவாக இல்லையே என
வாழும் காலத்தை
வீணடித்து விட்டு
தோல்விக்கு நீயே,
குழிவெட்டிக் கொள்வதைவிட
ஆளும் வர்க்கத்தை
அடைய வேண்டுமென
நொடிப் பொழுதும்
ஓய்வின்றி உழைத்திட்டால்
நாளை நமதே
நாளைய பொழுதை
நினைத்து சோம்பேறித்தனத்துடன்
கனவு காணாமல்
நிஜத்தையும், நிதர்சனத்தையும்
உணர்ந்து திட்டமிட்டு
செயலாற்றினால் எதிர்காலம்
எதிர்பார்க்கும் செழுமையை
அளிக்கக்கூடிய காலம்
நித்தமும் முறையாக நீயும்
நிறைவாக பணியாற்றினால்
நாளைய பொழுதின்
நாயகராக ஜொலிப்பது
நாமென்பது நிஜமன்றோ...

சு.லக்ஸ்சனா, கெற்பேலி
மத்தி, மிருசுவில்.





தமது மனத்திலுள்ள துக்கங்களையும், சந்தோஷங்களையும் இன்னொருவரிடம் பகிர்ந்து கொள்வதற்கும் மாணவர்கள் தமக்கென ஒரு கட்டுப்பாடு, ஏனையவர்களுடன் எப்படிப் பழகுவது என்று புரிந்து கொள்வதற்கும் தனிப்பாட சாலைகள் வழி வகுக்கின்றன.

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது

## தனிப் பாடசாலைகள்

கலவன் பாடசாலையில் எந்தவொரு பாகுபாடுகளின்றியும் மாணவர்கள் கல்வி பெறுகின்றனர். இது ஒற்றுமையுணர்வை ஏற்படுத்தினாலும் மாணவர்களால் அங்கு தத்தமது ஆற்றலை வெளிப்படுத்த முடியாது இருக்கும். எதிர்பாலாருக்கு முன்னால் எப்படி செய்வது, என்ன பேசுவது என்று தெரியாமல், தமக்குள்ளே தமது ஆற்றல்களை மறைத்து அந்தப் பாடசாலையிலே போலியாய் வாழ விரும்புவார்கள்.

இவ்வாறு அவர்கள் இருந்து காலப்போக்கில் முடியும் என்ற செயலையும் முடியாது என்ற எண்ணத்துடனேயே பார்ப்பார்கள். மேலும் கலவன் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் அனைவரோடும் சமமாக பழகிகொள்வதால் சமூகத்திலும், வெளி இடங்களிலும் அவ்வாறே தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வார்கள்.

இது அவர்களது வாழ்வையே திசை திருப்பி விடும். பால் வேறுபாடின்றி எல்லோரோடும் சமமாகப் பழகி, தமது வாழ்வையும், கல்வியையும் தொலைத்து பெற்றோரின் கண்ணீருக்கும் காரணமாகி விடுவார்கள்.

ஆனால் தனிப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் அவ்வாறில்லை. மாணவர்கள் தமது ஆற்றலை மிகத் திறமையாக வெளிப்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறத்துடிப்பார்கள். தமது ஆற்றலை எப்படி எந்த வழிமுறையில் வெளிப்படுத்த முடியுமோ அந்த வழிமுறையில் வெளிப்படுத்தி விடுவார்கள். கலவன் பாடசாலைகளில் மனம் விட்டுப் பேசுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு.

ஆனால் தனிப்பாடசாலைகளில் அவ்வாறில்லை. தமது மனத்திலுள்ள துக்கங்களையும், சந்தோஷங்களையும் இன்னொருவரிடம் பகிர்ந்து கொள்வதற்கும் மாணவர்கள் தமக்கென ஒரு கட்டுப்பாடு, ஏனையவர்களுடன் எப்படிப் பழகுவது என்று புரிந்து கொள்வதற்கும் தனிப்பாடசாலைகள் வழி வகுக்கின்றன.

இதனால் இவர்கள் சமூகத்தில் நற்பெயரை என்றும் பெற்றிருப்பார்கள். ஆனால் கலவன் பாடசாலை மாணவர்கள் எதிர்பாலாருடனே அதிக நட்புகொள்வதால் சமூகத்தினரால் நற்பெயரை இழப்பார்கள்.

தனிப்பாடசாலைகளில் மாணவர்களிடையே எதிலும் போட்டித்தன்மை காணப்படும். அது கலவன் பாடசாலை மாணவர்களிடத்தே காணப்படாது.

இயற்கையும் செயற்கையும் சேர்த்து இழைத்த இன்னல் சுவட்டில் எமது மாணவ தலைமுறை கலவன் பாடசாலைகளால் தமது எண்ணங்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்த முடியாமல் இரத்தம் கசியும் நிலையை அடைய வேண்டுமா?

எனவே கல்வி பெறவும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி தன்னம்பிக்கையை ஏற்படுத்தித் தரவும் தனிப்பாடசாலைகளை நோக்கி மாணவ சமூகம் சென்றால் நிச்சயம் இருண்டு கிடக்கும் இவ்வுலகை வெளிச்சமாக்க முடியும்.

திருநாவுக்கரசு சுதர்சினி,
வேலணை.





## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது

**கலவன் பாடசாலைகளா?**
**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

..................................................

..................... திகதி ..................... கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# யாகாவாராயினும் நா காக்க

"வாயிருந்தால் வங்காளம் போகலாம்", "வாய் நல்லதானால் ஊரும் நல்லது" என்பது வாய் பற்றிய பழமொழிகள் ஆகும். வாயிலிருந்து வெளிப்படுத்தும் வாக்கு அல்லது சொல் ஒளி பொருந்தியதாக விளங்க வேண்டும். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்கிறார் மகாகவி பாரதியார். வாக்கினிலே உண்டாகும் ஒளி வாய்மை எனப்படும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாது சொலல் என்பது வள்ளுவர் வாய்மொழி. மற்றையோருக்கு ஒரு சிறிதும் தீமையை விளைவிக்காத சொற்களைச் சொல்லுகின்ற அறம் வாய்மை ஆகும். அப்பர் பெருமான் "வாயே வாழ்த்து கண்டாய்" என்று நாவுக்கு பணிப்புரை வழங்குகின்றார். பிறரை வாழ்த்துவதற்கு மட்டும் வாயைப் பயன்படுத்த வேண்டுமே தவிரப் பிறரைத் தூற்றுவதற்கோ, துன்புறுத்துவதற்கோ அல்ல என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நாக்கு என்ற அருமையான உறுப்பு அது வழங்கும் சொற்களினால் ஆக்கத்தையும் தருவிக்க முடியும். கேட்டினையும் வருவிக்க முடியும். ஆகையால் நா காத்து ஓம்பப்பட வேண்டியது மிகவும் அவசியம். நெருப்பினால் சுட்ட புண் காலக்கிரமத்தில் அதன் வடு தெரியாமல் மாறிவிடும். ஆனால் வாயிலிருந்து வெளிவந்த சுடுசொல் எக்காலத்திலும் மாறாது என்று கூறப்படுகின்றது. பெரும் பொருள் செலவு செய்து புரியும் ஈகையாவிலும் அன்புடன் முகமலர்ந்து பிறர்க்கு இன்சொல் வழங்குவதன் மூலம் புரியும் ஈகை மிகச் சிறந்தது. இது செலவில்லாத எல்லோருக்கும் இயலக்கூடிய அறம் ஆகும். இதனாலேயே திருமூலரும் "யாவர்க்குமாம் இன்னுரை தானே" என்றார். பாரதியாரும் "அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்" என்றார். இனிய உளவாக இன்னாது கூறல் தேவையற்றது. நாம் பிறருக்கு வழங்குகின்ற மிகப் பெரிய பரிசு அன்பு கலந்த இன்முகத்துடன் கூடிய இனிய சொற்களாகும்.

"மீன்கள் வாயை திறக்காதவரை
தூண்டிலில் அகப்படாது" என்பார்கள். அதுபோல நாமும் வாயை அமைதியாக அடக்கி வைத்திருப்போமானால் பிரச்சினைகளில் அகப்படாமல் வாழ முடியும்.

எனவே குடும்பத்திலும் சரி, வேலைத்தலத்திலும் சரி மற்றும் சமூகத்திலும் சரி இன்முகத்துடன் யாவருடனும் இனிய சொற்களையே பேசி, அன்பினைச் சொரிந்து, மக்கட் பண்பினைப் பேணி அறம் பரப்பி எல்லோரும் இன்புற்று வாழ வழி செய்வோம்.



போ.சித்திரா
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்காடு கொலை வழக்கு ஜூரர் சிலை முன் விசாரணை

யாழ்ப்பாணம், நவ. 22.
அச்சுவேலி இடைக்காடு பகுதியில் ஒருவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியதோடு, நான்கு பேருக்குக் காயம் விளைவித்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் ஜூரி சபை முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட காலத்தின் பின்னர் ஜூரி சபை முன்பாக ஒரு வழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் ஜூரி சபையினராக 7 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் முன் வழக்கு விசாரணை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றையதினம் இரண்டு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. ஏனைய சாட்சியங்களுக்காக வழக்கு இன்று வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. வழக்குடன் தொடர்புடைய ஐந்து எதிரிகளையும் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேல் நீதிமன்ற ஆணையாளர் நேற்று உத்தரவிட்டார்.

எதிரித்தரப்புச் சட்டத்தரணிகள் இந்த வழக்கை ஜூரி சபை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவிரும்புவதாக, முன்னர் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கு ஆணையாளர் விஸ்வநாதன் அனுமதியளித்ததையடுத்து ஜூரி சபை முன்னிலையில் இதனை விசாரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஜூரிகளின் தெரிவுக்காக உரியவர்களின் சிபார்சைத் தருமாறு நீதிமன்று பணித்திருந்தது. அதன்படி அரச அதிபர், அரச உத்தியோகத்தர்கள் 25 பேரின் பெயர் விவரங்களை நீதிமன்றுக்கு அனுப்பிவைத்தார். 25 பேருக்கும் நீதிமன்றினால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டது. அவர்கள் நேற்று நீதிமன்றுக்குச் சமுகமளித்திருந்தனர்.

ஆணையாளர் விஸ்வநாதன் முன்னிலையில் குலுக்கல் மூலமாக 7 ஜூரிகள் ஒவ்வொருவராகத் தெரிவு செய்யப்பட்டனர். இடையே தெரிவு செய்யப்பட்ட சில ஜூரிகளைச் சபையில் அனுமதிக்க எதிரி தரப்பு சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித்தமையால், அவர்கள் அதிலிருந்து விலக்கப்பட்டு ஏழு ஜூரிகள் கொண்ட சபை முன்னிலையில் வழக்கு விசாரணை ஆரம்பமானது.

இந்த ஏழு பேரிடமும் எதிரிகளையோ அல்லது வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சிகளையோ முன்னர் அறிவித்துள்ளீர்களா அல்லது அவர்களுடன் தொடர்பு உள்ளதா என்று கேட்கப்பட்டது. அதற்கு அவ்வாறு இல்லை என்று ஜூரிகள் உறுதி கூறினர்.

சாட்சியங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஜூரிகள் செயற்படுவோம் எனவும் பிறவிடயங்கள் ஏனையவர்கள் கூறும் விடயங்களை மனதிலிருந்து அகற்றிச் செயற்படுவோம் எனவும் ஒவ்வொருவரும் உறுதியுரை வழங்கிய பின்னர் வழக்கு விசாரணை ஆரம்பமானது.

அச்சுவேலி இடைக்காடு பகுதியில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3 ஆம் திகதி நடந்த கொலை குறித்தே இந்த ஜூரி சபை முன் விசாரிக்கப்படவுள்ளது.

தர்மராசா சிவானந்தன் (வயது-28) என்பவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தி வேறு நான்கு பேருக்கு சிறுகாயம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள்அதே இடத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு எதிராகச் சுமத்தப்பட்டன.

உயிரிழந்த சிவானந்தன் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தார். அவரது தந்தையான சின்னத்தம்பி தர்மராசா நேற்றுமுதலில் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது;

சிவானந்தனை அடித்து வைத்தியசாலையில் சேர்த்திருப்பதாக அறிந்தோம். மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்றுபார்த்தோம். அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சில நாள்களின் பின்னர் அவர் உயிரிழந்தார் - என்றார்.

வழக்குத் தொடுநர்கள் சார்பில் அரசசட்டவாதி செல்வி நிசாந்தி ரட்ணம், மூத்த அரசசட்டவாதி எஸ்.ஞசைதாசன் ஆகியோர் சாட்சியத்தை நெறிப்படுத்தினர்.

இரண்டாவதாக சாட்சியமளித்த தணிகாசலம் தயாபாரன் சாட்சிக்கூண்டுக்குள் அழைக்கப்பட்டார்.

தர்மராஜாவின் சாட்சியத்தை நிசாந்தி முன்னெடுத்திருந்தார். தயாபரனின் சாட்சியத்தை ஞசைதாசன் முன்னெடுத்துச் செல்ல முற்பட்டபோது எதிரி தரப்புச் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆட்சேபனை தெரிவித்தார். எனினும் புதிய காரணங்களை முன்வைத்து ஆணையாளர் ஸ்ரீகாந்தாவின் ஆட்சேபனையை நிராகரித்தார். தொடர்ந்து தயாபரன் சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

நானும் சிவானந்தனும் சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். எதிரே 2 பேருக்கு எதிரிகள் பொல்லுகளினால் அடித்துக் கொண்டிருந்தனர். நாம் சைக்கிளை நிறுத்திவிட்டோம். ஏன் அடிக்கிறீர்கள் என்று சிவானந்தன் கேட்டபோது சிவானந்தனை நெஞ்சில் பிடித்து தள்ளி விட்டார்கள். அவர் கீழே விழுந்துவிட்டார். எனக்கும் அடித்தார்கள். நான் நிலைகுலைந்து விட்டேன். அதன் பின்னர் என்ன நடந்ததென்று தெரியாது - என்றார்.

தொடர் விளக்கத்துக்காக வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. (த-14)

## மோதலில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.22
கிளிநொச்சி அம்பாள் குளம் பஸ் நிலையத்தில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த இருவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் காவல்கடமையில் இருந்த நபர் ஒருவரை அந்தப் பகுதி இளைஞர்கள் சிலர் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தை பொதுமக்கள் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அங்கு வந்த பொலிஸார் காயங்களுக்கு உள்ளான இருவரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

தலையிலும் மார்புப் பகுதியிலும் படுகாயமடைந்த குறித்த நபரும், அவரை தாக்கினார் எனக் கூறப்படும் மற்றைய இளைஞர் ஒருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையின் 4 ஆம் விடுதியில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-16)

## வெளிவிவகார அமைச்சை நிர்வகிக்கும் சஜின் வாஸ்

### தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

வெளிவிவகார அமைச்சை நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவே நிர்வகிக்கின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே தயாசிறி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கண்காணிப்பு அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் அரசின் பிரதம கொறடாவான தினேஷ் குணவர்தனவிடம் தயாசிறி கேள்விகளைக் கேட்டார்.

அப்படியொரு கண்காணிப்பு அமைச்சர் ஒருவர் இல்லை என்றும் இந்தக் கேள்வி பொருத்தமற்றது என்றும் தினேஷ் பதிலளித்தார்.

ஆனால், இதை மறுத்த தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். வெளிவிவகார அமைச்சில் அவருக்குத் தனிஇடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது- என்றார்.

சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டதுபோல் உங்களின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவி வழங்குங்கள். அவர்களுக்கு அநீதி இழைக்காதீர்கள் என்று தயாசிறி கோரினார்.

உங்களுக்கு அப்படியொரு பதவி வேண்டும் என்றால் நான் ஜனாதிபதியிடம் கூறுகிறேன். ஆனால், பொருத்தமற்ற இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாது என்று தினேஷ் குணவர்த்தன கூறினார்.

எங்கள் அரசு ஆட்சிக்கு வந்ததும் அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். அதுபற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம் என்று தயாசிறி பதிலளித்தார். (ச-சி)

## இரு வாரங்களில் 10 லட்சம் தென்னங்கன்று நடத் திட்டம்

### மஹிந்தவின் பிறந்த தினத்தை முன்னிட்டு

தென்மராட்சி, நவ.22
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினம் மற்றும் இரண்டாவது பதவியேற்பின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இரு வாரங்களில் நாடு முழுவதும் பத்துலட்சம் தென்னங்கன்று நடப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைத் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார மேற்கொண்டுள்ளார்.

தென்னம் பயிர் செய்கை சபை, தென்னை அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நாட்டில் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கைக்காகப் பயனாளிகளுக்கு தலா 5 தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கி வருகின்றது.

நேற்று முன்தினம் இத்திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் தலா 5 கிராம அலுவலர் பிரிவுகளில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது.

## வேலணை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
அவர் வெளியே வந்துள்ளார். அதன் பின்னர் வீட்டுக்குள் வரவில்லை. அவரை எங்கும் தேடியும் காணவில்லை என்று லோகேஸ்வரனின் தாயார் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அதிகாலையில் வீட்டுக்கு வெளியே நின்று அழைத்தவர்களாலேயே லோகேஸ்வரன் கடத்திச் செல்லப் பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் என்றும், அண்மையில் அரசியல் அரச தரப்பு துணைப் படை கட்சி ஒன்றின் உறுப்பினரால் மிரட்டப்பட்டிருந்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவரான தீவக இளைஞர் அணித் தலைவரும் யாழ்.மாநகர சபை முன்னாள் உறுப்பினர் நிஷாந்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

(த-4)

## கணினி மயமாகிறது வருமான அறவீடு

சாவகச்சேரி நகரசபையின் வருமான அறவீடுகள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்படவுள்ளன. சபையின் ஆதனவரி, வாடகை உட்பட்ட அனைத்து அறவீட்டுச் செயற்பாடுகளும் கணினிமயப்படுத்தப்படவுள்ளன.

2013 ஆம் ஆண்டு நகரசபையின் ஆதனங்களுக்கான புதிய வரிகள் அறவீடுகளுடன் அனைத்துச் செயற்பாடுளையும் கணினி மயப்படுத்தப்படல் வேண்டுமென உறுப்பினர் கா. சற்குணதேவன் சபைக் கூட்டத்தில் நேற்று பிரேரணையை முன்வைத்தார்.

இது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன், தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தலைவர் இ. தேவசகாயம்பிள்ளை கூறியதை அடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம- 9)

## நீதியரசர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதையிட்டும் அமெரிக்கா விசனப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றத்தை அவர் கவனத்தில் எடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தம் பற்றி தற்போது நாட்டில் நிலவும் விவாதம் குறித்து கேட்டபோது, அதிகாரப் பகிர்வும் தமிழ்ச் சமுதாயத்தின் உரிமைகளும் அமெரிக்க அரசின் முன்னுரிமையாக உள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.மேலும், அமெரிக்காவே ஆகக் கூடுதலான உதவியை மீளக்குடியமர்த்தலுக்காக வழங்கி உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகள், சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை என்பவற்றுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு, பல்லின சமுதாயத்தின் சகிப்புத்தன்மை, பத்திரிகை சுதந்திரம் என்பவற்றை பூரணமாக மதித்து நடப்பதில் அமெரிக்கா எப்போதும் அக்கறையாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## மோதலுக்காக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
களின் ஒரு கூட்டமைப்பான 'தாக்குதல்களிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான பூகோள அமைப்பே இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது. சுமார் 77 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் அரசபடைகள், அரச சார்புத் துணைக்குழுக்கள் மற்றும் எதிரிப்படைகள் என்பன தமது போர்த் தேவைகளுக்காக பாடசாலைகளைப் பயன்படுத்திய நாடுகளின் பெயர்ப் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆயுதப்படைகள் தமது போர் நடவடிக்கைகளுக்காக ஆள் சேர்ப்பு முகாம்களாக , சித்திரவதை முகாம்களாக, ஆயுதங்களின் களஞ்சியமாக, படைகளுக்கான வழிகாட்டல் மையமாக, பாடசாலைகள் இந்த நாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் போரின் போது பாடசாலைகளை ஆயுதப் படைகள் தமது போர் நடவடிக்கைகளுக்கான முகாம்களாகப் பயன்படுத்தியிருந்தன.

பெரும்பாலான பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயமென்ற போர்வையில் மூடப்பட்டிருந்தன. (16)

## மாவீரர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
ஆரம்பமான நிலையில் இந்தக் கோரிக்கையை அது விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிரஸல்ஸில் வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் கைதிகளின் பெயர் விவரங்களை வெளியிட வேண்டும். போரில் [illegible] புலிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் நினைவாக அவர்களின் குடும்பங்களால் மேற்கொள்ளப்படும் அனுதாப நினைவு நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இறுதிப்போரில் காணாமல்போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாட அனுமதிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளுக்கு சுதந்திரம் வேண்டும். அத்துடன் இராணுவ அடக்கு முறைகள் மற்றும் காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

மொழி உரிமைக்கு உறுதிப்பாடு அவசியம். தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் அவசியம்.

தமிழ் பேசும் மக்கள் தொழில் கல்வி உட்பட்ட விடயங்களில் புறக்கணிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இராணுவத்திலும் படைகளிலும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றலைட்ஸ் முதலிடம்




யாழ்ப்பாணம், நவ.22

இந்தப் போட்டிகளின்போது வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 10 போட்டிகளில் பங்கு பற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 41.2 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைத் தனதாக்கியுள்ளது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 3 ஆவது வருடமாக நடத்தும் 20/20 போட்டிகளில் யாழ். மாவட்ட சிறந்த அணித் தெரிவுக்கான தரவரிசைப் பட்டியலில் சென்றலைட்ஸ் அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் 20 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட 46 போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இந்தப் போட்டிகளின் போது வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 10 போட்டிகளில் பங்கு பற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 41.2 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைத் தனதாக்கியுள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 9 போட்டிகளில் பங்கு பற்றி 6 போட்டிகளில் வெற்றி பெற்றது. ஒரு போட்டி சமநிலையில் முடிந்தது. இதனால் 36.07 புள்ளிகளுடன் அந்த அணி இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 9 போட்டிகளில் பங்கு பற்றி 6 போட்டிகளில் வெற்றி பெற்றது. 1 போட்டி சமநிலையில் முடிந்தது. அந்த அணி 36.2 புள்ளிகளைப் பெற்று 3 ஆவது இடத்தில் உள்ளது.

ஏனைய விளையாட்டுக் கழகங்கள் வென்ற புள்ளிகளும் இடங்களும் வருமாறு:


மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 9 போட்டிகளில் பங்கு பற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்றது. இதனால் 28.8 புள்ளிகளைப் பெற்ற அந்த அணி 4 ஆவது இடத்தினையும், பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றியும் ஒரு போட்டியில் சமநிலையும் அடைந்து 25.3 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளன.

இதேவேளை யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 7 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 22.8 புள்ளிகளை பெற்று 6 ஆவது இடத்தினையும், ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றிபெற்றும், ஒரு போட்டியை சமநிலையில் முடித்தும் 21.7 புள்ளிகளைப் பெற்று 7 ஆவது இடத்தினையும், கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 7 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்று 16.4 புள்ளிகளைப் பெற்று 8 ஆவது இடத்தினையும், ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 போட்டிகளில் வெற்றிபெற்று 12.7 புள்ளிகளைப் பெற்று 9 ஆவது இடத்தினையும், ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 9:4 புள்ளிகளைப் பெற்று 10 அவது இடத்திலும் உள்ளன.

திருநெல்வேலி ஸீ.ஸீ அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று 8:4 புள்ளிகளைப் பெற்று 11 ஆவது இடத்தினையும்.

யூனியன் விளையாட்டுக் கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி ஒரு போட்டியில் வெற்றிபெற்று 7.6 புள்ளிகளுடன் 12 ஆவது இடத்தினையும், சிறிகாமாட்சி விளையாட்டுக்கழகம் 3 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 7.1 புள்ளிகளைப் பெற்று 13 ஆவது இடத்தினையும், திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ விளையாட்டுக் கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிபெநாத நிலையில் 6.3 புள்ளிகளைப் பெற்று 14 ஆவது இடத்தினையும், நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி எதுவும் வெற்றிபெறாத நிலையில் 5.6 புள்ளிகளைப் பெற்று 15 ஆவது இடத்தினையும், அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி எதுவும் பெறாதநிலையில் 5.1 புள்ளிகளைப் பெற்று 16 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளனர்.

(ங-23)



இந்த வருடம் நடைபெற்ற வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சாதனை படைத்தனர். 19வயது ஆண்களுக்கான 1500 மீற்றர், 5000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் 2 ஆம் இடத்தையும், வர்ண விருதையும் பெற்றுக்கொண்ட சி.சிவகுமார், 15 வயது ஆண்களுக்கான தட்டு எறிதல், 200 மீற்றர் ஓட்டம் என்பவற்றில் 2 ஆம் இடத்தையும், குண்டெறிதலில் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்ட கி.அஜித், 19வயது பெண்களுக்கான நீளம் பாய்தலில் 3 ஆம் இடத்தைப் பெற்ற [illegible] சலில் 3ம் இடம் பெற்ற ப.றொசாந்தன் ஆகிய மாணவர்களு[illegible] பிரதி அதிபர் ம.ம.நிக்சன் உடற்கல்வி ஆசிரியர்களான யோ.றெ.அன்றூஸ், திருமதி.அ.கலிஸ்ரன் ஆகியோர். (ங-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப.3.45

பொற்பதி விளையாட்டுக் கழகம் எதிர் பாரதி விளையாட்டுக் கழகம்

★ ★ ★

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 11 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணியின் விவரங்கள் வருமாறு-

மாலை 3 மணி

சுகாதார அமைச்சு அணியை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ங-23)

# ஆளுநர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்

## உள்ளூராட்சி அணி வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.22

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கிடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரில்நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணி வெற்றி பெற்து.

உள்ளூராட்சி அமைச்சு அணிக்கும் விவசாய அமைச்சு அணிக்கும் இடையே இந்த போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய உள்ளூராட்சி அமைச்சு அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. சுதாகரன் 51 ஓட்டங்களையும், வினோதன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் விவசாய அமைச்சு அணி சார்பில் சுகிதரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், ஜெனராஜ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும், துஷியந்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விவசாய அமைச்சு அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் அதிகபட்சமாக கவீந்தன் 16 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் உள்ளூராட்சி அமைச்சு சார்பில் சுதாகரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், குமார் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், மயூரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதனால் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் விவசாய அமைச்சு அணியை உள்ளூராட்சி அமைச்சு அணி வாகைகொண்டது.

(ங-23)

# ஆளுநர் செயலக அணி வாகை

யாழ்ப்பாணம்,நவ.22

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டமொன்றில் ஆளுநர் செயலக கொத்தணி அணி வெற்றி பெற்றது.

இதில் ஆளுநர் செயலக கொத்தணி அணியை எதிர்த்து சுகாதார அமைச்சு அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆளுநர் செயலக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 97 ஓட்டங்களை பெற்றது.

அந்த அணி சார்பாக கமல் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும், டினேஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சுகாதார அமைச்சு அணி சார்பில் கோகுலன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக்கொடுத்து 3 இலக்குகளையும், ரமேஸ் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

98 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி 10பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சிவானந்தன் 16 ஓட்டங்களையும், பகீரதன் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களை கோகுலன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆளுநர் செயலக அணி சார்பில் கமல் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தில் 26 ஓட்டங்களால் ஆளுநர் செயலகக் கொத்தணி அணி வெற்றியீட்டியது.


(ங-23)

# டோனியைப் போட்டுத் தாக்கும் ஸ்ரீவோ

இந்திய ஆடுகளங்கள் மேலும் சுழற்பந்து வீச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்த கருத்தை ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவோ விமர்சித்துள்ளார். அந்தக் கருத்துத் தனக்கு வியப்பைத் தருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 9 இலக்குகளால் இலகுவாக வெற்றிபெற்ற போதிலும், அந்த ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த டோனி, அந்த மைதானம் தொடர்பாக தனது விமர்சனங்களை முன்வைத்தார்.

குறித்த மைதானத்தின் ஆடுகளம் ஆட்டத்தின் முதல்நாளிலிருந்தே சுழற்சியை வழங்கவில்லை எனத் தெரிவித்திருந்த டோனி, மைதானப் பராமரிப்பாளர்கள் சுழற்சியை வழங்கும் ஆடுகளங்களை உருவாக்குவது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.



இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஸ்ரீவோ, தான் 57 ஆட்டங்களுக்கு ஆஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்கியதாகவும், ஆனால் ஒரு தடவை கூட ஆட்டத்தின் ஆடுகளம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக மைதானப் பராமரிப்பாளர்களிடம் கோரிக்கை விடுத்ததில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

உலகின் சிறப்பான அணிகளுள் ஒன்றாக வரவேண்டுமாயின் ஆக்ரோஷமான அணியாகவும், கள நிலவரங்கள் தொடர்பாகக் கணக்கில் கொள்ளாமல் ஆட்டங்களை வெல்வது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்த ஸ்ரீவோ, உலகின் முதல்நிலை அணியாக வர வேண்டுமாயின் எல்லாக் களநிலைகளிலும் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (5)

# இந்திய ஆட்டத்தில் விளையாட ஆவலாக இருக்கிறோம்

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் இடம்பெற எதிர்பார்க்கப்படும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற மிகுந்த ஆவலுடன் உள்ளதாக பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் தெரிவித்துள்ளார்.


டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் 3 ஆம் இடத்திலும், ஒரு நாள் சர்வதேசப் போட்டிப் பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்திலும், 'ரி-20' சர்வதேசப் போட்டிக்கான தரப்படுத்தலில் முதலிடத்திலும் காணப்படும் சயிட் அஜ்மல், இந்திய அணியைத் தான் எதிர்கொண்டது குறைவு என்பதால் இந்தியாவிற்கான தொடர் முக்கியமானது எனத் தெரிவித்தார்.

தான் சர்வதேசப் போட்டியில் தனது பிந்திய வயதிலேயே பங்குபற்ற ஆரம்பித்ததால் இந்திய அணிக்கெதிராக இதுவரை ஒரேயொரு ஆட்டத்தில் மாத்திரம் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவித்த அஜ்மல், அது இந்தியாவில் வைத்து 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டமாக அமைந்ததாகத் தெரிவித்தார்.

எனவே தற்போது இந்தியாவில் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டியில் பங்குபற்ற மிகுந்த ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தியாவின் துடுப்பாட்ட வீரர்களுக்கு இந்தியாவில் வைத்துப் பந்துவீசுவது சவாலானதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி முதலில் 2 'ரி-20' சர்வதேசப் போட்டியிலும், 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும் பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)





# சங்கா முதலிடம்

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கை வீரர்கள் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் குமார் சங்கக்கார தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுவதோடு, பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் ரங்கன ஹேரத் தொடர்ந்தும் முன்னேற்றத்தை வெளிப்படுத்தி நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார். நடந்து முடிந்த இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம், பங்களாதேஷ் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஆட்டம், இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஆகியவற்றின் பின்னரான தரப்படுத்தலிலே இந்த நிலை காணப்படுகிறது.

இதில் நியூசிலாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் 11 இலக்குகளைக் கைப்பற்றி ஆட்ட நாயகன் விருதை வென்ற ரங்கன ஹேரத் 828 புள்ளிகளைப் பெற்று தரப்படுத்தலில் தனது சிறப்பான புள்ளிகளைப் பெற்றதோடு 4 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

நியூசிலாந்திற்கெதிரான ஆட்டத்தில் தரன் துடுப்பெடுத்தாடிய ஓர் இன்னிங்ஸில் ஓட்டங்களைப் பெரிதளவில் குவிக்காத குமார் சங்கக்கார புள்ளிகளை இழந்த போதிலும் தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறார்.

தவிர, அந்த ஆட்டத்தில் இலங்கை சார்பாக 91 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன 6 இடங்கள் முன்னேறி 13 ஆவது இடத்திலும், அந்த ஆட்டத்தில் அரைச்சதம் பெற்ற அன்ஜலோ மத்தியூஸ் 28 ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல்:

குமார் சங்கக்கார, ஹசிம் அம்லா, ஜக்ஸ் கலிஸ், மைக்கல் கிளார்க், சந்தர்போல், ஏ.பி.டி.வில்லியர்ஸ், அலஸ்ரெயர் குக், யுனிஸ் கான், அஷார் அலி, கிரேம் ஸ்மித்

**பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தல்:**

ஸ்ரெய்ன், வேர்ணன் பிலாந்தர், சயிட் அஜ்மல், ரங்கன ஹேரத், பிரக்ஜான் ஓஜா, பென் ஹில்பன்ஹாஸ், ஜேம்ஸ் அண்டர்சன், பீற்றர் சிடில், மோர்னி மோர்க்கல், கமர் ரோச் (5)

# இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் மாற வேண்டும்

இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட் தெரிவித்துள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு வழங்கியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரிப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் இலங்கையின் கிரிக்கெட் நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களைப் பிரேரிப்பதற்காக இலங்கைக் கிரிக்கெட் சபையால் பணிக்கமர்த்தப்பட்ட ஹரூன் லோகார்ட், தனது இறுதி அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபை அதிகாரிகள், முன்னாள் அதிகாரிகள், இலங்கையின் வீரர்கள், இலங்கையின் முன்னாள் வீரர்கள், ஊடகவியலாளர்கள், ரசிகர்கள் ஆகியோரிடம் கருத்துக்களைக் கேட்டறிந்த ஹரூன் லோகார்ட், தனது 10 பக்க அறிக்கையைக் கையளித்துள்ளார்.

அவர் வழங்கியுள்ள பிரேரிப்புக்களில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வில் விளையாட்டுத்துறை அமைச்சரின் தலையீடு, இலங்கைக் கிரிக்கெட் சபையின் மோசமான பெயர், இலங்கைக் கிரிக்கெட் சபையின் நெருக்கடியான நிதி நிலை, நிர்வாகத்தில் காணப்படும் தொழில்முறையற்ற நடவடிக்கைகள், வெளிப்படையற்ற தன்மை ஆகியன இல்லாது செய்யப்பட வேண்டும் எனவும், முறையான நிறுவன அடிப்படை போன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹரூன் லோகார்ட்டின் அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, அந்த அறிக்கையிலுள்ள பிரேரிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தான் தனிப்பட்ட முறையில் கருதுவதாகவும், இலங்கையின் விளையாட்டுக் கழகங்கள், ஊடகங்கள், வீரர்கள், இலங்கைக் கிரிக்கெட் சபை ஆகியன இணைந்து இந்தப் பிரேரிப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வொற்சன் வெளியேற்றம்

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய அணியில் ஷேன் வொற்சன் மீண்டும் சேர்க்கப்படவில்லை. இதன் காரணமாக முதலாவது ஆட்டத்தில் பங்குபற்றிய அதே அணியே மீண்டும் இரண்டாவது ஆட்டத்துக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஷேன் வொற்சன் முதலாவது ஆட்டத்தில் பங்குபற்றியிருக்காத நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் தனியே துடுப்பாட்ட வீரராக மாத்திரம் களமிறங்கும் உடற்தகுதியைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், இன்று ஆரம்பமாகவுள்ள ஆட்டத்தில் ஷேன் வொற்சனைச் சேர்ப்பதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆட்டத்தில் பங்குபெறவுள்ள தென்னாபிரிக்க அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் முதலாவது ஆட்டத்தில் பங்குபற்றிய அணியில் 2 மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் அணியில் சேர்க்கப்பட்ட பின்னர் ஆட்டத்தில் பங்குபற்றாமலேயே காயமடைந்த மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ஜே.பி.டுமினி இற்குப் பதிலாக டு பிளெஸிஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று முதலாவது ஆட்டத்தில் தனது அறிமுகத்தை மேற்கொண்ட ரோறி கிளெய்ன்வெல்ட்டிற்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர் சேர்க்கப்பட்டுள்ளார். (5)

**ஆஸ்திரேலியா:**
மைக்கல் கிளார்க், டேவிட் வோனர், எட் கோவன், றிக்கி பொண்டிங், மைக்கல் ஹசி, மத்தியூ வேட், பீற்றர் சிடில், ஜேம்ஸ் பற்றின்சன், பென் ஹில்பன்ஹாஸ், நதன் லயன்.

**தென்னாபிரிக்கா:**
கிரேம் ஸ்மித், அல்விரோ பீற்றர்சன், ஹசிம் அம்லா, ஜக்ஸ் கலிஸ், ஏ.பி.டிவில்லியர்ஸ், ஜக்ஸ் ருடோல்ப், டு பிளெஸிஸ், வேர்னன் பிலாந்தர், மோர்னி மோர்க்கல், ஸ்ரெய்ன், இம்ரான் தாஹிர்.

# இலங்கை அணி அறிவிப்பு




ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை டெஸ்ட் குழாம் இலங்கைத் தேர்வாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. 16 பேர் கொண்ட குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜெயவர்தன தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியில் நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடருக்காக அறிவிக்கப்பட்டிருந்த டெஸ்ட் குழாமில் இடம்பெற்றிருந்த வீரர்களில் 14 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அந்தக் குழாமில் சேர்க்கப்பட்டிருந்த புதுமுக வீரரான தரிந்து கௌஷால் நீக்கப்பட்டு வேகப்பந்து வீச்சாளர் நுவான் பிரதீப் சேர்க்கப்பட்டுள்ளார். அத்தோடு திலகரட்ண டில்ஷானுக்கு மாற்று வீரராக முதலாவது ஆட்டத்துக்குச் சேர்க்கப்பட்ட திமுத் கருணாரத்னவும் இந்தக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேகப்பந்து வீச்சாளர்களாக நுவான் குலசேகர, சானக வெலகெதர, ஷமின்ட எரங்க, தம்மிக்க பிரசாத், நுவான் பிரதீப் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, சுழற்பந்து வீச்சாளர்களாக ரங்கன ஹேரத், சுராஜ் ரந்தீவ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாம் தவிர, லஹிரு திரிமன்ன, திஸர பெரேரா, ஜீவன் மென்டிஸ், அகில தனஞ்சய, அஜந்த மென்டிஸ் ஆகியோர் தற்காலிக வீரர்களாகத் தயார் நிலையில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாம்:

மஹேல ஜெயவர்தன, அன்ஜலோ மத்தியூஸ், திலகரட்ண டில்ஷான், குமார் சங்கக்கார, தரங்க பரணவிதான, திலான் சமரவீர, பிரசன்ன ஜெனவர்தன, ரங்கன ஹேரத், நுவான் குலசேகர, ஷமின்ட எரங்க, சுராஜ் ரந்தீவ், டினேஷ் சந்திமால், சானக வெலகெதர, நுவான் பிரதீப், தம்மிக்க பிரசாத், திமுத் கருணாரத்ன

மாற்று வீரர்கள்:
லஹிருதிரிமன்ன, திஸர பெரேரா, ஜீவன் மென்டிஸ், அகில தனஞ்சய, அஜந்த மென்டிஸ் (a)


**பணிப்பெண் தேவை**

ஓர் வயோதிப குடும்பத்தை நல்ல முறையில் தங்கியிருந்து கவனிப்பதற்கு பணிப்பெண் தேவை.தகுந்த சம்பளம், தங்குமிடவசதி,உணவு வழங்கப்படும்.
தொடர்பு:0716182182 (c/1928)

**நல்லூரில் கணினி திருத்தும் பாடநெறி**
**Computer Repairing Course**

சகல விதமான கணினிகளையும் சுயமாக திருத்துவதற்கு அடிப்படையிலிருந்து பயிற்சியளிக்கப்படும். பாடநெறி முடிவில் 100% தொழில் தகைமைக்கு உத்தரவாதத்துடன் பெறுமதிமிக்க சான்றிதழும் வழங்கப்படும்.
(25690)(9.14)
T.P-0777444225

**யாழ். பல்கலைக் கழகம்**
B.A PART - I
புதிய பிரிவுகள்
ஆரம்பம் டிசம்பர்-1

**யாழ். பல்கலைக் கழகம்**
B.A PART - I
2012 இல்
தோற்று வோருக்கான விரிவுரைகள்
நடை பெறுகின்றன.

**பேராதனை பல்கலைக் கழகம்**
B.A FINAL
2012இல் தோற்றுவோருக்கான
தயார்படுத்தல் விரிவுரைகள்
ஆரம்பம் 24.11.2012 சனி
(25675)

BEACON
-யாழ். நகர்-
(வெலிங்டன் சந்தியடி)


# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் இரத்தினம்



கொக்குவில் மணியர் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் இரத்தினம் நேற்று (21.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - பொன்னம்மா தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - அன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியதின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கச்சியம்மா மற்றும் ஐயாத்துரை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியரத்தினம் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சிவசுந்திரம் (ராஜீ ஸ்ரோர்ஸ் முகாமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகநாதன் ரஞ்சிதமலர், இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியும், அமிர்தலிங்கம் - கலைச்செல்வி (சுவிஸ்), அருட்செல்வன் - யசோதா (நோர்வே), ராஜ்மோகன் - மனுவெலா (சுவிஸ்), சிவபாலன் - அனுஷா (லண்டன்), பாலாம்பிகை, நடன்குமாரன் - சிவாஜினி, சுரேஸ்குமார் - மதிவதனி, கஜபாகு - மேனகா, விஜயகுமார் - கேமலதா (சுவிஸ்), ஜனகன், பிரசன்னா, விஜயாலயன் - துஜீபா, சிவநாதன் - சந்தானரூபி (பிரான்ஸ்), றேணுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரம்மியா, ரித்தியா, மிஷா, சிவானுஷன் - கனிஸ்கா, காருண்யா, அர்ச்சனா, கவிப்பிரியன், காவியன், மிருதி, சுருதி, விபூசனா, சஞ்ஜய், சந்தோஷ், சிவனிஜா, சிவஜெயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் இன்று (22.11.2012) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு. (25692)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.


**30%விசேட விலைக் கழிவு!**

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு உங்கள் இல்லங்களுக்கு எண்ணம் போல வர்ணந்தீட்டி 30%விசேட விலைக்கழிவைப் பெற்றிடுங்கள்
தொடர்புகளுக்கு-0776679564
AXSHAYA CONSTRUCTION,JAFFNA
(Experts in housing) (25676)

**கணக்குப் பதிவாளர் தேவை**

எமது சங்கத்துக்கு கணக்கு பதிவில் அனுபவமுள்ள ஒருவர் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் மேலதிக தகமையாகக் கருதப்படும் இருபாலரும் (ஆண்/ பெண்) விண்ணப்பிக்கலாம்.
நேர்முகத்தேர்வு 24.11.2012 சனிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.என்ற முகவரியில் நடைபெறும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.
குறிப்பு- வயதெல்லை 25 தொடக்கம் 65 வரை
(சி/1920)(9.14) செயலாளர் கா.பாஸ்கரன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org